பக்கங்கள் : பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2034 மார்கழி 25 வெள்ளிக்கிழமை (09-01-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:44

## உடன்படிக்கை, சமாதான முன்னெடுப்புகள் பற்றி

# பிரதம மந்திரி என்ன சொன்னாலும்

# ஜனாதிபதி விட்டபாடாக இல்லை!

## அவருடன் மீண்டும் சமரசப் பேச்சுக்களாம் இணக்கம் காண முடியும் என்றும் அறிவிப்பு

இஸ்லாமாபாத்,ஜனவரி 9

**அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வது தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கும் தனக்குமிடையிலான பேச்சுக்கள் முறிவடைந்துவிடவில்லை எனவும், இம்மாதப் பிற்பகுதியில் மற்றொரு சுற்றுப்பேச்சு ஆரம்பமாகும் எனவும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறுகிறார். உண்மையான ஒரு சமரசத் தீர்வை தாங்கள் காணமுடியும் எனவும் ஜனாதிபதி நம்பிக்கை தெரிவித்திருக் கிறார்.**

இஸ்லாமாபாத்தில் 'சார்க்' உச்சி மாநாட்டில் கலந்துகொண்ட இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அங்கிருந்து நாடுதிரும்புமுன் பி.டி.ஐ. செய்தியாளருக்கு அளித்த பேட்டியிலேயே இவற்றைத் தெரிவித்திருக்கிறார்.

'எமக்கிடையிலான பேச்சுக்கள் முறிவடைந்து விடவில்லை. பேச்சுக்கள் தொடருகின்றன. புத்தாண்டு விடுமுறைகளுக்குப் பின்னர் பேச்சுக்கள் ஆரம்பமாகும். உண்மையான ஒரு சம

(16ஆம் பக்கம் பார்க்க)

## மலக்குழியில் மனித எலும்புக் கூடு கோண்டாவில் பகுதியில் மீட்பு!

யாழ்ப்பாணம்,ஜன.9

கோண்டாவில் பகுதியில் மலக் குழியிலிருந்து நேற்று மனித எலும்புக் கூடு ஒன்று மீட்கப்பட்டது. கோண்டாவில் கிழக்கு சென். செபஸ்தியார் வீதிப் பகுதியில் உள்ள வீடொன்றின் மலக்குழியிலிருந்தே இந்த எலும்புக்கூடு காணப்பட்டது.

மலசல கூடத்தைத் திருத்தியமைப்பதற்காக குழியைத் தோண்டிய போது சுமார் ஒன்றரை அடி ஆழத்தில் மனித எலும்புக்கூடு வெளிப்பட்டது.

இது குறித்து உடனடியாக அப்பகுதி கிராம அலுவலருக்கு அறிவிக்கப்பட்டது. அவர் அவ்விடத்தைச்சென்று பார்வையிட்டதுடன் கோப்பாய் பொலீஸ் நிலையத்துக்கு இதுகுறித்து அறிவித்தார்.

எலும்புக்கூட்டுடன் பெண் அணியும் ஆடை மற்றும் குழந்தை ஒன்றுக்கான ஆடை ஆகியவை உக்கிய நிலையில் (16ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் நிலை குறித்து ஆராய சுதந்திரக் கட்சி விசேட கூட்டம்

இன்றைய அரசியல் நிலை குறித்து சுதந்திரக் கட்சி ஆராயவிருக்கிறது. இதற்கென கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் விசேட கூட்டமொன்று இன்று காலை 10 மணிக்கு கூட்டப்பட்டிருக்கிறது. கட்சியின் செயலாளரான மைத்திரிபால சிறிசேன எம்.பி. இக்கூட்டத்துக்கான அழைப்பை விடுத்திருக்கிறார்.

இன்றைய அரசியல் சூழ்நிலை, சமாதானப் பேச்சு தொடர்பான ஐதேக.வின் நிலைப்பாடு குறித்து இக்கூட்டத்தில் ஆராயப்படும் எனத் தெரிகிறது.

இதற்கிடையே, இன்றைய அரசியல் நிலை குறித்து பொ.ஐ.முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பிரதேச அரசியல் தலைவர்களுக்

(16ஆம் பக்கம் பார்க்க)

## நினைவு நிகழ்வு

1974ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டில் உயிரிழந்தவர்களின் நினைவு நிகழ்வுகள் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். முற்றவெளியில் அமைந்துள்ள நினைவாலயத்தில் இடம்பெறவுள்ளன.

தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ். நல்லூர்க் கோட்டத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்நிகழ்வுகளில் மலரஞ்சலி மற்றும் நினைவுரைகள் இடம்பெறும்.

இதேவேளை - தமிழாராய்ச்சி மாநாட்டின் நினைவாலய புனரமைப்புக்குழுவின் ஏற்பாட்டில் நாளை பிற்பகல் 4 மணிக்கு இந்த நினைவாலயத்தில்நினைவு நிகழ்வுகள் இடம்பெறும். (எ-3-8)

## பல்கலைக்கழக ஊழியர்கள் நேற்றும் வேலைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,ஜன.9

யாழ். பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் நேற்றும் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

பல்கலைக்கழக ஊழியர்களின் நலனுக்குக் குந்தகமாக பல்கலைக் கழகப் பேரவை மேற்கொள்ளும் நடவடிக்கைகளைக் கண்டித்து இந்தப் போராட்டம் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

தமது கோரிக்கைகளுக்கு சாதகமான பதில் கிடைப்பதனை வலியுறுத்தியே நேற்றும் வேலைநிறுத்தம் இடம்பெற்றதாக ஊழியர் சங்கத் தலைவர் சி.தங்கராஜா தெரிவித்தார்.

நேற்றையதினம், மேலும் சில கோரிக்கைகள் அடங்கிய கடிதம் ஒன்றை ஊழியர் சங்கப் பிரதிநிதிகள், பல்கலைக்கழக நிர்வாகத்திடம் கையளித்துள்ளனர். சாதகமான பதில் எதுவும் கிடைக்காதுவிட்டால், அடுத்தடுத்த வாரங்களில் தொடர்ச்சியான வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்படலாம் என்றும் தெரி

(15ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றத்தில் இருந்து ரணிலை பதவி விலகக் கோருகின்றது ஜே.வி.பி.

கொழும்பு,ஜன.9

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியிலிருந்தும், நாடாளுமன்றத்திலிருந்தும் விலகவேண்டும். ஏனெனில், 2001ஆம் ஆண்டு அவர் மக்களுக்கு அளித்த வாக்குறுதிக்கு எதிராகவே செயற்பட்டு வந்துள்ளார்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ.

புரிந்துணர்வு ஒப்பந்தத்திலிருந்து விலகிக் கொள்ளப்போவதாகப் பிரதமர் அறிவித்ததையடுத்து, அது தொடர்பாக ஜே.வி.பியினர் தமது கருத்தைத் தெரிவிக்கும் செய்தியாளர் மாநாடு ஒன்றை நேற்றுக் கொழும்பில் நடத்தினர். அதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே விமல் வீரவன்ஸ மேற்கண்ட

(16ஆம் பக்கம் பார்க்க)

## தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி நேற்று அதிகாரபூர்வ அறிவிப்பு

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கருணாநிதியை அகில இந்திய காங்கிரஸின் மூத்த தலைவரும் சோனியா காந்தியின் தூதருமான மன்மோகன்சிங் நேற்று சந்தித்துப் பேசினார். இதையடுத்து, இரு கட்சிகளும் அதிகாரபூர்வமாக கூட்டணியை அமைத்தன.

24 ஆண்டுகளுக்குப்பின், திராவிட முன்னேற்றக் கழகமும் காங்கிரஸும் கூட்டணி அமைத்துள்ளன.

நேற்று சென்னை வந்த மன்மோகன்சிங்கை தமிழக காங்கிரஸ் நிர்வாகிகளும், தி.மு.க. முன்னாள் மத்திய அமைச்சர் ராஜாவும் வரவேற்றனர்.

பின்னர், தமிழக காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசனுடன் கருணாநிதியை அவரது ஆழ்வார்பேட்டை இல்லத்தில் சந்தித்தார் மன்மோகன் சிங். அவரை தி.மு.க. பொதுச் செயலாளர் ஸ்டாலின், முன்னாள் மத்திய அமைச்சர் டி.ஆர்.பாலு ஆகியோர் வரவேற்று அழைத்துச் சென்றனர்.

பின்னர் அவர்கள் சுமார் ஒரு மணி நேரம் பேச்சு நடத்தினர். இதைத் தொடர்ந்து, அவர்கள் அனைவரும் ஒன்றாக உணவருந்தினர்.

இதன்பின் செய்தியாளர்களிடம் பேசிய சிங் -

தி.மு.க., - காங்கிரஸ் இடையே பரஸ்பர நம்பிக்கையை ஏற்படுத்தவே நான் இங்கு வந்தேன். வந்த இடத்தில், இரு கட்சிகளுக்கும் இடையே கூட்டணி இறுதி செய்யப்பட்டுவிட்

(15ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தளபதிகளை நோர்வே தூதுவர் சந்திப்பு

நோர்வே தூதுவர் ஹன்ஸ் பிரட்ஸ்கர் மற்றும் திருகோணமலை மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹேறட்பர் ஆகியோர் மூதூரில் விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திலக் மற்றும் கட்டளைத் தளபதி பதுமன் ஆகியோரைச் சந்தித்துப் பேசினர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான மூதூர் கிழக்குப் பகுதியில் உள்ள புலிகளின் அரசியல்துறைப் பணிமனையில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

சமாதானத்தைத் தொடர்ந்தும் முன்னெடுக்க பின்பற்ற வேண்டிய நடைமுறை பற்றி இச்சந்திப்பின்

(16ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சித் தேர்தலுக்கான சூழ்நிலை வடக்கு - கிழக்கில் நிலவுகின்றதா?

### தேர்தல் திணைக்களம் விவரம் கோருகிறது

கொழும்பு,ஜன.9

வடக்கு - கிழக்கில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்த உகந்த சூழ்நிலை அப்பிரதேசங்களில் நிலவுகின்றதா என்பது குறித்து ஆராயப்படுகிறது. வடக்கு - கிழக்கிலுள்ள சூழ்நிலையை ஆராய்ந்து அறிவிக்குமாறு தேர்தல் திணைக்களம், பொது நிர்வாக அமைச்சினதும் உள்துறை பாதுகாப்பு அமைச்சினதும் செயலாளர்களிடம் கோரியிருக்கிறது.

வடக்கு - கிழக்கிலுள்ள உள்ளூராட்சிமன்றங்களுக்கு நியமனப்பத்தி

(16ஆம் பக்கம் பார்க்க)




சில விநாடிகளில் நீங்களும் ஸ்பீட் லோனை பெற்றுக்கொள்ளலாம். விபரங்களுக்கு அருகிலுள்ள NSB கிளைக்கு

ஸ்பீட் லோன் | NSB

# கொழும்பு-வவுனியா தனியார் பஸ் சேவை நேற்று முதல் பூரணமாக ஸ்தம்பிதம்!

## புத்தளம் பாதையில் சாரதிகளுக்கு மரண அச்சுறுத்தல்

வவுனியா,ஜன.9

கொழும்புக்கும் வவுனியாவுக்கு மிடையிலான தனியார் பஸ்கள் நேற்று சேவையில் ஈடுபடவில்லை. பஸ் சாரதிகளுக்கு கட்டுனேரிய பகுதியில் மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதே இதற்கான காரணமாகும். பஸ் சேவைகள் ஸ்தம்பித்திருப்பதால் பிரயாணிகள் பெரும் சிரமங்களுக்குள்ளாகியுள்ளனர்.

கொழும்பு - புத்தளம் பாதையிலுள்ள கட்டுனேரியவில் நடந்த தனியார் பஸ்-வான் விபத் தொன்றில் மத குரு ஒருவர் கொல்லப்பட்டதை அடுத்து வவுனியா தனியார் பஸ்கள் தாக்கப்பட்டன. இதனால் கட்டுனேரியாவைத் தவிர்த்து பஸ்கள் வேறு பாதைகளில் பிரயாணத்தை மேற்கொண்டு வந்தன.

ஆயினும், நேற்றுமுன்தினம் வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கி சுமார் 70பயணிகளுடன்வந்த ஒரு தனியார் பஸ் நாத்தாண்டிய, தும்மோதர பகுதியில் வைத்து கல்வீச்சுக்கு இலக்கானது. கல்லால் தாக்கப்பட்ட சாரதி கட்டுப்பாட்டை இழக்கவே அந்த பஸ் ஹெமில்டன் கால்வாயில் கவிழ்ந்து ஆறு பயணிகள்காயமடைந்தனர். பஸ பயணிகளுக்கு உதவச் சென்றோரும அச்சுறுத்தப்பட்டனர். வவுனியா தனியார் பஸ் சங்கத்துக்குச் சொந்தமான 10 பஸ்கள் இதுவரை தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளன. படுகாயமடைந்த மூன்று பயணிகள் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அனுப்பட்டனர் ஏனைய மூவரும் மாரவில வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டனர்.

தனியார் பஸ்கள் மீதான தாக்குதல்கள் தொடருவதால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் வரை கொழும்புக்கும் வவுனியாவுக்குமிடையிலான பஸ் சேவை நடைபெற மாட்டாது என்று கொழும்பு தனியார் பஸ் கட்டுப்பாட்டு நிலையம் அறிவித்துள்ளது.




நேற்று யாழ். பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். அவர்களில் ஒரு பகுதியினரையும், நுழைவாயிலில் வைக்கப்பட்டிருந்த பதாகை ஒன்றையும் படங்களில் காணலாம். *(அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

### சேவை நலன் பாராட்டுவிழா

வலிகாமம் தெற்கு,ஜன.9

ஓய்வுபெற்ற உடுவில் கோட்டக் கல்விப்பணிப்பாளர் அ.தற்பரானந்தவின் சேவைநலன் பாராட்டுவிழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியின பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உடுவில் கல்விக்கோட்ட அதிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இவ்விழாவுக்கு, தற்போதைய உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் தலைமைவகிப்பார்.

இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆ.சிவஞானசுந்தரம் வரவேற்புரையும், மருதனார்மடம் சுந்தர ஆஞ்சநேயர் ஆலய பிரதமசிவாசாரியார். சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக்குருக்கள் ஆசியுரையும் நிகழ்த்துவார்கள்.

வலிகாமம் கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன், யாழ் பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் க.தேவராசா, கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள் சி.செல்லையா (சங்கானை) க.தனபாலசிங்கம் (சண்டிலிப்பாய்) கா.சந்திரபாலன் (தெல்லிப்பழை) சைவப்புலவர் மு.திருஞானசம்பந்த பிள்ளை, செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர். (எ-152)

# உரும்பிராய் பாடசாலை மாணவி கொலை; சந்தேக நபர் நேற்று நீதிமன்றால் விடுவிப்பு!

யாழ்ப்பாணம்,ஜன.9

உரும்பிராய் சந்திரோதய வித்தியாலய மாணவியின் மர்ம மரணம் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர் நேற்று யாழ். நீதிமன்றத்தினால் விடுக்கப்பட்டார்.

2002ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 27ஆம் திகதி உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலைக் கிணற்றில் இருந்து 10 வயதுச் சிறுமியான செல்வராசா துவாரகா சடலமாக மீட்கப்பட்டார். அவர் கொலை செய்யப்பட்டதற்கான தடயங்கள் கிடைத்திருந்தன. இது தொடர்பாக பாடசாலைக் காவலாளி சந்தேகத்தின் பெயரில் கைதுசெய்யப்பட்டு யாழ். நீதிமன்றத்தினால் விளக்க மறியலில வைக்கப்பட்டிருந்தார்.

வழக்கு விசாரணைகள் யாழ். நீதிமன்றத்தில் மேலதிக நீதிவான் ஸ்ரீநிதிநந்த சேகரம் முன்னிலையில் இடம் பெற்றன.

சந்தேக நபர் மீது குற்றம் சுமத்துவதற்கு போதிய சாட்சியங்கள் இதுவரை கிடைக்காத காரணத்தினால் அவரை விடுவிப்பதற்கு மேலதிக நீதிவான் உத்தரவிட்டார்.

சிறுமியின் மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு அதன் அறிக்கையை யாழ். நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறும் பொலீஸாருக்கு மேலதிக நீதிபதி உத்தரவிட்டார். (ம-5)

### சாரதியைத் தாக்கிவிட்டு ஓட்டோ அபகரிப்பு

புத்தளம்,ஜன.9

ஓட்டோ ஒன்றை வாடகைக்கு அமர்த்திச் சென்றவர் இடைநடுவில் சாரதியை மரத்தில் கட்டி வைத்து விட்டு ஓட்டோவை அபகரித்துச் சென்ற சம்பவமொன்று நேற்றுமுன்தினம் புத்தளத்தில் நடந்துள்ளது.

நேற்றுமுன்தினம் கொழும்பிலிருந்து பஸ்ஸில் புத்தளம் வந்து இறங்கிய பெரும்பான்மை இன வாலிபரொருவர் புத்தளம் குருநாகல் வீதியிலுள்ள (40 மைல் அருகில்) கல்லடி என்னுமிடத்திற்குச் செல்ல ஓட்டோ ஒன்றை வாடகைக்கு அமர்த்தியிருக்கிறார்.

கல்லடி நோக்கிச் செல்கையில் இடையில் காட்டுப் பகுதியில் வைத்து ஓட்டோவை நிறுத்துமாறு கூறிய வாலிபர் சாரதியான எம்.டி.பைரூஸ் என்பவரைத் தாக்கினார். பின்னர் சாரதி அணிந்திருந்த சாரத்தை அவிழ்த்து அவரது கண்களைக் கட்டி காட்டுக்குள் அழைத்துச்சென்று மரமொன்றில கட்டிவிட்டு ஓட்டோவை அபகரித்துச் சென்றுள்ளார்.

இச்சம்பவம் குறித்து கேள்வியுற்ற ஏனைய ஓட்டோ சாரதிகள் அவரைத் தேடிச்சென்று கண்டு பிடித்து மீட்டு வந்துள்ளனர். இது பற்றிய புத்தளம் பொலீஸில் புகார் செய்யப்பட்டுள்ளது. இதுவரை ஓட்டோ கண்டு பிடிக்கப்படவில்லை.

# மன்னார் தனியார் பஸ் சங்கத்தினர் நேற்று வீதிகளில் மறியல் போராட்டம்

## பஸ் சேவைகள் பாதிப்பு

மன்னார்,ஜன.9

மன்னார் மாவட்ட தனியார் போக்குவரத்துச் சங்கத்தினர் நேற்றுக்காலை 10 மணிமுதல் மறியல் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர். இதனால், மன்னார் நகரிலிருந்து தனியார் பஸ் சேவைகள் எதுவும் நடைபெறவில்லை. நகரின் மத்தியிலுள்ள சகல பாதைகளிலும் இப்போராட்டம் நடைபெற்றதால் இ.போ.ச.பஸ் சேவைகளும் இடம்பெறவில்லை.

தனியார் பஸ்களுக்கான தனித் தரிப்பிடம் தரப்படாததையும், உள்ளூர் சேவையிலீடுபடும் சிறிய வான்களுக்கு வருடத்துக்கான முழுக் காப்புறுதி எடுக்கப்படவேண்டும் என்ற அரச அதிபரின் உத்தரவையும் ஆட்சேபித்தே இந்தப்போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

தமது சங்கக் கட்டடத்துக்கு மின்சாரம், தண்ணீர், தொலைபேசி வசதிகள் ஏற்படுத்தித் தரப்படவில்லை என்றும் போக்குவரத்துச் சபை பஸ் நிலையமும் தனியார் பஸ் தரிப்பு நிலையமும் அருகருகே இருக்கத்தக்கதாக தற்போதைய பஸ்தரிப்பு நிலையத்தை அகற்றுமாறு அரச அதிபர் உத்தரவிட்டிருக்கிறார் என்றும் தனியார் பஸ் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

போராட்டத்தைத் தொடர்ந்து தனியார் பஸ் சங்கத்தினருக்கும் அரச அதிபருக்கும் இடையில் இருமுறை பேச்சுக்கள் நடைபெற்றன. எனினும், தீர்வு எதுவும் ஏற்படவில்லை. போராட்டத்தினால் இ.போ.சபை பஸ்கள் பஸ் தரிப்பு நிலையத்தில் பயணிகளுடன் நீண்டநேரம் காத்திருந்தன. சிறுவர்கள், வயோதிபர்கள், நோயாளிகள் ஆகியோரின் நலனைக் கருத்தில் கொண்டு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சாலிய சில்வா, பொலிஸ் அதிகாரி ஏ.ஆர்.எம்.சிறில் ஆகியோரின் தலையீட்டால் பிற்பகல் ஒரு மணிக்கு இ.போ.சபை பஸ்களை சேவையில் ஈடுபட இணக்கம் காணப்பட்டது.

### பண்டிகைக்கால முற்பணம் ரூ.3 ஆயிரமாக அதிகரிப்பு

கொழும்பு,ஜன.9

அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படும் பண்டிகைக்கால முற்பணம் இரண்டாயிரம் ரூபாவிலிருந்து மூவாயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

இதற்கான சுற்றறிக்கை பொது நிர்வாக அமைச்சினால் சகல அமைச்சுக்களுக்கும் அனுப்பட்டிருக்கிறது.

இதனைவிட, அரச ஊழியர்கள் காணிகளைக் கொள்வனவு செய்வதற்காக 10 மாத சம்பள முறபணம் வழங்கவும் அரசு தீர்மானித்திருக்கிறது.

# எழுச்சிப் பேரவை நிர்வாகிகள் தமிழ்ச்செல்வனைச் சந்தித்தனர்

அரியாலை,ஜன.9

தேசிய எழுச்சிப் பேரவையின் மாவட்டச் செயலாளர்களை தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பு கடந்த 5ஆம் திகதி கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியற்றுறை நடுவப் பணியகத்தில் இடம்பெற்றது.

இந்த ஆண்டு மேற்கொள்ளப் படவேண்டிய வேலைத்திட்டங்கள் பற்றியும், சமகால அரசியல் நிலைவரம் குறித்தும் இந்தச் சந்திப்பில் பேசப்பட்டதாக கூறப்படுகின்றது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களின் தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர்கள், துறைச் செயலாளர்கள் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்கள் ஆகியோர் இக்கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

தமிழீழ அரசியல் துறையின் துணைபொறுப்பாளர் சோ.தங்கன் மற்றும் தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவையின் இணைப்பாளர் சஞ்சே ஆகியோரும் இந்தச் சந்திப்பின் போது உடனிருந்தனர். (ஒ-17)

# மலசல கூடங்கள் அமைப்பதற்கு சுகாதார அதிகாரியின் ஆலோசனை

## பெறவேண்டுமென சங்கானைப் பிரதேச செயலர் அறிவிப்பு

வலி.மேற்கு,ஜன.9

மலசல கூடங்கள் அமைப்பதற்கு முன்னர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியின் ஆலோசனை பெறப்படவேண்டுமென சங்கானைப் பிரதேச செயலர் சீ.ஏ.மோகனறாஸ் அறிவித்துள்ளார்.

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் தற்போது பெருமளவில் மலசலகூடங்கள் நிறுவப்படுகின்றன. இவை சுற்றாடல், சுகாதாரம் ஆகியவற்றிற்கு தீங்கை ஏற்படுத்தும் வகையில் நிறுவப்படுவதாக மானிப்பாய் சுகாதாரப் பகுதியினர் அண்மையில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் சுட்டிக் காட்டியிருந்தனர்.

இதனைக் கவனத்தில் எடுத்துக் கொண்ட சங்கானைப் பிரதேச செயலர், வலிகாமம் மேற்குப் பகுதியில் புதிதாக மலசல கூடங்களை நிறுவுபவர்கள் அதற்கு முன்னர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியின் ஆலோசனையைப் பெறவேண்டுமென அறிவித்துள்ளார்.

இது ஒரு வழமையான நடைமுறை எனினும் கடந்த காலத்தில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக யாழ். குடாநாட்டில் இந்த நடைமுறை பின்பற்றப் படுவதில்லை. தற்போது குடாநாட்டில ஏற்படும் சுகாதாரச் சீர்கேடுகள் காரணமாக இது மீண்டும் இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (ம-8-175)

# அங்கீகாரம் பெறப்பட்ட மாடுகளே இறைச்சிக்காக வெட்டப்படவேண்டும்

## வலி. தென்மேற்குப் பிரதேசசபைச் செயலர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.9

வலி. தென்மேற்குப் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மாடுகள் இறைச்சிக்காக வெட்டப்படுவதற்கு முன்னர் காளைகள் இளைப்பாறும் இடத்தில் (Cattle Pounding) கட்டப்பட்டு சுகாதாரப் பரிசோதகரின் அங்கீகாரம் பெறப்படவேண்டுமென வலி. தென்மேற்குப்பிரதேச சபையின் செயலாளர் பி.விக்டர் அறிவித்துள்ளார்.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் அங்கீகாரம் பெறாமல் மாடுகளை வெட்டும் இறைச்சிக் கடை உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான ஏற்பாடுகளையும் பிரதேச சபை மேற்கொண்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இறைச்சிக்காக வெட்டப்படும் மாடுகள் 24 மணி நேரத்திற்கு முன்னர் காளைகள் இளைப்பாறும் இடத்தில் கட்டப்படவேண்டும். இவ்வாறு கட்டப்படும் மாடுகளைப் பரிசோதனைக் குட்படுத்திய பின்னரே வெட்டுவதற்கு அனுமதிக்க வேண்டும்.

ஆனால், வலி. தென்மேற்குப்பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மாடுகள் எவ்வித பரிசோதனைக்கும் உட்படுத்தப்படாமல் வெட்டப்படுவதாக நவாலி, ஆனைக்கோட்டை, மானிப்பாய் பகுதிகளின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் வலி. தென் மேற்குப் பிரதேச சபையின் செயலாளரிடம் முறையிட்டிருந்தனர்.

இம்முறைப்பாட்டையடுத்தே பிரதேச சபையின் செயலாளர் மேற்படி அறிவித்தலை விடுத்துள்ளார். (ம-8-185)

# சிவத்தமிழ்ச்செல்வியின் பிறந்தநாள் அறநிதியவிழா

## நாளை கிளிநொச்சியில் நடைபெறும்

வலி.வடக்கு,ஜன.9

சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 79 ஆவது பிறந்தநாள் அறநிதிய விழா நாளை சனிக்கிழமை காலை 10மணிக்கு கிளிநொச்சி மகாவித்தியாலய மண்டபத்தில் கிளிநொச்சி வலயக்கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம் தலைமையில நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், பிரதமவிருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகமும், சிறப்புவிருந்தினர்களாக தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரி ஆசிரியர் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஆசியுரையை மகாதேவா ஆச்சிரமத்தைச் சேர்ந்த தவத்திரு மகாதேவா கணேசானந்த சுவாமிகளும், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய நிர்வாகச் செயலாளர் நா.தவநாதனும் நிகழ்த்துவர்.

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் கல்விகற்று ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்து உயர் கல்வி பெறும் நூறு மாணவர்களுக்கு இந்த நிகழ்வில் வைத்து தலா 750 ரூபா வீதம் பாடசாலை உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன. (எ-86)

## சாவகச்சேரி நகரப் பகுதியில்

# போயா தினத்தில் சாராயம் விற்ற ஒருவர் பொலீஸாரால் கைது!

போயாதினத்தன்று சாராயம் விற்பனை செய்த ஒருவரையும் கசிப்பு விற்பனை செய்த இருவரையும் சாவகச்சேரி பொலீஸார் கைது செய்தனர்.


பொதுமக்கள் கொடுத்த தகவலையடுத்து சாவகச்சேரி நகர்ப்பகுதியில் சாராயம் விற்பனை செய்த நபரைக் கைதுசெய்ததுடன் 10 போத்தல் சாராயத்தினையும் பொலீஸார் கைப்பற்றினர்.

மட்டுவில் பகுதியில் இரு இடங்களில் நடத்திய சோதனையில் சட்டவிரோத கசிப்பு விற்பனை செய்த இருவரையும் கைது செய்துள்ளனர்.

இந்நபர்கள் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவுள்ளதாக பொலீஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி எஸ்.ஏ.எரிக் றோகித தெரிவித்தார். (எ-117)

### விசேட கலந்துரையாடல்

வலி-தெற்கு பொது அமைப்புகளின் ஒன்றியத்தின் விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சுன்னாகம் ப.நோ.கூ.சங்கத்தில் இடம் பெறவுள்ளது. (எ-3)



தமிழகத்தில் நேற்றுமுன்தினம் இந்துக்களின் சமய நிகழ்வான ஆருத்ரா தரிசனத்தை முன்னிட்டு சிதம்பரம் நடராஜர் ஆலயத்தில் கூடிய பக்தர்கள்.

# சிறையிலிருந்து நெடுமாறன் விடுதலை

சென்னை,ஜன.9

'பொடா' சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டிருந்த தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் கடலூர் சிறையில் இருந்து நேற்று விடுதலை ஆனார். விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசியதாகத் தொடரப்பட்ட 'பொடா' வழக்கிலும், இதர வழக்குகளிலும் அவருக்கு உயர் நீதிமன்றம் பிணை அனுமதி அளித்துள்ளதை அடுத்து அவர் விடுதலை செய்யப்பட்டார்.

கடந்த 2002 ஓகஸ்ட் முதல் நாள் கைதான நெடுமாறன், 523 நாள்கள் சிறையில் இருந்துள்ளார். நீண்ட சட்டப் போராட்டத்துக்குப் பிறகு, பல்வேறு தடைகளைத் தாண்டி அவர் விடுதலை ஆனார். 17 மாதச் சிறை வாழ்க்கையில், அவர் திருச்செந்தூர், திண்டுக்கல், பூந்தமல்லி, ஆலந்தூர் நீதிமன்றங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டார். ஒருமுறை அவர் சென்ற வான் விபத்துக்குள்ளானது. காயமின்றித் தப்பினார் நெடுமாறன். பொடா சட்டத்தின்கீழ் தடை செய்யப்பட்ட பட்டியலில் இருந்து விடுதலைப் புலிகள் அமைப்பின் பெயரை நீக்கக் கோரி உச்ச நீதிமன்றத்தில் நெடுமாறன் தொடர்ந்துள்ள வழக்கு விசாரணையில் இருக்கிறது. தமிழர் தேசிய இயக்கம் தடை செய்யப்பட்டதை எதிர்த்தும் வழக்குத் தொடர்ந்திருக்கிறார் அவர்.



# ஈராக்கில் நடந்த தாக்குதலில் 35 அமெ. படையினர் படுகாயம்!

பக்தாத்,ஜன.9

ஈராக்கில் அமெரிக்கப்படையினர் தங்கியிருந்த தளம் ஒன்றைக் குறி வைத்து நடத்தப்பட்ட கடுமையான மோட்டார் தாக்குதலில் 35 அமெரிக்கப் படையினர் படுகாயமடைந்தனர்.

இதனை பக்தாத்திலுள்ள அமெரிக்கப் படைப் பேச்சாளர் தெரிவித்தார்.

காயமடைந்தவர்களில் இருவர் உயிரிழந்தனர் என்று உறுதிசெய்யப் படாத தகவல்கள் கூறின.

நேற்றுமுன்தினம் ஈராக்கிய நேரப்படி மாலை 6.45 மணியளவில் பக்தாத்தில் உள்ள இந்தத் தளம் தாக்கப்பட்டது. ஆறு தடவைகள் இந்தத் தளம் மீது மோட்டார் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. உடனடியாக சுதாகரித்துக் கொண்ட அமெரிக்கப் படையினர் பதில் தாக்குதல் நடத்துவதற்குத் தயாரான போது, அந்த இடத்தில் தொடர்ச்சியாக மோட்டார் குண்டுகள் வீழ்ந்து வெடித்தன. இதன் காரணமாக அதிகளவிலான படையினர் காயமடைந்தனர் என்று அந்தத் தளத்திலிருந்த படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இத்தாக்குதல் குறித்து அமெரிக்கப் படைத் தலைமையகமான பென்ரகன் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

சதாமின் கைதுக்குப் பின்னரும் தாக்குதல்கள் தொடர்வது குறித்து அமெரிக்கா பரிசீலித்து வருவதாக அதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# கைரேகை பதிவு செய்யும் விவகாரம்: பிரேசில் பதிலடி; அமெரிக்கா விசனம்

பிரேசிலியா,ஜன.9

தங்கள் நாட்டுக்கு வரும் பிற நாட்டவர்களை புகைப்படம் பிடிப்பதுடன், அவர்களது விரல் ரேகைகளையும் பதிவுசெய்வது என்ற அமெரிக்காவின் முடிவுக்கு பிரேசில் பதிலடி கொடுத்துள்ளது

தங்கள் நாட்டுக்குள் வரும் அமெரிக்கர்களைப் புகைப்படம் பிடிப்பதுடன் அவர்களின் கைவிரல் ரேகைகளையும் பதிவுசெய்யப்போவதாக பிரேசில் அறிவித்துள்ளது. பிரேசில் அரசு எடுத்த முடிவை அமெரிக்கா கடுமையாக ஆட்சேபித்திருக்கிறது.

பதிலுக்குப் பதில் செய்வதாக நினைத்து, அமெரிக்க அரசின் பாதுகாப்புக்குறித்த ஏற்பாடுகளையே கொச்சைப்படுத்தும் விதத்தில் பிரேசில் நடந்து கொள்கிறது என்று அமெரிக்கா கூறியுள்ளது.

இது தொடர்பாக அமெரிக்கத் தரப்பு அளித்துள்ள விளக்கம் வருமாறு:-

அமெரிக்காவின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் தாக்குதல் நடத்தப்பட்டால் அமெரிக்கர்கள் மட்டுமின்றி பிறநாடுகளைச் சேர்ந்தவர்களும் உயிரிழக்க நேர்கிறது. அவர்களின் உயிர்களுக்கும் பொறுப்பேற்க வேண்டிய நிலையில் இருப்பதால், அமெரிக்கா புதிய பாதுகாப்பு ஏற்பாடுகளை அமுலுக்குக் கொண்டு வந்தது. இதனால், தீவிர வாதிகள் நாட்டுக்குள் நுழைந்த உடனேயே அவர்களை அடையாளங் காண்பது எளிதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புகைப்படம் எடுப்பது விரல் ரேகைகளைப் பதிவு செய்வது ஆகியவற்றை எல்லா நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கும் பொதுவாகவே விதித்திருக்கின்றோம். பிரேசில் நாட்டவர்களுக்கு மட்டும் இது விதிக்கப்படவில்லை.

பிரேசில் நாட்டில் போதிய ஏற்பாடுகளைச் செய்யாமல் எங்களுக்குப் பதிலடி தருவதாக நினைத்துக் கொண்டு, விமான நிலையங்களிலிருந்து அமெரிக்கர்கள் வெளியேறுவதற்கு கூடிய கால தாமதம் ஏற்படுத்தப்படுகிறது. அமெரிக்கர்களுக்கு மட்டும் இந்தப் பாதுகாப்புச் சோதனைகளை பிரேசில் நடத்துகிறது. அமெரிக்கர்களை சிறுமைப்படுத்த வேண்டும் என்ற நோக்கம் தவிர இதற்கு வேறு காரணங்கள் இருப்பதாகத் தெரியவில்லை - என்று அமெரிக்கத் தரப்பில் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அதேநேரம், நேற்று முன்தினம் பிரேசிலியா விமான நிலையத்தில் தரையிறங்கிய அமெரிக்கப் பிரஜைகள் சுமார் எட்டு மணித்தியாலங்களுக்கும் மேலாக காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

அவர்களை ஒவ்வொருவராகப் புகைப்படம் எடுத்து, கைரேகையைப் பதிவு செய்ததன் பின்னரே விமான நிலையத்தில் இருந்து வெளியேறுவதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

இதனால், பிரேசிலுக்கு தமது நாட்டவர்களை தேவையில்லாமல் செல்ல வேண்டாமென அமெரிக்க அரசு கூறியுள்ளது.

## செவ்வாயில் கொலம்பிய நினைவிடம்

வாஷிங்ரன்,ஜன.9

அமெரிக்கா அனுப்பிய 'ஸ்பிரிட்' ஆய்வுக்கலம் செவ்வாய்க் கிரகத்தில் தரையிறங்கிய இடத்துக்கு, கொலம்பியா விண்கலம் வெடித்துச் சிதறியதில் உயிரிழந்த விண்வெளி வீரர்களின் நினைவாகக் கொலம்பிய நினைவிடம் எனப்பெயரிடப்பட்டுள்ளது.

இதனை நாஸா ஆய்வுமையத்தின் தலைவர் சீன் ஓரிகீப் வாஷிங்ரனில் கூறினார்.

சர்வதேச வானியல் அமைப்பு மூலம் இந்த இடத்துக்கு கொலம்பிய நினைவிடம் என முறையாகப் பெயரிடப்படும் எனவும் ஓரிகீப் கூறினார்.

# ஈரானில் இடிபாடுகளிடையேயிருந்து 13 நாள்களின் பின் ஒருவர் மீட்பு!

தெஹ்ரான்.ஜன.9

ஈரானில் பூகம்ப இடிபாடுகளுக்கிடையே இருந்து, 13 நாள்களின் பின்னர் ஒருவர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் 26ஆம் திகதி 'பாம்' நகரைத் தாக்கிய பூகம்பத்தால் தகர்ந்துவீழ்ந்த கட்டட இடிபாடுகளை அகற்றிக்கொண்டிருந்தவர்கள் நேற்றுமுன்தினம் இரவு ஜலீல் (வயது 56) என்ற நபரை மீட்டனர். பலமான மரத்தளபாடம் ஒன்றின் கீழே இந்த நபர் இருந்ததால் உயிர் பிழைத்திருந்தார் என்றும் -

ஆனாலும் 'கோமா' நிலையிலேயே அவர் மீட்கப்பட்டு மருத்துவமனையில அனுமதிக்கப்பட்டார் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

பூகம்பம் தாக்கி 8 நாள்களின் பின்னர் 90 வயதான மூதாட்டி ஒருவர் இடிபாடுகளுக்கிடையே இருந்து கடந்த 3ஆம் திகதி மீட்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# சீனாவில் மேலும் ஒருவருக்கு 'சார்ஸ்'

பெய்ஜிங்,ஜன.9



புனுகுப் பூனை

சீனாவில் மற்றொருவருக்கு 'சார்ஸ்' நோய் ஏற்பட்டிருக்கிறது. அவருக்கு தனியான அறையொன்றில் வைத்து சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது.

கடந்தவாரம் 32 வயதுடைய செய்தியாளர் ஒருவருக்கு 'சார்ஸ்' நோய் ஏற்பட்டிருந்தமை உறுதி செய்யப்பட்டது.

'சார்ஸ்' நோய் பரவக் காரணம் என்று கண்டறியப்பட்ட புனுகுப் பூனைகளை கொல்லும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதன்படி அவற்றைக் கொல்லும் பணி தீவிரமாக நடந்துவருகிறது. சீனர்கள் புனுகுப் பூனை இறைச்சியை விரும்பி உண்பார்கள். இப்போது புனுகுப் பூனை இறைச்சியை உண்பதைத் தவிர்க்கிறார்கள்.

இந்நிலையில், 20 வயதுடைய பெண்ணுக்கு 'சார்ஸ்' நோய் ஏற்பட்டிருக்கிறது. 'சார்ஸ்' நோய்க்குரிய அறிகுறிகளான மூச்சுத்திணறல், காய்ச்சல் என்பனவற்றால் இவர் பாதிக்கப்பட்டிருக்கிறார்.

ஹங்டொங் மாகாண வைத்தியசாலையில் சிகிச்சைபெறச் சென்ற இவரை, மருத்துவர்கள் உடனடியாகத் தனியான அறையில் தங்க வைத்தனர். இந்நோய் தங்களையும் தாக்காத வகையில் உடலில் பாதுகாப்பு கவசங்கள் அணிந்த நிலையிலேயே டாக்டர்கள் இவருக்கு சிகிச்சை அளித்து வருகின்றனர்.

இதேவேளை ஹொங்கொங்கில் பணிபுரிந்துவிட்டுத் தாயகம் திரும்பிய பிலிப்பைன்ஸ் பெண்ணொருவர் 'சார்ஸ்' நோய்க்கான அறிகுறிகளுடன் மணிலா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

# மத்திய அரசிலிருந்து விலகுகிறது பா.ம.க.; தி.மு.க. கூட்டணியில் இணைகிறது?

சென்னை,ஜன.9

இந்திய மத்திய அரசிலிருந்து பாட்டாளி மக்கள் கட்சி விலக உள்ளதாகவும், அந்தக் கட்சி தி.மு.க. கூட்டணியில் இணையும் என்றும் நேற்றுத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த மாதம் வரை பாரதிய ஜனதா கூட்டணியில் இருந்த தி.மு.கவும், ம.தி.மு.கவும் அங்கிருந்து வெளியேறின. இதனைத் தொடர்ந்து தி.மு.க. கூட்டணியில் எந்தெந்தக் கட்சிகளைச் சேர்ப்பது என்பது பற்றி தி.மு.க. தலைவர்கள் ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

பாட்டாளி மக்கள் கட்சி, பாரதிய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் நீடிப்பதாக அந்தக் கட்சி முதலில் அறிவித்தது.

ஆனால், பா.ம.கவுடன் தி.மு.க. பேச்சு நடத்தியது.

தமிழகத்தின் வட மாவட்டங்களில் பா.ம.கவுக்கு வெற்றி வாய்ப்புள்ள 6 தொகுதிகளைத் தருவதாக தி.மு.க. தரப்பில் உறுதி தெரிவிக்கப்பட்டது. உடனே செங்கல்பட்டு, சிதம்பரம், வேலூர், வந்தவாசி, திண்டிவனம், புதுச்சேரி ஆகிய 6 தொகுதிகள் தர வேண்டும் என்று பா.ம.க. தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதனை தி.மு.க. ஏற்றுக்கொண்டுவிட்டதாகக் கூறப்படுகிறது. இந்த உறுதி மொழி மூலம் தி.மு.க. கூட்டணியில் பா.ம.க. இடம் பெறுவது உறுதியாகிவிட்டது.

பா.ம.க. அரசியல் விவகாரக் குழு கூட்டம் எதிர்வரும் 12ஆம் திகதி சென்னையில் நடக்கிறது. அதில் முடிவு அறிவிக்கப்படும் என்று ஏற்கனவே கூறப்பட்டுள்ளது.

அதற்கு முன்னதாக 11ஆம் திகதி ஐதராபாத்தில் பாரதிய ஜனதா கட்சியின் தேசியச் செயற்குழுக் கூட்டம் நடக்க உள்ளது. அந்தக் கூட்டத்தில் அ.தி.மு.கவுடன் கூட்டணி அமைக்க தீர்மானம் நிறைவேற்றப்படும் என்று பா.ஜ.க. தலைவர்கள் கூறிவருகின்றனர்.

அத்தகைய கூட்டணி அறிவிப்பு வெளியாகும் பட்சத்தில் அதையே காரணம் காட்டி, பாரதிய ஜனதா கூட்டணியில் இருந்து பா.ம.க. வெளியேறிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்து விலகுவதைத் தொடர்ந்து மத்திய அமைச்சரவையில் இருந்து பா.ம.க. எம்.பி.க்கள் ஏ.கே. மூர்த்தி, என்.டி. சண்முகம் ஆகிய இருவரும் விலகுவார்கள். பொங்கலுக்குப் பிறகு இவை நடந்தேறும் என்று கூறப்படுகிறது.

## கருணாநிதி – மன்மோகன்சிங் கூட்டணி குறித்துப் பேச்சு

தமிழகத்தில் தி.மு.கவுடன் கூட்டணி அமைப்பது குறித்து காங்கிரஸ் கட்சியின் மேலிடப் பிரதிநிதி மன்மோகன் சிங், தி.மு.க. தலைவர் கருணாநிதியை நேற்று சென்னையில் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

சென்னை வந்த மன்மோகன் சிங்கை விமான நிலையத்தில் தி.மு.க. சார்பில் முன்னாள் மத்திய அமைச்சர் ஏ.ராசா வரவேற்றார்.

விமான நிலையத்திலிருந்து நேராகக் கருணாநிதியின் இல்லத்திற்குச் சென்றார் மன்மோகன் சிங். கருணாநிதியின் இல்லத்தில் தி.மு.க. துணை பொதுச் செயலர் ஸ்டாலின் உட்பட தி.மு.க. பிரமுகர்கள் மன்மோகன் சிங்கை வரவேற்றனர்.

பின்னர் கருணாநிதியுடன் கூட்டணி குறித்து ஆலோசனை நடத்தினார் மன்மோகன்சிங். ஆலோசனையின் போது மன்மோகன்சிங்குடன் தமிழகக் காங்கிரஸ் தலைவர் ஜி.கே. வாசனும் உடனிருந்தார்.

முன்னதாக புதுடில்லியில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி தலைமையில் நேற்றுமுன்தினம் நடந்த காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில், கூட்டணி குறித்து விவாதிக்கப்பட்டது. அதன்படி, தமிழகத்தில் வலுவான கூட்டணிக்கு அடித்தளமிட்டுள்ள தி.மு.கவுடன் பேச்சு நடத்த மன்மோகன் சிங்கை அனுப்புவது என்று முடிவெடுக்கப்பட்டது.

# இஸ்ரேல் ராணுவத்தில் சேர மறுத்த ஐந்து மாணவர்களுக்குச் சிறை

ஜெருசலேம்,ஜன.9

இஸ்ரேல் நாட்டில் மாணவர்களின் பாடசாலைப் படிப்பு முடிந்த பின் அவர்கள் ராணுவத்தில் பணி புரிய வேண்டும். படிப்பு முடிவதற்கு 2 ஆண்டுகளுக்கு முன்பே ராணுவத்தில் சேரச் சம்மதம் தெரிவித்து ஒரு பத்திரத்தில் கையெழுத்திட வேண்டும்.

ஆனால், 5 மாணவர்கள் இஸ்ரேல் ராணுவத்தில் சேர மறுப்புத் தெரிவித்தார்கள். பலஸ்தீனத்தில் ஆக்கிரமிப்பு ராணுவமாக நீடிப்பதால், அந்த ராணுவத்தில் சேர தாங்கள் விரும்பவில்லை என்று 5 மாணவர்களும் கூறினார்கள்.

இதனால், அவர்கள் மீது ஜெருசலேம் நகரில் உள்ள ராணுவ நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கு விசாரணை 3 நீதிபதிகள் முன்பு கடந்த 9 மாதங்களாக நடந்துவந்தது. நேற்றுமுன்தினம் விசாரணை முடிந்து 3 நீதிபதிகளும் தீர்ப்புக் கூறினார்கள். நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில் கூறி இருப்பதாவது:-

ராணுவத்தில் சேர மாட்டோம் என்று மாணவர்கள் கூறி இருப்பது நாட்டுக்கு கெட்ட பெயரை ஏற்படுத்தும். மேலும் நாட்டு ஒற்றுமைக்கும் இது பாதிப்பை உருவாக்கும். உத்தரவுக்குக் கீழ்படியாததற்காக 5 மாணவர்களுக்கும் ஒரு வருடம் சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது.

- இவ்வாறு நீதிபதிகள் தங்களது தீர்ப்பில் கூறியுள்ளார்கள்.

ராணுவத்தில் பணியாற்ற மறுப்பது தொடர்பாக ராணுவ நீதிமன்றத்தில் விதிக்கப்பட்ட முதல் தீர்ப்பு இது என்பது குறிப்பிடத்தக்கது.

## கூறு விலை விற்பனை (Sealed Tender)

**வட பிராந்திய போக்குவரத்துச் சபை -யாழ். சாலை**

வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பேருந்துகளில் கழிக்கப்பட்ட உதிரிப்பாகங்கள் கூறுவிலை விற்பனைக்காக யாழ்.சாலையில் விடப்பட்டுள்ளன.

இப்பொருள்களை கொள்வனவு செய்யவிரும்புவோர் வட பிராந்திய போக்குவரத்துச்சபை தலைமைக் காரியாலயம் பலாலி வீதி, கோண்டாவிலுடன் தொடர்புகொள்ளவும்.

தலைவர் கூறுவிலைச்சபை
வ.பி.போ.சபை,
கோண்டாவில்.

(சி-32683)(32-11-16)

## 19 ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 26 - 11 - 1956



உதிர்வு 09 - 01 - 1985

**அமரர் கந்தையா அருமைச்செல்வன்**
(செல்வம்)

திதி: 10.01.2004

பாசத்தின் வித்தாய் பண்பின் உறைவிடமாய்
பார் போற்றும் உத்தமனாய் வாழ்ந்த எம் ஒளிவிளக்கே!
பல காலம் வாழ்விரென நாமிருக்க பாதியிலே
பிரிந்து சென்றதேனோ?
பாரினில் நாம் பரிதவிக்க காலனவன் கவர்ந்து
விட்டான்
ஆண்டுகள் பல உருண்டோடினாலும்
எம் கண்ணீர் வற்றாது
காலமெல்லாம் உம் நினைவால் வாழ்ந்திடுவோம்
இப்பாரினிலே!

க.பாலச்சந்திரன் (சந்திரன்,சுவிஸ்)
சர்வோதய வீதி,
ஆவரங்கால் மேற்கு, புத்தூர்.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

# சனிக்கிழமை அதிர்ஷ்டம்





**உத்தியோகபூர்வ முடிவுகள்**

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 2289004 இருந்து
2302941 வரை
சீட்டிழுப்பு இல. 1468
திகதி 07.01.2004

## வெற்றி எண்கள்

**14 16 19 20 48**

போனஸ் எண் **04**

## ஜக்பொட் பரிசு

**ரூபா.4,813,000/-** வெல்லப்படவில்லை.

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 4,813,000/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | - | 100,000/- | - |
| 4 | 84 | 10,000/- | 840,000/- |
| 3 | 4,241 | 500/- | 2,120,500/- |
| 2 | 70,534 | 20/- | 1,410,680/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 14ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 86,626 | 10/- | 866,260/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.5,237,440/-

**இந்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்**
**ரூபா.5,481,650/-**

தொடர் இல. 3257677க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுகள் 2004 ஜனவரி 10ம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

2290730-7-07
2289475-5-85
2293173-1-53
2289052-8-68
2301328-1-03

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

PHOENIX O&M

24 மணிநேர பாதையோர உதவி




2956 CC
புத்தம் புதிய
CUSTOM BODY

# CUSTOM CAB

**உங்களுக்குத் தேவையான விதத்தில் பயன்படுத்திக் கொள்ளுங்கள்!**




பல்வகைச் செயற்பாடுகளுக்கான புதிய TATA வாகனத்தைப் பற்றி விசாரியுங்கள். வேகம், சக்தி, எடைகொள்ளல், இடவசதி, ஆகக்கூடிய எரிபொருள் பயன்பாடு அனைத்தையும் கொண்டது. TATA 207 D1 கரடுமுரடான பயன்பாடுகளுக்கென்றே வடிவமைக்கப்பட்டது என்றாலும் கூடுதல் வசதியானது. 5 ஸ்பீட் கியர் பொக்ஸையும், பவர் ஸ்டியரிங்கையும் கொண்ட TATA 207 D1 எந்தவொரு நெடுஞ்சாலையிலும் அதிவேகமாகச் செல்லக்கூடியது.

இன்றே 207 D1 வாகனத்தை ஓட்டிப்பார்த்து விபரங்களைக் கேட்டறியுங்கள். நாடு முழுவதிலும் சேவை நிலையங்கள், 24 மணிநேரப் பாதையோர உதவிகள், வேலைத்தள வசதிகள் ஆகியவை வருடத்தின் 365 நாட்களிலும் TATA வாகனங்களுக்குக் கிடைக்கின்றன. அத்துடன், எமது கண்கவர் குத்தகைக் கடன் வசதிகள் பற்றியும் கேட்டறிந்து உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

**TATA 207 DI**

**விலை ரூபா. 650,000/- +VAT**

TATA

டிசல் அண்ட் மோட்டார் எஞ்ஜினியரிங் லிமிடெட், 65 ஜேதவன வீதி, கொழும்பு 14. தொலைபேசி: 011 2 449797, 011 4 607468, 011 4 607473 தொலைநகல்: 011 2 449080.
அவசர அழைப்பு: சரத் 0777 326784, டில்ஷான் 0777 397242 மின்னஞ்சல்: dimo@dimolanka.com அனுராதபுரம்: 025 2223025. மாத்தறை: 041 2225450-53. குருநாகல்: 037 2228763. கண்டி: 081 2212735.

dimo

Q & E Advertising

யாழ்ப்பாணம்



உதயன்

## தெளிவற்ற அறிவிப்பு

விடுதலைப் புலிகளுடன் இலங்கை அரசு செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கை மற்றும் அமைதித் தீர்வுக்கான சமரச முயற்சி - அதாவது சமாதானப் பேச்சு - ஆகிய இரண்டு விடயங்களிலிருந்தும் தமது பொறுப்பைக் கைகழுவும் விதத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பு வெளியிட்டிருக்கின்றார்.

இந்த இரண்டு விடயங்களும் இனிமேல் ஜனாதிபதியின் பொறுப்பில்தான். அவர் விடயங்கள் தொடர்பாக எதை வேண்டுமானாலும் இனிச் செய்யலாம் என்ற சாரப்படக் கருத்து வெளியிட்டிருக்கின்றார் பிரதமர் ரணில்.

ஒரு வகையில் பார்த்தால் பிரதமரின் இந்த நிலைப்பாட்டை - முடிவை - குறைகூற முடியாது என்பது சரிதான்.

புலிகளுடன் பேசி, உடன்பாடு கண்டு, ஒப்பந்தம் கைச்சாத்திட்டவர் பிரதமரே. ஒப்பந்தத்தில் உள்ள - யுத்தநிறுத்தம் மற்றும் அது தொடர்பான - ஏற்பாடுகளைத் தமது பக்கத்தில் சரிவர நடைமுறைப்படுத்துவதற்கு உரிய அதிகாரம் பிரதமருக்கு இருக்க வேண்டும். இருந்தால்தான் ஒப்பந்த ஏற்பாடுகளை அவரால் நடைமுறைப்படுத்தவும் அதற்கான பொறுப்பை ஏற்கவும் முடியும். தனக்கு அதிகாரமில்லாத விடயத்துக்கு அவர் எவ்வாறு பொறுப்பேற்க முடியும்?

பாதுகாப்பு, உள்துறை உட்பட மூன்று முக்கிய அமைச்சுக்களைத் தன் இஷ்டப்படி பிடுங்கியதன் மூலம், பிரதமர் தரப்பிலிருந்து அதிகாரங்களைப் பறித்தெடுத்துள்ளார் ஜனாதிபதி. எனவே, அதிகாரங்களைப் பறித்து தன்வசம் வைத்துள்ள ஜனாதிபதியே அந்த அதிகாரங்களின் கீழ்வரும் விடயத்துக்கான பொறுப்புக்களையும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று பிரதமர் கூறுவதில் என்ன தப்பு இருக்கமுடியும்? ஆகவே, ஒரு வகையில் பிரதமரின் அறிவிப்பு நியாயமானதே.

இனப்பிரச்சினைக்கு அமைதி முறையில் - சமாதான வழிகளில் - நிலைத்து நீடிக்கக்கூடிய வாய்ப்பான தீர்வு ஒன்றைக் காண்பதில் பெரும்பான்மை இனத்த வருக்கு - பேரினவாதிகளுக்கு - உண்மையான, நேர்மையான அக்கறையில்லை என்பதைத் தமிழர் தரப்பு திரும்பத் திரும்ப சர்வதேச சமூகத்துக்கு எடுத்தியம்பி வந்தது. அதனை நிரூபிக்குமாப்போல இன்றைய இக் கட்டான சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது.

பிரதமரின் தற்போதைய அறிவிப்பைத் தொடர்ந்து ஜனாதிபதி குமாரதுங்க என்ன பதில் நடவடிக்கை எடுக்கப் போகின்றார்? புலிகளின் பிரதிபலிப்பு எப்படி அமையப் போகின்றது? - இவையே தற்போது எழுந்துள்ள கேள்விகள்.

விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து உடனடி பிரதிபலிப்பு ஏதும் வெளிப்படுவதற்கான சாத்தியம் இல்லை என்றே விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

பிரதமரின் தற்போதைய அறிவிப்பில் உள்ள விடயங்கள் ஜனாதிபதி குமாரதுங்கவுக்கும், தென்னிலங்கை மக்களுக்கும் மறைபொருளாக சில அரசியல் செய்திகளை வெளிப்படுத்தி நிற்கின்றன என்பது வாஸ்தவம் தான். ஆனால், விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை - தமிழர் தரப்பைப் பொறுத்தவரை - திட்டவட்டமான நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதாக அந்த அறிவிப்பில் ஏதும் இல்லை என்பதே உண்மை.

பிரதமர் ரணிலும், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனும் ஒப்பமிட்ட அந்த உடன்பாட்டில், அதிலிருந்து ஏதேனும் ஒரு தரப்பு விலகுவதாயின் அது குறித்து அத்தரப்பு 14நாள் முன்னறிவித்தல் கொடுக்க வேண்டும் ஏன்று தெளிவாக வரையறுத்துக் கூறப்பட்டிருக்கின்றது.

இப்போது உடன்பாட்டில் தமக்குள்ள பொறுப்புக்களிலிருந்து தம்மை விடுவித்து, கைகழுவ முயலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க், ஜனாதிபதி குமாரதுங்கவே இனிமேல் புலிகளுடன் பேசி ஒப்பந்தத்தைச் சீர்செய்து, திருத்தி, தாமே ஒப்பமிட்டுத் தொடரட்டும் என்று கூறுகிறாரே தவிர, தாம் ஒப்பந்தப் பொறுப்பிலிருந்து விடுபடுகின்றார் என்பதைத் தெளிவுபடுத்தும் விதத்தில் 14நாள் முன்னறிவிப்பை அவர் தெளிவாக வெளிப்படுத்துவதாக இல்லை.

இப்படி திடமான ஒரு நிலைப்பாட்டை பிரதமர் வெளிப்படுத்தாத நிலையில், புலிகள் தரப்பிலிருந்து புதிதாக - உறுதியான - பிரதிபலிப்பு ஏதும் வெளியாகும் என எதிர்பார்க்கமுடியாது.

சிங்களத் தரப்பில் இடம்பெறும் அதிகாரப் போட்டிக்கான இழுபறியை தமிழர் தரப்பு வேடிக்கையோடும், வேதனையோடும் பார்த்திருக்கலாமே தவிர, வேறொன்றும் செய்யமுடியாது.

சிங்களத் தரப்பிலிருந்து மக்கள் ஆணை பெற்று எவர் வந்தாலும் அவர்களோடு பேசி அமைதித் தீர்வு காணத் தாங்கள் தயார் என்ற புலிகளின் - தமிழர் தரப்பின் - நிலைப்பாடு என்றுமே நிலைத்திருக்கும். அந்த நிலைப்பாட்டோடு அமைதி முயற்சிகளைத் தொடரக் கதவைத் திறந்து வைத்துக்கொண்டு அவர்கள் வழிமேல் விழிவைத்துக் காத்திருப்பார்கள். அதில் சந்தேகம் கொள்ளத்தேவையில்லை.

ஆனால், புரிந்துணர்வு உடன்பாட்டுக்குப் பொறுப்பேற்கும் திட்டவட்டமான தலைமை இதுதான் என்ற தெளிவான வரையறை சிங்களத் தரப்பில் இல்லாத நிலையில், யுத்தநிறுத்த ஏற்பாட்டு விவகாரத்தில் ஒரு சிறிய தீப்பொறி ஏற்பட்டாலும் அதை அணைக்க முடியாமல், முழுதுமே வெந்து தணியும் அவலம் ஏற்படும் ஆபத்து உள்ளது. மீளச் சீர்செய்ய முடியாத பேரவலத்தை அது தந்துவிடும். சிங்களத் தலைமை இது பற்றியேனும் சிந்திப்பது நல்லது.

# கழிவு கொட்டப்படும் இடத்தைச் சுற்றி காக்கைதீவில் பாதுகாப்பு வேலி!

## யாழ். மாநகரசபை நடவடிக்கை

காக்கைதீவில் யாழ். மாநகர சபையினால் கழிவுகள் கொட்டப்படும் இடத்தைச் சுற்றிப் பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்படவுள்ளதுடன் காவலாளிகளும் நியமிக்கப்படவுள்ளதாக மாநகரசபை ஆணையாளர் இ.இராமலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாநகரசபை எல்லைக்குள் தினமும் சேருகின்ற கழிவுகளைக கொட்டுவதற்கென நீண்ட காலத்திற்கு முன்னர் காணியொன்று கொள்வனவு செய்யப்பட்டது. அந்தக் காணியிலேயே தினமும் கழிவுகள் கொட்டப்பட்டு வருகின்றன.

இந்தக் காணிக்குள் உடைந்த பீங்கான் துண்டுகள், சிகை அலங்கரிப்பு நிலையங்களில் சேரும் கழிவுகள், உடைந்த கண்ணாடித்துண்டுகள், வாகனங்களின் பழுதடைந்த உதிரிப்பாகங்கள், தனியார் வைத்தியசாலைகளின் கழிவுகள், இறைச்சிக் கழிவுகள் என்பன ஒழுங்கற்றமுறையில் போடப்பட்டு வருவதால் மாநகரசபை வாகனங்கள் காணியின் பின்பகுதிக்குச் சென்று கழிவுப்பொருள்களைக் கொட்டமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால், வீதிப்போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுவதுடன் சுகாதாரச்சீர்கேடும் நிலவுகிறது. எனவே, கழிவுப்பொருள்களைத் தன்னிச்சையாகக் கொண்டு சென்று கண்டகண்ட இடங்களில் கொட்டுவதைத் தவிர்த்து மாநகரசபையின் பொதுச்சுகாதார பொறியியற் பிரிவினருடன் தொடர்புகொண்டு கழிவுப்பொருள்களைச் சபை வாகனங்கள் மூலமாக அகற்றுவதற்கு மக்கள் முன்வர வேண்டும். இதன்மூலம் அந்த இடம் ஒழுங்காகப் பேணப்படும்.

மாநகரசபையின் அனுமதியின்றிக் கழிவுகளை மேற்படி காணியில் கொட்டுவது தடைசெய்யப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-10)

# லண்டனில் இறந்த கைதடி வாசியின் மரண விசாரணை கொழும்பில்

கொழும்பு,ஜன.9

பிரிட்டனில் உள்ள பூங்கா ஒன்றில் இறந்து கிடந்த ஈழத் தமிழர் ஒருவரது மரணம் குறித்த விசாரணை கொழும்பில் இடம்பெற்றது. சடலத்தின் உடற்கூறுகள் சிலவற்றை இரசாயனப் பகுப்பாய்வுக்கு உட்படுத்த அப்போது உத்தரவிடப்பட்டது.

கைதடியைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா இராசமோகன் (வயது 41) என்பவரின் மரணம் தொடர்பான விசாரணையிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இவர் புலம்பெயர்ந்து பிரிட்டனில் வசித்து வந்தார். கடந்த டிசெம்பர் மாதம் லண்டனில் உள்ள வலன்ரைன் பூங்காவில் இவர் இறந்துகிடந்தார். மர்மமான முறையில் இறந்த இவரது சடலம் பிரிட்டிஷ் பொலீஸாரால் மீட்கப்பட்டு, லண்டன் மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது. அங்கு மரண விசாரணை நடத்தப்பட்டு பின்னர் சடலம் இலங்கைக்கு அனுப்பப்பட்டது. லண்டனில் இடம்பெற்ற மரண விசாரணையின் அறிக்கையில் மேலதிக விசாரணை நடத்தப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இதனையடுத்து, கொழும்பு திடீர் மரண விசாரணை அதிகாரி ஹந்துன் பி.விஜேவர்த்தன மரண விசாரணையை நடத்தினார்.

இறந்தவரின் இளைய சகோதரரான கந்தையா சத்திய சீலன் (வயது 25) அப்போது சாட்சியமளித்தார்.

அவர் தெரிவித்ததாவது:-

இறந்தவர் எனது மூத்த சகோதரர் ஆவார். அவருக்குத் திருமணம் ஆகவில்லை. 14 ஆண்டுகளுக்கு முன்னர் அவர் பிரிட்டனுககுச் சென்றார். அங்கு என்ன வேலை செய்தார் என்று எமக்குத் தெரியாது. கடந்த 10 ஆண்டுகளாக அவர் எமக்குப் பணமும் தங்க நகைகளும் அனுப்பியுள்ளார். கடந்த டிசெம்பர் மாதம் 6ஆம் திகதி அவர் இறந்தது பற்றி அறிந்தோம். இம்மாதம் 4ஆம திகதி அவரது சடலம் எமக்கு அனுப்பிவைக்கப்பட்டது என்று சாட்சி கூறினார். இதனைத் தொடர்ந்து லண்டனில் இருந்து எடுத்து வரப்பட்ட சடலத்தின் உள்உறுப்புகள் சிலவற்றை இரசாயன பகுப்பாய்வுக்கு உட்படுத்துமாறு மரண விசாரணை அதிகாரி உத்தரவிட்டார்.

அடுத்த மாதம் 28ஆம் திகதிக்கு முன் பகுப்பாய்வு அறிக்கையைச் சமர்ப்பிக்கும்படி பணித்த அவர், மரண விசாரணை அறிக்கை வெளியிடுவதை அதுவரை ஒத்திவைத்தார்.(ஒ-ரி)

# பல வசதியீனங்களால் வேலையில் 25வீதத்தை மட்டுமே செய்ய முடிகிறது

## மதுவரித் திணைக்கள அதிகாரி தெரிவிப்பு

தெல்லிப்பழை,ஜன.9

ஆளணிப் பற்றாக்குறை, வாகன வசதிகளின்மை மற்றும் ஆயுதங்களைப் பயன்படுத்தவும் அவற்றைப் பாதுகாப்பதற்கும் போதிய வாய்ப்புகளின்மை போன்ற காரணங்களால் தமது பணிகளில் 25வீதத்தை மாத்திரமே இப்போது செய்யக்கூடிய நிலையிலிருப்பதாக மதுவரித் திணைக்கள மல்லாகம் பொறுப்பதிகாரி நா.கிருபாகரன் தெரிவித்தார்.

"மேற்குறித்த வளங்கள் எமக்கு இல்லாததால் எம்மால் இப்போதைய நிலைமைக்கு உகந்தவாறு அதிகமாகச் செயற்படுவது கடினமாகும். கசிப்புக் காய்ச்சுதல், விற்பனை செய்தல் அனுமதியற்ற மதுபான விற்பனை என்பவற்றைத் தடுக்க முடியாதுள்ளது.

"கசிப்பு காய்ச்சுதல், விற்பனை செய்தல் போன்ற நடவடிக்கைகள் உயர்பாதுகாப்பு வலய முன்னரண்களை அண்டிய மக்கள் நடமாட்டமற்ற பற்றைகள், சேதமடைந்த வீடுகள், பாழடைந்த கிணறுகள் என்பவற்றிலேயே அதிகளவில் நடைபெறுகின்றன.

இவ்விடங்களில் இரவிலேயே இந்த சட்டவிரோத நடவடிக்கைகள் மேற்கொள்கின்றனர். பகலில் இந்த இடங்களை எவரும் கண்டுவிடாதபடி மிதிவெடி அபாய எச்சரிக்கைப் பலகையை களவாடி வந்து தமது கசிப்புக் குகைகளைச்சூழப் போலியாக நட்டுவிடுகின்றனர்.

இது அவர்களுக்கு வாய்ப்பாகி விடுகிறது. இத்தகைய இடங்கள் சிலவற்றைத் தாம் சமீபகாலங்களில் கண்டுபிடித்துள்ளோம் - என்று அவர் தெரிவித்தார்.

கடந்த ஒரு வருடத்திற்குள் மல்லாகம் மதுவரித் திணைக்களப் பிரிவுக்குள் மட்டும் கசிப்பு காய்ச்சுதல், விற்பனை செய்தல், அனுமதிப்பத்திரமின்றி சாராய விற்பனை செய்தல் போன்ற குற்றங்களுக்காக சுமார் 70பேர் வரை பிடிக்கப்பட்டு மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டனர். இவர்களிடமிருந்து சுமார் 5லட்சத்து 30 ஆயிரம் ரூபா வரை அபராதம் பெறப்பட்டுள்ளது. இருவருக்கு கடூழிய சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது. (ம-150)

# அர்ப்பணிப்புடனும் சீரிய சிந்தனையுடனும் செயற்படுபவனே நல்ல கூட்டுறவாளன்

## மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.1

அர்ப்பணிப்புடனும் சீரிய சிந்தனையுடனும் செயற்படுபவனே நல்லதொரு கூட்டுறவாளனாக இருக்கமுடியும்.

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையின் தலைவர் பெ.கனகசபாபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கூட்டுறவுப் பெரியார் அமரர் வீரசிங்கத்தின் 39ஆவது சிரார்த்த தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையை மேம்படுத்தியவர் கூட்டுறவுப் பெரியார் அமரர் வீரசிங்கம் என்று கூறினால் அது மிகையல்ல. அந்தளவிற்கு கூட்டுறவுத் துறையின் மேம்பாட்டுக்குத் தன்னையே அர்ப்பணித்தவர் அவர். அவரின் மூச்சு, சிந்தனை, செயற்பாடு எல்லாம் கூட்டுறவு பற்றியதாகவே இருந்தது.

கூட்டுறவின் மூலம் மக்களின் தேவைகள் மற்றும் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றை நிறைவேற்றினார். கூட்டுறவின் பெருமையை மக்களுக்கு எடுத்துக் கூறி அவர்களையும் கூட்டுறவுத்துறையில் இணைத்தார்.

இன்று கூட்டுறவுத்துறை யாழ். மாவட்டத்தில் வளர்ச்சியடைந்துள்ளதற்கு அமரர் வீரசிங்கமே காரணகர்த்தாவாவார். கூட்டுறவின் தந்தை என்று அழைக்கப்படும் அமரர் வீரசிங்கம் பல துறைகளிலும் ஆர்வம் கொண்டு விளங்கினார். அதேபோன்று இன்றுள்ள கூட்டுறவாளர்களும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் - என்றார். (ம-10-6)

### நாளை

மார்கழி 26
சனிக்கிழமை
(10.01.2004)
திதி: திருதியை
நள்ளிரவு 12.07 வரை.
நட்சத்திரம்: ஆயிலியம்
முன்இரவு 8.36 வரை
சுபநேரம்: 3.33 - 5.03
ராகுகாலம்: 9.33-11.33
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

கடவுளைப் போற்றுங்கள். மனிதனை நேசியுங்கள்.

# புனரமைப்புத் திட்டங்கள் பற்றி ஆராய ஒஸ்ரின் தலைமையில் குழு வருகிறது

யாழ். மாவட்டத்தில் இவ்வருடம் மேற்கொள்ளப்படவுள்ள புனர்வாழ்வு, புனரமைப்பு வேலைத்திட்டங்கள் பற்றி ஆராய்வதற்காக முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தலைமையிலான குழு ஒன்று இன்று யாழ். குடாநாட்டிற்கு வருகிறது.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடன் பிரதமரின ஆலோசகர் எஸ்.சிவானந்தனும் வருகின்றார்.

இவர்கள் யாழ். செயலகத்தில் அரச அதிபர் செ.பத்மநாதனைச் சந்தித்து யாழ். மாவட்டத்தில் இந்த ஆண்டு மேற்கொள்ள வேண்டிய புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.(ம-5)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கல்வயல், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் 819/1, ஆஸ்பத்திரி வீதியை வதிவிடமாகக் கொண்டவரும் சாவகச்சேரி இந்துவின பழைய மாணவரும், யாழ். உயர்நீதிமன்ற முன்னாள் யூரரும், உலக சைவப்பேரவை (இல.கிளை), இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை, தென்மராட்சி ஓய்வூதியர் சங்கம் ஆகியவற்றின் ஆயுட்கால உறுப்பினரும், யாழ். ப.நோ.கூ.சங்க பொதுச்சபை, உபசபை உறுப்பினரும், நல்லூர் பஜனைக்குழு உறுப்பினரும், ஓய்வுபெற்ற கால்நடை போதனாசிரியருமான

### திரு.ஆர்.வீ.கந்தசாமி

அவர்கள் 22.12.2003 இல் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டதையிட்டு அவரை அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம். அன்னாரின் சமய. சமூகப்பணிகள் மேன்மேலும் சிறப்புற இறைஆசி வேண்டி வாழ்த்துகின்றோம்.

மூர்வீதி, மன்னார். (26937)(34-21-14-19) பிரான்சிஸ் - றெயினோட் மாக் குடும்பம்.

## அஞ்சலி



### ஜோன் றொபேட் அல்பேட் (உடுவில்)

(ஓய்வுபெற்ற அதிபர்)

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்.**

உங்கள் நினைவோடு:
பேரப்பிள்ளைகள்.
(சி32644)(23)

## உளம் நெக்குருகும் 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
04 - 06 - 1922



மறைவு
10 - 12 - 2003

அமரர்

### தில்லையம்பலம் நாகரத்தினம்

*பொன் பதித்த பூவுடல் பொசுங்கிப் போக*
*புன் முறுவல் தவழும் முகம் மறைந்துபோக*
*அன்பொழுகும் அருள்வார்த்தை அகன்றுபோக*
*அனுதினமும் எம் இல்லில் ஒளி சிந்திய*
*அகல் விளக்கு அணைந்ததுவே!*
*ஆண்டொன்று முடியுமுன்னே நின்*
*அருந் துணையைத் தேடிச் சென்றீரோ....?*

இன்று (09-01-2004) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

துவாளி வீதி,
இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி. (26938) (26-14-19-21)

## யாழ் நகரில் ASIAN COMPUTERS வழங்கும் இலவச

# புதுமை கருத்தரங்கு

இந்தியாவிலிருந்து வருகை தரும்
பிரபல விரிவுரையாளர்

வெற்றியை இலக்காக கொண்டு அடுத்த கட்ட முன்னேற்றத்திற்காக காத்திருக்கும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அனுமதி இலவசம்!

O/L, A/L மாணவர்கள், பல்கலைக்கழக உயர்கல்வி மாணவர்கள்
கணனி மற்றும் தொழில்சார் பயிற்சி பெறும் இளைஞர் யுவதிகள்
மற்றும் அனைவரும் இக்கருத்தரங்களில் பங்குபற்றி பயனடையலாம்.

- யாழ் நகரில் 10-01-2004 சனிக்கிழமை
- சுன்னாகத்தில் 10-01-2004 சனிக்கிழமை
- நெல்லியடியில் 11-01-2004 ஞாயிற்றுக்கிழமை

முற்றிலும் வித்தியாசமான ஒரு கருத்தரங்கு

இக்கருத்தரங்கில் பங்குபற்ற விரும்புபவர்கள் கீழ்குறிப்பிட்ட எமது பயிற்சி நிலையங்களில் நேர விபரங்களையும். இலவச அனுமதிகளையும் முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

## ASIAN COMPUTER SYSTEMS

| | | |
|---|---|---|
| இல :2 G,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ✆ 021-222 5677 | PRASHANNAA COMPUTERS STUDY CENTRE 108,K.K.S. வீதி, சுன்னாகம். ✆ 071-2501589 | கொடிகாமம் வீதி, நெல்லியடி. (கரவெட்டி தபாலகத்துக்கு முன்பாக) ✆ 0777-878160 |

## கண்ணீர் அஞ்சலி



08.01.2004 வியாழக்கிழமை
கொடிகாம வீதி,
நெல்லியடியில் காலமான

### சுவாம்பிள்ளை மைக்கல்பிள்ளை

(ஓய்வுபெற்ற சுகாதார நீர் வழங்கல் பகுதி)

அவர்கள் மறைந்த செய்திகேட்டு ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அன்னாரின குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ச.அன்ரன் செல்வராசா குடும்பத்தினர்.

மெடேன் ஸ்ரோர்ஸ், நெல்லியடி. (26947)(34-21-19-14)

## மரண அறிவித்தல்கள்

### சுவாம்பிள்ளை மைக்கல்

(ஓய்வுபெற்ற ஊழியர், சுகாதார நீர்வழங்கல் பகுதி)

நெல்லியடியைச் சேர்ந்த சுவாம்பிள்ளை மைக்கல் நேற்றுக்காலை 08.01.2004 காலமானார்.

அன்னார் சுவாம்பிள்ளை - றோசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் மேரிப்பிள்ளையின் அன்புக் கணவரும் மைக்கல், வசந்தி (மாவீரர் சோதியா, மேஜர் சோதியா), வசந்தன் (டென்மார்க்), காலஞ்சென்ற றூபன ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி வசந்தன் ராணியின் அன்பு மாமனாரும் கற்திலீன், கெவின் ஆகியோரின் பாசமிகு பேரனும் திருமதி நீ.பிரான்சிஸ்காவின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (09.01.2004) வெள்ளிக்கிழமை மாலை மூன்று மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு சென்மேரிஸ் கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மி.வசந்தன (மகன்).

*கொடிகாமம் வீதி, நெல்லியடி,*
*கரவெட்டி.* (26946)(34-21-14-19)

### சவிரிமுத்து அந்தோனிப்பிள்ளை நீக்கிளாஸ்

**(Ex.Sales Rep., Maharaja Organization)**

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் இல.78, கோவில் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகக் கொண்டவரும் நாரந்தனை புனித சம்பேதுரு சம்பாவிலு ஆலயத்தின் முன்னாள் நிர்வாக செயலாளருமான சவிரிமுத்து அந்தோனிப்பிள்ளை நீக்கிளாஸ் 03.01.2004 சனிக்கிழமை அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற சவிரிமுத்து இக்னேசியாப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற மேரி யோசேப்பினின் (இராசாத்தி) அன்புக் கணவரும் காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் பிரான்சிஸ்கா (முத்தம்மா இளைப்பாறிய அதிபர்), காலஞ்சென்றவர்களான றெபேக்கா - (இராசம்மா), சோசவ் (இளைப்பாறிய அதிபர்), மேரி யோசேப்பின் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஜோதிராஜன் (லண்டன்), புவிராஜன் (லண்டன்), தனராஜன் (ஆஸ்திரேலியா), ராஜினி (லண்டன்), யோகினி (பிரான்ஸ்), பிரேமினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் மொன்றிசா (தேவி, இளைப்பாறிய ஆசிரியை, லண்டன்), ரஹூஸ் (ஈரான்), ரதி (இளைப்பாறிய ஆசிரியை, ஆஸ்திரேலியா), கிரேசியன் (லண்டன்), சாள்ஸ் (பிரான்ஸ்), சுரேன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் றொஜஸ், சிந்துஜா, செகான், ஜெனி, லூட்ஸ், ஆன், ஸ்ரெவ்னி, சந்திரின், டியர், ஏஞ்சலின், மஹி, அனுஷா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் நாளை (10.01.2004) சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். சுண்டிக்குளி புனித யுவானியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, நாரந்தனை றோ.க. சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றனர்.

முகவரி:
*இல.78, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.*
*T.P.:021-222 5449.*

தகவல்:
பிள்ளைகள்.
(26951)(34-21-19-14)

## இன்று முதல் நெல்லியடியில் ASIAN COMPUTERS

தனது வடமாராட்சி கிளையை
காலை 9.00 மணி சுபநேரத்தில் ஆரம்பித்து வைக்கின்றது.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

## Direct Start 2004

O/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் கணனி கல்வியில் ஆர்வமுள்ளவர்களுக்கான புதிய டிப்ளோமா பிரிவுகள் ஆரம்பம்



*Quality Education Create Future*

அறிமுக கட்டணச் சலுகை 2,900/- மட்டுமே

- Diploma in MS Office
- Diploma in Web Design
- Diploma in Computer Programming
- Diploma in Desktop Publishing
- Diploma in Computer Studies

## ASIAN COMPUTER SYSTEMS

கொடிகாமம் வீதி, நெல்லியடி. (கரவெட்டி தபாலகத்துக்கு முன்பாக)
Tel : 0777-878160

# நாவலர் கட்டிக்காத்த சைவம் யாழ்ப்பாணத்தில் நிலைத்து இன்றும் வேரூன்றி வளர்ந்துள்ளது

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் கட்டிக் காத்த சைவம் யாழ்ப்பாணத்தில் நிலைத்து இன்றும் வேரூன்றி வளர்ந்துள்ளது. சைவத்தின் மேம்பட்ட நிலையும், அதன் வளர்ச்சியும் எனது உள்ளத்தில் எல்லையற்ற மகிழ்ச்சியையும், உத்வேகம் கலந்த உற்சாகத்தையும் அளிக்கின்றது.

- இவ்வாறு தெரிவித்தார் தருமபுரம் ஆதீனம் டாக்டர் குமாரசுவாமித் தம்பிரான்.

சுவாமிகள் அளித்த செவ்வியின் முழுவிவரமும் வருமாறு:-

*கேள்வி:-* சுவாமிகளே! உங்கள் தருமபுரம் ஆதீனம் பற்றிச் சுருக்கமாகக் கூறுங்கள். அதன் மகிமை என்ன? செயற்பாடுகள் எவை?

*பதில்:-* எமது தருமபுரம் ஆதீனம் 27தேவஸ்தானங்களைக் கொண்டு விளங்குகின்றது. சைவத்துக்கும், தமிழுக்கும் அருந்தொண்டாற்றி வருகின்ற எமது ஆதீனம், தருமை ஆதீன அறிவியல் கலைக்கல்லூரி, ஐந்து குருஞானசம்பந்தர் மெற்றிக்குலேசன் ஸ்கூல், குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளி, தேவாரப் பாடசாலை, வேதசிவாகமப் பாடசாலை என்பனவற்றை நிறுவி சேவையாற்றி வருகின்றது. அது மாத்திரமின்றி சைவசித்தாந்தம் பற்றி விளக்குவதற்காக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றையும், சமுதாயப் பணிக்காக குருஞானசம்பந்தர் பணிமன்றம், குருஞானசம்பந்தர் மிஷன் ஒன்றையும் நாம் நடத்தி வருகின்றோம்.

இதுதவிர, தருமையாதீன சமயப் பிரசார நிலையம் ஒன்று சென்னையிலும் இயங்கிவருகின்றது.

மயிலாடுதுறையிலும் தருமபுரத்திலும் மருத்துவமனை நிறுவி மருத்துவ சேவையும், காசநோயாளருக்காக செங்கிப்பட்டியில் ஓர் ஆஸ்பத்திரியும் உருவாக்கி சேவையாற்றி வருகின்றோம்.

*கேள்வி:-* உங்களுடைய ஆதீன குரு முதல்வர் யார்?

*பதில்:-* எமது ஆதீனம் ஆரம்

**செவ்வி கண்டவர்:**
**இராசையா ஸ்ரீதரன்**

பித்த நாள் முதலாக இன்று வரை 25குருசுவாமிகள் இருந்துள்ளார்கள். இதனை ஸ்தாபித்தவர் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் ஆவார். இப்போது இருப்பவர் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள். இவர் இருபத்தாறாவது குருமகா சந்நிதானம். இவருக்கு உறுதுணையாக பல தம்பிரான் ஸ்வாமிகள் தேவஸ்தானங்களிலிருந்து பணியாற்றுகின்றோம்.

*கேள்வி:-* நீங்கள் எப்போது சந்நியாசம் பெற்றீர்கள்?

*பதில்:-* அடியேன் 1988இல் காஷாயம் தரித்து சந்நியாசம் பெற்றேன். இந்தியாவிலுள்ள 275 பாடல் பெற்ற ஸ்தலங்களுக்கும் சென்று யாத்திரையாகி 1997இல் கைலாசத்



துக்கும், 1999இல் அமர்நாத்துக்கும் சென்றேன். திருப்பனந்தாள் காசிவாசி சுவாமிநாத சுவாமிகள் கலைக

***இந்தியா - தருமபுரம் ஆதீனம்***
***டாக்டர் குமாரசுவாமித் தம்பிரான்***
***சுவாமிகள் செவ்வி***

கல்லூரியில் பேராசிரியராகவும் பணிபுரிந்துள்ளேன். 'குமரகுருபரர்' என்ற பத்திரிகைக்கு 14வருடங்கள் ஆசிரியராக இருந்தேன்.

*கேள்வி:-* தருமபுர ஆதீனம் செய்கின்ற திருப்பணிகள் எந்த எந்த ஆலயங்களில்....?

*பதில்:-* தருமபுர ஆதீனத்தின்கீழ் இயங்கும் வைத்தீஸ்வரன் கோயில், சீர்காழி, திருக்கடவூர், திருநள்ளாறு, திருப்புவனம், திருச்சி உச்சிப் பிள்ளையார் மௌனமடம் என்பன குறிப்பிடத்தக்கவை. இந்த ஆலயங்கள் வாயிலாக பல பணிகள் நடைபெறுகின்றன. திருக்கைலாய பரம்பரையில் 600 வருடங்களாகப் பாரம்பரியமாக உபதேசிக்கப்பட்டு இன்று வரை புகழ்பெற்று விளங்குகிறது இந்த தருமபுர ஆதீனம்.

*கேள்வி:-* சைவர்களின் தற்போதைய வாழ்க்கை நிலை பற்றி...?

*பதில்:-* ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெருஞ் சோதியாக விளங்குகின்ற சிவபெருமானை முழு முதற் கடவுளாக வழிபடுவது சைவ சமயம். சைவத்தின் மேல் சமயம் வேறில்லை. இன்றைய கால கட்டத்தில் சைவர்கள் என்று சொல்லிக் கொண்டு அதிகமானோர் அசைவர்களாகவே வாழ்கின்றார்கள். இது மிகவும் கவலைக்குரியது. சுடுகாட்டுகுப் போய்விட்டு வந்தாலே ஸ்நானஞ் செய்துதான் வீட்டுக்குள்ளே வருகின்றோம். அப்படியிருக்க, இறந்த மிருகங்களை வயிற்றில் சுமந்து கொண்டு வீட்டுக்குள்ளேயே உலாவி வருபவர்களை என்னென்பது?

பசுவும், சேவலும் தெய்வாம்சம் பொருந்தியவை. அவற்றை உண்பது மகாபாவம்.

*கேள்வி:-* தைரியத்துக்கு மாமிசம் உண்கின்றோம். என்கின்றார்களே, இவர்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?

*பதில்:-* நல்ல கேள்வி கேட்டீர்கள். புஷ்டி மாமிசத்தில்தான் இருக்கிறது என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. யானையைப் பாருங்கள் அது மாமிசமே உண்பதில்லை. எவ்வளவு பாரத்தையும் இலகுவாகத் தூக்கிப் பறிக்கிறது. மானைப் பாருங்கள். அது எவ்வளவு வேகமாக ஓடுகின்றது. அது மாமிசமா உண்கிறது. போலிக் காரணங்களைச் சொல்லிக் கொண்டு சைவசமயத்துக்கே இழுக்கைத் தேடுவதுதான் இவர்கள் செயல். "கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிருந் தொழும்" என்பது தெய்வப்புலவர் வள்ளுவர் திருவாக்கு.

*கேள்வி:-* சுவாமிகளே! இன்று கல்விகற்கும் மாணவர்களில் அதிகமானோர் திருநீறு பூசத் தயங்குகின்றார்களே! இவர்களுக்கு நீங்கள் கூறும் அறிவுரை என்ன?

*பதில்:-* பாவங்களை நீறாக்குவது திருநீறு. நோய் தீர்க்கும் அருமருந்து திருநீறு. சார்ள்ஸ் நோயும், எய்ட்ஸ் நோயும் பரவி வருகின்ற இன்றைய காலகட்டத்தில் திருநீறு என்ற மேலான செல்வம் பற்றிச் சிறிது சிந்திக்க வேண்டும்.

சைவம் வளர்த்த நாயன்மார்கள் திருநீற்றைக் கொண்டுதான் நோய்களை நீக்கியுள்ளார்கள். சம்பந்தர், அப்பர் வாழ்க்கை வரலாற்றை நோக்குமிடத்து இதன் மகிமையை நாம் அறியலாம். சாம்பல்பூத்த திருமேனியுடன் வந்த வண்ணானைக் கண்டு சேரனே அடிபணிந்தான் என்றால் இதன் பெருமை பற்றிச் சொல்லவும் வேண்டுமா? உண்மையான நம்பிக்கையுடன் திருநீற்றை அணிந்து வந்தால் சார்ள்ஸூம், எய்ட்ஸூம் கிட்டவே வராது.

*கேள்வி:-* ஆலயத் திருவிழாக்களின்போது அடியார்கள் பண்ணிசையை விரும்பாமல் மெல்லிசையை விரும்புகின்றார்களே! இதுபற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?

*பதில்:-* தேவாரங்கள் பண்ணோடுதான் பாடப்படவேண்டும். அந்தந்தத் தேவாரத்துக்குரிய பண்களோடு பாடினால்தான் கேட்பதற்கு இனிமையாக இருக்கும். எல்லாமாக 103 பண்கள் இருக்கின்றன. இப்போது 24பண்கள்தான் புழக்கத்திலிருக்கின்றன. பண்ணிசையை முறையாகப் பாடினால் அதைப்போல இசை வேறில்லையென்றே சொல்லலாம். பண்குறிப்பிடப்படாத திருமுறைகளை எப்படியும் பாடலாம். இப்போது ஆனந்த பைரவிதான் நிறைந்து விளங்குகிறது. "தம்மையே புகழ்ந்திச்சை பேசினும் சார்வினுந் தொண்டர் தருகிலாப் பொய்மையாளரைப் பாடாதே எந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்" என்பது தேவாரம். ஆகவே, பண் நெறிமுறை தவறாது பாடுவதே சிறந்தது. தேவாரத் திருப்பதிகங்களை மக்களைக் கவரக் கூடிய முறையில் ஓதுவது ஓதுவார் மூர்த்திகளின் திறமையிலிருக்கிறது. இசைக்கு மயங்காதவர் யாருமே இல்லை.

*கேள்வி:-* நாதஸ்வர வித்துவான்கள் கூட ஆலயவிழாக்களில் சினிமாப் பாடல்களை வாசித்து வருகின்றார்கள். இதைப்பற்றித் தங்கள் கருத்து என்ன?

*பதில்:-* சுவாமி எழுந்தருளும் போது மல்லாரி வாசிக்க வேண்டும். திருஞானசம்பந்தர் பாடிய முதற் பதிகம் "தோடுடைய செவியன்" என்ற தேவாரம் நாட்டை ராகத்தில் நட்டபாடைப் பண்ணில் அழகாக வாசிக்கக் கூடியது. அசல், மல்லாரி போன்றே இருக்கும் சுவாமி திருவீதியுலா வரும்போது கீர்த்தனைகள்தான் வாசிக்க வேண்டும். ஈசானத்தில் தேவாரம் பாடி முடிந்த பிற்பாடு

## ஞானக்கதிர்

வேண்டுமானால் சில்லறை ஊதலாம். அதுவும் பக்திப் பாடலாகத்தான் இருக்க வேண்டும்.

சினிமாப் பாடலிலும் சில நல்ல பாடல்கள் இருக்கத்தான் செய்கின்றன. உதாரணமாக, "மந்திர மாவது நீறு" என்ற தேவாரம்தான் "சிங்கார வேலனே தேவா" என்று நாதஸ்வரத்தில் வாசிக்கப்படுகிறது. ஆகவே, எல்லாப் பாடல்களும் கூடாது என்று ஒதுக்கிவிடவும் முடியாது.

நாம் ஆலயத்துக்கு வருவதே ஆன்மஈடேற்றம் பெறுவதற்காக. அப்படியிருக்க சினிமாப்பாட்டு காதில் விழுந்தால் நாம் வேறு சிந்தனைக்கு மாற்றப்பட்டு விடுவோம். கூடிய வரை சினிமாப்பாட்டு தவிர்க்கப் படவேண்டியதே.

திருமண வைபவங்கள் மற்றும் விழாக்களின்போது சினிமாப்பாட்டு தாராளமாக வாசிக்கட்டுமே! யார் வேண்டாம் என்றார்கள்?

*கேள்வி:-* ஆலயத்துக்குப் போகும்போது, இப்படித்தான் போகவேண்டும் என்று ஒரு வரன்முறையை நம்முன்னோர் ஏற்படுத்திச் சென்றிருக்கிறார்கள். அது இப்போது கைக்கொள்ளப்படாதது ஏன்?

*பதில்:-* நல்ல கேள்வி. இப்போது நாகரிகம் வளர்ந்து விட்டது. ஆலயத்துக்கு வரும்போது சைவ ஆசாரப்படிதான் வரவேண்டும். ஏனெனில், ஆன்மாலயப்படும் இடம் ஆலயம். இங்கே வீண் வார்த்தைகள் பேசக்கூடாது.

*கேள்வி:-* எமது சைவசமயத்தின் தற்போதைய நிலைபற்றி தங்கள் கருத்து என்ன?

*பதில்:-* இன்றைய காலகட்டத்தில் மக்களின் தேவை அதிகரித்து விட்டது. அதனால், மத சம்பிரதாயங்கள் பின்பற்றப்படுவது குறைந்து விட்டது. எனினும், கட்டுப்பாடு இருக்கத்தான் வேண்டும். பிற சமயங்களில் இருப்பதுபோன்று கட்டுப்பாடு இல்லாததாலேயே நமது சமயம் இப்படி ஆகிவிட்டது. இனிமேலாவது, இளஞ்சந்ததியினர் பொருட்டாவது சமயக் கட்டுப்பாடுகள் பேணப்பட்டால்தான் சைவம் மேலோங்கி வளரும். நாமும் சைவர்களாக வாழ முடியும்.

*கேள்வி:-* கோயில்கள் கட்டிக் கும்பாபிஷேகம் செய்கின்றார்களே! இதுபற்றி.......?

*பதில்:-* பலகோயில்கள் கட்டப்படுகின்றன. ஆனால், அது நாளடைவில் பராமரிப்போர் இல்லாமல் தூர்ந்து போய் விடுகின்றன. கோயில கட்டினால் மாத்திரம் போதாது. பூசை, வழிபாடுகள் கிரமமாக நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டும். சைவப்பாரம்பரியம் பேணப்பட வேண்டும். உண்மையான சைவ முறைகள் அற்றுப்போகாமல் நாம் தான் காப்பாற்ற வேண்டும்.

*கேள்வி:-* யாழ்ப்பாண மக்களுக்கு நீங்கள் கூறும் அறிவுரை என்ன?

*பதில்:-* இங்கு நான் வரும்போது வழி நெடுக வீடுகள் எல்லாம் உடைந்து நொறுங்கிய நிலையில் காணப்பட்டன. இது மிகுந்த வேதனையைத் தருகிறது. இங்கு வாழும் மக்கள் எல்லோரும் மகிழ்ச்சியாக இருக்கின்றார்கள் என்று சொல்ல முடியாது. திரும்பிய பக்கமெல்லாம் உடைந்த வீடுகள் கண்களை உறுத்துகின்றன. ஆகவே, மக்கள் நிரந்தர சமாதானம் ஏற்பட்டு சுபிட்சமாக வாழ எல்லோரும் என ஒன்று சேர்ந்து இறைபிரார்த்தனை செய்ய வேண்டும். "சேரவாரும் செகத்தீரே!" என்று அழைத்து, கூட்டாகச் சேர்ந்து பிரார்த்தனை செய்யவேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்.

எவ்வளவுதான் துன்பங்கள், துயரங்கள் வந்தாலும் கடவுள் நம்பிக்கையோடு கைதொழுது பண்டைய பாரம்பரியங்களை இப்போதும் பேணிக் காத்து வருகின்ற யாழ்.மக்கள் 'இடுக்கண் வருங்கால் நகுக' என்பதற்கிணங்க துன்பத்துக்குள்ளும் இன்பங் காண்கின்றார்கள் என்று கூறினால் மிகையாகாது.

- இனிமேலாவது, யாழ்ப்பாண மக்கள் சந்தோஷமாக வாழ வேண்டுமென்று என் குருநாதரைப் பணிந்து, திருவையாறு ஸ்ரீபஞ்சநதீஸ்வர சுவாமிகளையும் வேண்டிப் பிரார்த்தித்து அமைகிறேன் - என்றார். ★

# சாகித்திய ஞானத்தால் எல்லோரையும் கவர்ந்தவர்

***மஹாவித்துவான் பிரம்மஸ்ரீ வீரமணி ஐயரின் இரங்கல் கூட்டமும், திருவுருவப்படத் திறப்பு விழாவும் இன்று நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெறுகின்றன. இதனை முன்னிட்டு இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.***

"நம்மிடையே வாழ்ந்து சமீபத்தில நம்மைவிட்டுப்பிரிந்த இணுவில் வீரமணி ஐயா ஒரு மகா மேதை. இசைத துறையிலும், பரதத்துறையிலும் அவரின சாதனைகள் இமயவரம்பைத் தொட்டவை.



தமிழ் நாட்டிலே பாபநாசம் சிவன ஐயாவைப் போன்று ஈழமணித் திருநாட்டில் பிறந்து தமிழ் கூறும் நல்லுலகெங்கும் தனது புகழ்க் கொடியை நாட்டியவர் இவர். இன்று, இசைத், துறையிலும், நடனத்துறையிலும் இவரின் முத்திரைகள் எவராலும் நினைத்துப்பார்க்க முடியாதவை.

மயிலாப்பூர் கபாலீஸ்வரரின் அம்பாளான கற்பகவல்லி மீது அவர் ஆக்கிய 'கற்பகவல்லி நின் பொற் பதங்கள் பிடித்தேன...' என்ற கீர்த்தனை அவருக்கு பெரும்புகழைத் தேடித் தந்தது. அந்தக் கீர்த்தனை ஒன்றே பக்தி இசைக்கு ஒரு நிலையான சமர்ப்பணமாக அமைந்துவிட்டது.

தனக்கிருந்த அபரிமிதமான சாகித்ய ஞானத்தை, அதனால், அவருக்கிருந்த ஞான முறுக்கையும் தனது சாதாரண வாழ்க்கையில் பாதிக்க அவர் அனுமதித்ததே கிடையாது. அவர் பெற்றிருந்த பல விருதுகள், பட்டங்கள் அவரின் திறமைக்குச் சான்று பகருவன. அவா ஏனையோருடன் பழகிய பாங்கும்,

**இசைப்பிரியன் ஈ.ஏகநாதன்**
**(முன்னாள் மாவட்ட நீதிபதி,**
**தலைவர், காரைநகர் கம்பன்கழகம்)**

பண்பும் அறிநதவர்களே அறிவார்கள். 'குஞ்சு, ராசா, கண்ணா' என்பன போன்ற அவரது அன்பு மொழிகளிலே பொய்மை இல்லை, போலித் தன்மை இல்லை. குழந்தை யைப்போன்று பழகிய அவரின் உள்ளத்தின் ஆழத்தில் இருந்து பிறந்தவை இவை.

தமிழ் நாட்டின் முன்வரிசைக் கலைஞர்கள், அறிஞர்கள் எல்லோரும் அவரின் சாகித்ய ஞானத்திற்கு அடிமைகளாகி இருந்தார்கள் அவரின் பெருமைகளை வெறுமனே எழுத்தில் வடித்து விட முடியாது. இசைத்துறையிலும், பரதத் துறையிலும் காத்திரமான பரம்பரையை ஐயா அவர்கள் உருவாக்கிச் சென்றுள்ளார்கள். அவரின் புகழ், பண்ணும் பரதமும், தீஞ்சொற் பனுவலும் நிலவும் காலம் வரை நிலைத்து நிற்கும்.

ஐயா அவர்களின் தமையனார் கந்தசாமி ஐயர் அவர்கள் நயினா தீவிலே எனக்கு ஆசானாக இருந்தவர். அவரும், ஐயாவைப் போன்ற ஒரு நல்ல கலைஞர். வீரமணி ஐயா அவர்கள் நிறையச் சாதிக்க வேணடும் என்ற தாபத்தோடு இருந்தவர். அவரைத் திடீரென்று மறையச் செய்த காலனை என்ன சொல்லித் திட்ட. அவரது ஆத்மா ஓர் அற்புதமான ஆத்மா. ஐயா அவர்களுக்கு நாம் செய்யக்கூடிய நன்றி அவரது பெயரிலே யாழ். மண்ணிலே ஒரு மென் கலைக்கழகம் ஒன்றைத் தாபித்து அதன்மூலம் தமிழை - இசையை- பரதத்தை உலகெங்கும் புகழோச்சச செய்வதே. ★

# தலை சிறந்த கொடையாளி

மகாபாரதப் போர் முடியும் நேரம் களத்தில் கர்ணன் அடிப்பட்டுக்கிடக்கின்றான். தருமரின் பாசறையில் ஸ்ரீகிருஷ்ணர், "ம் தலைசிறந்த கொடையாளி கர்ணன் மடியப்போகின்றான்" என்று கவலையுடன் சொன்னார். அருகில் இருந்த அர்ச்சுனனுக்கு வருத்தம் வந்துவிட்டது. முகத்தைச் சோகமாக வைத்துக்கொண்டான். பகவான் புரிந்து கொண்டார். "வா- என்னுடன்" என்று அழைத்துக் கொண்டு யுத்த களத்திற்கு வந்தார். தான் ஓர் அந்தணன் வேடம் எடுத்துக் கொண்டார். அர்ச்சுனன் சற்றுத் தள்ளி அவருடன் வந்தான்.

"கொடையாளி கர்ணா எங்கே இருக்கிறீர்கள்?" என்று குரல் கொடுத்துக்கொண்டே அந்தணர் (பகவான்) சென்றார். ஒரு மூலையில் கர்ணன் குரல் கொடுத்தான். அந்தணர் அருகே வந்தார். "கொடையாளியே நம்பிக்கையுடன் வந்திருக்கிறேன். கடுகளவு தங்கமாவது வேண்டும்"என்று கேட்டார். அதைக் கேட்ட கர்ணன் "ஐயா என் வீட்டிற்குச் செல்லுங்கள் மனைவி தங்களுக்கு வேண்டிய அளவு கொடுப்பாள்" என்றான். பகவானோ "இதற்காக என்னை அலையவிடுகிறாயே... உன்னிடம் இல்லையென்றால் சொல விட வேண்டியதுதானே" என்று கோபித்தார்.

கர்ணனோ, "ஐயா! என் பல்லில் கொஞ்சம் தங்கம் இருக்கிறது... எடுத்துக் கொள்ளுங்கள்" என்றான். "ஒரு பிராமணனை உன் பல்லைப் பிடுங்கச் சொல்கிறாயா?" என்றார். அவ்வளவுதான், கர்ணன்தானாகவே நகர்ந்து நகர்ந்து ஒரு கல்லால் பற்களை உடைத்தான். இரத்தம் வழிய தங்கப்பல்லைத் தந்தான். பகவான் வாங்க மறுத்தார்.

"ப்பூ இரத்தம் தோய்ந்ததா?" என்று அருவருப்புடன் விலக உடனே கர்ணன் கஷ்டப்பட்டு நகர்ந்து வில்லை எடுத்து அதில் வருணாஸ்திரம் பிரயோகம் பண்ணி அம்புவிட மழை பொழிந்து பல் சுத்தமாக்கப்பட்டது.

"இப்போது எடுத்துக்கொள்ளுங்கள் அந்தணரே?" என்றான் கர்ணன். அருகில் இருந்த அர்ச்சுனன் வெட்கினான். பகவான் தன் சுயரூபம் காண்பித்து "வரம்கேள் கர்ணா" என்று சொன்னார். "மூவுலக அதிபதி என் உயிர் பிரியும் தருணத்தில் தரிசனம் தந்தீர். இனி எதற்கு வரம்?" கர்ணனின் உயிர் பிரிந்தது.

அர்ச்சுனன் திகைத்தான். கர்ணன் கொடையாளி மட்டுமல்ல. சிறந்த பக்திமானும் கூட என்று நினைத்துக் கண்ணீர் விட்டான்.

நன்றி: பக்தி

# சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு உபகரணங்கள்

சண்டிலிப்பாய்,ஜன.9

பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் தனது சமூக மேம்பாட்டுத் திட்டதின் கீழ் மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களையும், கணவரை இழந்த் விதவைப் பெண்கள் மற்றும் வலுவிழந்தவர்களுக்கு உடுபுடைவைகளையும் அன்பளிப்புச் செய்துள்ளது.

இது தொடர்பான வைபவம் கடந்த 3 ஆம் திகதி சங்க அலுவலகத்தில் சங்கத் தலைவர் அ.அமலோற்பவநாயகம் தலைமையில் நடைபெற்றது. பிரதம அதிதியாக பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பொ. சிவபாதம் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினராக யாழ் பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி, யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (பனை தென்னை வளம்) சு.கணேசமூர்த்தி, சண்டிலிப்பாய் பிரிவு உதவித் திட்டமிடல் பணிப்பாளர் மு.பாலசிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இவ்வைபவத்தில் சங்க உறுப்பினர்களினதும், சங்கப் பணியாளர்களினதும் பிள்ளைகள் உள்ள - ஜி.சீ.ஈ உயர்தர வகுப்பு மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழகம் போன்ற உயர் கல்வி நிறுவனங்களில் கற்கும் மாணவர்கள் ஆகியோருக்கு கல்விசார் உபகரணங்களும், ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டன. அத்துடன், கணவரை இழந்த விதவைப் பெண்கள் மற்றும் வலுவிழந்தவர்கள் 19 பேருக்கு உடுபுடைவைகளும் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

இதேவேளை, ஓய்வுபெற்ற சங்க உறுப்பினர்கள் ஏழு பேருக்கு முதற்கட்ட ஓய்வூதியக் கொடுப்பனவும் வழங்கப்பட்டுள்ளது. (ஐ-135)

## ரயில் கட்டணங்கள்: குளறுபடிகள் நீக்கப்படும்

ரயில் கட்டண அதிகரிப்பில் ஏற்பட்டுள்ள குளறுபடிகள் நீக்கப்படும். சில ரயில் நிலையங்களுக்கிடையிலான கட்டணங்கள் 80 முதல் 90 சதவீதம் வரை அதிகரிக்கப்பட்டுள்ளதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இது போன்ற குளறுபடிகளை நீக்க ரயில்வே அதிகாரசபை இப்போது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

ரயில்வே அதிகாரசபையின் தலைவர் மனதுங்க இவ்வாறு தெரிவித்தார்.

குறுகிய தூர கட்டணங்கள் 60 சதவதத்தாலும் தூர இடங்களுக்கான கட்டணங்கள் 40 சதவீதத்தாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன. ஆயினும் சில கட்டணங்கள் இந்த விகிதாசாரத்துக்கும் கூடுதலாக அதிகரிக்கப்பட்டிருப்பதால் குளறுபடிகள் ஏற்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

## பஜனை மண்டபம் நிர்மாணிப்பு

தெல்லிப்பழை,ஜன.9

ஊரெழு மேற்கில் 10லட்சம் ரூபா செலவில் பஜனை மண்டபம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. இப்பகுதியிலுள்ள பகவான் சத்தியசாயி பாபா பஜனை நிலையத்தினால் பக்தர்களின் நிதியுதவியுடன், இந்தப் பஜனை நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. தற்போது லண்டனில் வசிக்கும், ஊரெழுவைச் சேர்ந்த செ. இராஜேந்திரன் என்பவர் இந்த மண்டபத்துக்கென 3 பரப்புக்காணியை நன்கொடையாக வழங்கியுள்ளார் எனக் கூறப்பட்டது. (எ-150)

## வாய்மொழித்தேர்வு பெறுபேறு வெளியானது

குருநகர்,ஜன.9

ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளில் தேர்ச்சி பெற்றுள்ள அரச ஊழியர்களின் பேசும்திறனை அறியும் நோக்குடன் வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவால் நடத்தப்பட்ட வாய்மொழித் தேர்வில் சித்தியடைந்த அரச ஊழியர்களின் பெறுபேறுகள் வெளியாகி உள்ளன.

பரீட்சைப் பெறுபேறுகள் வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவால் பரீட்சார்த்திகளது பெயருக்கு அவர்கள் கடமை புரியும் திணைக்கள விலாசத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளர் வ.பொ. பாலசிங்கம்அறிவித்துள்ளார்.

இவ்வாய்மொழித்தேர்வு கடந்த வருடம் நவம்பர் மாதம் 3ஆம் திகதி மாநகரசபையில் நடைபெற்றது. சிங்களம், ஆங்கிலம், ஆகிய மொழிகளில் வெவ்வேறாக இப்பரீட்சை நடைபெற்றது. (ஐ-51)

## திருவாசக முற்றோதல்

சண்டிலிப்பாய்,ஜன.9

வடலியடைப்பு பாரத்தனை ஐயனார் ஆலயத்தில் எதிர்வரும் 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமையன்று காலை 7மணிமுதல் திருவாசக முற்றோதல் நடைபெறவுள்ளது. (எ-135)

★ ★ ★

சண்டிலிப்பாய்,ஜன.9

வடலியடைப்பு புதராணை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணி முதல் திருவாசக முற்றோதல் இடம்பெறவுள்ளது. (எ-135)

# முகமாலை சோதனை நிலைய தொழிலாளருக்கு புடைவைகள்

முகமாலையில் இயங்கும் பொருள்கள் சோதனை நிலையத்தில் தொடர்ச்சியாக பொருள்கள் ஏற்றியிறக்கும் பணியில் ஈடுபட்டு வரும் 300இற்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினா புதுவருட அன்பளிப்பாக ஆயிரத்து ஐந்நூறு ரூபா பெறுமதியான உடுபுடைவைகளை வழங்கியுள்ளனர்.

கடந்த முதலாம் திகதி சங்க மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்ச்சியில் சங்கத்தலைவர் வ.ந.வல்லிபுரம் இந்த உடுபுடைவைகள் அடங்கிய போனஸ் பொதியினை தொழிலாளர்களுக்கு வழங்கினார்.

A-9 வீதி திறக்கப்பட்ட பின்னர் முகமாலை பொருள்கள் சோதனை நிலையத்தில் வரும் வாகனங்களில் பொருள்களை சோதனைக்காக இறக்கி ஏற்றும் பணியினை தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் பொறுப்பேற்று மேற்கொண்டு வருகின்றது.


## பாராட்டி வாழ்த்துகிறோம்

சந்திரபுரம் மட்டுவில் வடக்கு செல்லப்பிள்ளையார் கோவில் திருப்பணிச் சபை செயலாளர்



**உயர்திரு.வல்லிபுரம் மகாலிங்கம்**

அவர்கள் 05.01.2004 அன்று சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் நீதிபதி திரு.பா.சுப்பிரமணியம் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார். அவர் மேன்மேலும் வாழ்வினில் உயர்வு பெறவும் சிறப்புறவும் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

1) செ.சிவானந்தசர்மா (செல்லவிநாயகர் ஆலய பூசகர்)
2) செ.செல்வநாதக்குருக்கள்.
3) செ.யோகாநந்தசர்மா
4) சிவகுமாரக்குருக்கள், ஸ்ரீகாந்தக்குருக்கள்

சந்திரபுரம்,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

(26914)(16-17)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னைமடி 1945 ~ 02 ~ 03



இறைவனடி 2001 ~ 01 ~ 14

**அமரர் சுப்பு தங்கராசா**

ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு சென்று விட்டீரே - அப்பா
உம்மைப் பிரிந்தாலும் உம்நினைவோடு வாழ்கின்றோம்
உம்துயர் தாங்காது துடிக்கின்றோம் நிம்மதியின்றி.

இன்று (09.01.2004) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தாவடி தெற்கு,
கொக்குவில்.

(26853)(35-16-17)

- குடும்பத்தினர்.

## 41ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

பிறப்பு 10 06 1947



இறப்பு 01 12 2003

**அமரர் இளையப்பு கோபாலசிங்கம்**

(முன்னாள் தலைவர் பரமேஸ்வரி அம்பாள் ஆலய பரிபாலனசபை - கோப்பாய்,
கிளை முகாமையாளர் பனை - தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் - கோப்பாய்.)

"அன்போடும் பாசத்தோடும் எங்களை வளர்த்த அப்பாவே!
உங்கள் நினைவலைகள் எங்கள் நெஞ்சங்களை விட்டு நீங்கா
உங்கள் ஆத்மசாந்திக்காக எல்லாம் வல்ல லோகமாதாவாகிய
பரமேஸ்வரி அம்பாளைப் பிரார்த்திக்கிறோம்."

நாளை (10.01.2004) சனிக்கிழமை முற்பகல் எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும் நண்பகல் 12.00 மணிக்கு இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உறவினர்கள், நண்பர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

03.12.2003 அன்று அன்னாரது இல்லத்தில் இடம்பெற்ற மரணக்கிரியையிலும், இறுதி அஞ்சலியிலும் கலந்து கொண்டவர்களுக்கும் இதய அஞ்சலிகளைப் பிரசுரித்தவர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் சகல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பரமேஸ்வரி அம்பாள் வீதி
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

(26922)(35-16-17)

- குடும்பத்தினர்.-

## பாராட்டி வாழ்த்துகிறோம்



சண்டிலிப்பாய் சீரணி அருள்மிகு ஸ்ரீநாகபூசணி அம்பாள் தேவஸ்தான செயலாளரும், வலி தென்மேற்கு இந்து ஆலயங்களின் ஒன்றியத்தின் தனாதிகாரியும், மானிப்பாய் பரீஷ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிளை உறுப்பினரும், பொதுச் சபை உறுப்பினரும். மணிமோகன் சனசமூக நிலையத்தினதும், சண்டிலிப்பாய் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினருமாகச் செயலாற்றும்

**திரு.கனகரட்ணம் அமிர்தலிங்கம்**

அவர்கள் அண்மையில் மல்லாகம் மாவட்ட நீதிவான் திருமதி.ச.இளங்கோவன் முன்னிலையில் யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். அவரை மனமார வாழ்த்துவதோடு அவரது சமூகப் பணிதொடர வேண்டும் என்று இறைஆசி வேண்டி வாழ்த்துகின்றோம்.

அறங்காவலர் சபையினர்
அருள்மிகு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம்
சண்டிலிப்பாய்.

(26875)(35-16-17)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



சந்திரபுரம் மட்டுவில் வடக்கில் வசிப்பவரும்
செல்லப்பிள்ளையாரில் அன்புகொண்டவரும்
செல்லப்பிள்ளையார் சனசமூக நிலைய முன்னாள்
செயலாளரும். தற்போது செல்லப்பிள்ளையார் கோயில்
திருப்பணிச் சபை செயலாளரும் சமூக சேவையாளருமாகிய

**திரு.வல்லிபுரம் மகாலிங்கம்**

அவர்கள் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் நீதிபதி திரு. பா. சுப்பிரமணியம் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக 05.01.2004 அன்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதையிட்டு அவரை மனமார வாழ்த்தி அவரது சேவை வளர வாழ்த்துகின்றோம்.

தலைவரும்.
செல்லப்பிள்ளையார் கோயில்
திருப்பணிச்சபையினரும்.

மட்டுலில் வடக்கு,
சந்திரபுரம், சாவகச்சேரி.

(26912) (26-16-17)

## 30ஆவது நாள் நினைவஞ்சலி

**சுந்தரம்பிள்ளை சீவரெத்தினம்**

(இளைப்பாறிய அதிபர்.
வேலணை சரஸ்வதி வித்தியாலயர். உறுப்பினர்.
வேலணை முருகன் ஆலய பரிபாலன சபை)



**தீபம் அணைந்தது!**

தீபம் அணைந்தது. தீவகம் இருண்டது.
தூய நல்லாசான் துணிவுடை மனிதர்
வேலணை முருகன் ஆலயத் தொண்டிலும்
விளங்கிடும் சரஸ்வதி பள்ளியின் உயர்விலும்
காரண கர்த்தா கடமை வீரன்
ஊரின் வளர்ச்சியில் உண்மையாய் உழைத்த
"சீவரெத்தினம்" எனும் சிறப்புடை ஆசான்
மண்ணினை மறந்த செய்தியைக் கேட்டோம்
அன்னவர் நினைவை அகத்தினில் வைத்து
அறுமுகன் பணியைத் தொடர்ந்திடுவோம்.

அன்னார் 11.12.2003 அன்று கனடாவில் காலமான செய்தி கவலையைத் தருகின்றது. அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கிறோம்.

வேலணை வங்களாவடி முருகன்
ஆலய பரிபாலன சபையினர்.

(26862)(35-16-17)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 11-08-1917



இறப்பு 10-12-2003

**அமரர் செல்லர் கணபதிப்பிள்ளை**

(இளைப்பாறிய தபால் உத்தியோகத்தர்)

இன்று (09-01-2004) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"சரஸ்வதி பவனம்",
அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி

(26738) (26-16-17)

- குடும்பத்தினர்.

# எண்கணித ஜோதிடம் - 2004

## எண் - 7

7,16,25 திகதிகளில் பிறந்த நீங்கள் தொடர்ந்து பிரச்சினை இருப்பதாக எண்ணிக்கை கொண்டு வாழ்பவர் கள், மலர்ந்த முகத்துடன் விளங்குங்கள், அப்படிப்பட்டவர்களேயே இறைவன் நேசிக்கிறான். எதையும் தொடர்ந்து செய்தால் வெற்றி உறுதி என்பதை மறந்துவிடாதீர்கள. பல நாள் பிரச்சினை ஒரே நாளில் தீரும். நல்லவர்கள் உதவியும் கிடைக்கும். அடிக்கடி மனதை இறைவன்மேல் செலுத்தப் பழகுங்கள். வெற்றி என்பது தோல்வியின் பின்னால் மறைந்து இருப்பதைப் புரிந்துகொண்டு உழைக்கப பழகுங்கள்.

வம்பு, வழக்கு ஏற்கனவே இருந்தாலும் கொஞ்சம் நிதா னமாக நீங்கள் அதைச் சமாளிக்க வேண்டும். சமாதான முறையில் தீர்வுகாண்பதே நல்லதாகும். உடன் இருப்பவர்களி டம் வாக்குவாதம் செய்வதால் கருத்து வேறுபாடு ஏற்படும். மனதில்பட்ட கருத்துக்களை சில நேரங்களில் மறைக்காது சொல்வதினால் பகை ஏற்படும் என்பதை நீங்கள் மறந்து விடக்கூடாது.

"நல்லவனாய் பிறப்பது சந்தர்ப்பத்தினால் நல்லவனா க வாழ்வது முயற்சியினால்."

என்பதே உங்கள் தத்துவம் பொதுவாக நீங்கள் முரட்டு அன்புள்ளவர்கள். பணம் பையில் இருந்தால் ரொம்ப கு ஷி யாகச் செலவு செய்வீர்கள். காதல் மனம் கொண்டு நீங்கள் ஆண்காளக இருந்தால் பெண்களாலும், பெண்களாக இருந்தால் ஆண்களாலும் பிரச்சினைக்குள்ளாவீர்கள். இதற் கெல்லாம் கிரக ஆதிக்கமும் விட்டுக்கொடுக்கும் தன்மை இல்லாததும்தான் காரணம். சில நேரங்களில் இறைவனை விழுந்து விழுந்து வழிபடுவீர்கள்.

வாழ்க்கையில் மகிழ்ச்சி என்பது பிறரை மகிழவைப் பதில்தான் உள்ளது என்பதே உங்கள் தத்துவம். பொது வாக நீங்கள் தக்கதருணத்தில் பிறருக்கு உதவுவதால் உங்களைச் சுற்றிப் நல்லவர்கள் இருக்கத் தான் செய் வார்கள். ஏமாற்றுக்காரர்களை உங்களுக்குப் பிடிக்காது. பிறரைப் பாராட்டுவதும், ஊக்கு விப்பதும் உங்களுக்கு கைவந்த கலை. எவ்வளவு பெரிய ஆளையும் போட்டி, எதிர்ப்பு என்று வந்துவிட்டால் எதிர்த்து நிற்பீர்கள். எப் படியும் உருண்டு புரண்டாவது தனது எல்லையை அடைந்து விடவேண்டும் என்ற கொள்கையோடு வாழ்வீர்கள்.

எந்த ஒரு பொறுப்பில் இருந்தாலும் அதைச் சரிவரச் செய்து நல்ல பெயரை எடுக்க முயற்சிப்பீர்கள். இன்றைய தோல்வி நாளைய வெற்றிக்கு வழிகாட்டும் என்ற கொள் கையை வைத்திருப்பீர்கள். எந்த ஒரு காரியத்தில் இறங்கினா லும் சிரமத்தைப் பார்க்காது வெற்றிபெற முயற்சிக்கவேண் டும் என்பதே உங்கள் வேதாந்தம். வயதானவர்கள், அநாதை கள், பசியில் வாழும் ஏழைமக்களுக்கு உதவவேண்டும் என்ற ஆசையிருக்கும்.

முடியுமோ முடியாதோ அதையெல்லாம் செய்ய மனம் தூண்டும். ஆடம்பரமான வாழ்க்கை அமைந்த போதிலும், எளிமையாக வாழப் பிடிக்கும். யாராவது உங்களிடம் அன பாகப் பழகினால் அவர்களை ரொம்பப்பிடிக்கும். காரம், ஸ்வீட் ரொம்பப் பிடித்தவைகள். ஆனால், உடல் நலம் கருதி கட்டுப்பாடாகச் சாப்பிடுவீர்கள். வீரம், விவேகம் இரண் டும் உங்களுக்கு ரொம்பப் பிடித்தவைகள். ஆனால், உடல்நலம் கருதி கட்டுப்பாடாக இருப்பீர்கள். கதை கேட்பதிலும், படிப்பதிலும் ஆர்வம் செலுத்து வீர்கள். வாகனம் செலுத்துவதில் ஆர்வம் இருக்கும்.

"உழைப்பு பிழைப்பாக மட்டுமல்லாமல் உண்மைக் க ாகவும் இருக்கவேண்டும்" என்ற தத்துவத்தை விரும்புவீர்கள். உங்கள் இலக்கோள் முடியும்வரை தொடர்ந்து போராடுவீர்கள். மிதமான தட்ப வெப்பம் கொண்ட இடங்களில் வாழ ஆசைப்படுவீர்கள். சளிப் பிடிக்காது. ஆனால், சளிப்பிடித்தால் எளிதில் போகாது. அழகும். முகக் கவர்ச்சியும் கொண்ட உங்களுக்கு சிறிய பிரச் சினை வந்தாலும் முகம் சோர்ந்து விடும். இயற்கையாகவே வயிறு கொஞ்சம் பலவீனமாக இருக்கும். இதனால் காரம் சாப் பிடுவதையும் ஐஸ் பண்டங்கள் சாப்பிடுவதையும் குறைத் துக் கொள்ளவேண்டும். கீரை, காய்கறி, மீன் போன்றவை கள் அதிகம் சாப்பிடலாம்.

சிலருக்கு இரவில் திடீரென விழிப்பு வந்தால் திரும்பத தூக்கம் வரவேவராது. கண்ட விஷயங்களை மனதில் போட் டுக் குழப்பிக் கொண்டிருக்க வைக்கும். இதனால் உடலில் உஷ்ணம் ஏறும். சோர்வு காணப்படும். உங்கள் உடல் சீரடைய குளுக்கோஸ் தண்ணீர் அல்லது காலை 11 மண' அளவில் இளநீர் அருந்துவது மிகவும் நல்லது. ஈஸ்னோ பிலியோ, ஆஸ்துமா, டஸ்ட் அலர்ஜி வர வாய்ப்பு இருப்ப தால் நீங்கள் நல்ல மூச்சுப்பயிற்சி, யோகப் பயிற்சி செய்ய வேண்டும். பொதுவாக எந்தப் பயிற்சியையும் முறையா கக்கற்ற மாஸ்டரிடம் பயிலவேண்டும்.

நெல்லிக்காய் லேகியம் உடல் நலத்தைச் சிறப்பாக வைத் துக்கொள்ளும். வயது கூடக்கூட 'டென்ஷன்' அதிகம் காணப்படும். இதனால் அமைதியாக ஐந்து நிமிடம் காலையில் அமர்ந்து தியானப் பயிற்சி செய்வது உடலுக்கும், மனதிற்கும் சிறப்பாகும். உங்கள் உடல் அமைப்பு சில நேரங்களில் பலமானதாகவும் மற்றும் சில நேரங்களில் ரொம்ப வீக்கானதாகவும் மாறி மாறிக்காணப்படும்.

மனக்குழப்பம், பைல்ஸ், சளித் தொந்தரவு வந்து நீங்கும். பொதுவாக நீங்கள் தியானம் செய்வது நல்லது. இறைவனை அடிக்கடி நினைக்கப் பழக வேண்டும்.

### மாணவர்களுக்கு

இந்த ஆண்டு கல்வியில் உயர்வு பெறுவீர்கள். புதிய முயற்சி வெற்றி பெறும். மேற்கல்விக்கான திட்டம் கைகூடும்.

### குறிப்பு

உங்கள் பெயர், கையெழுத்தை அதிர்ஷ்டமாக அமைத்துக் கொண்டால், வாழ்வில் வெற்றி பெறலாம்.

*ஜனவரி :* சாதி, மதம், மொழி என்ற பாகுபாடு பார்க் கக்கூடாது என்று கூறுவீர்கள். ஏக ஆதிக்கம் கொண்ட இறைவன் அருள் மிகப் பெரிது என்பதே உங்கள் வேதாந தம். பெரிய திட்டங்களைப் போட்டு அது வெற்றி பெறக் கடுமையாக உழைப பீர்கள். அதே நேரத்தில் நீங்கள் எடுத்த காரியம் கைகூடிவிடும். நன்மதிப்பு உங்கள் தகுதியை உயர்த்தும். புதிய வாகனம் வாங்கும் வாய்ப்பு சிலருக்கு உண்டு. எங்கு சென்றாலும் போட்டியை சந்தித்துக்கொண்டி ருந்த உங்களுக்கு எல்லோரும் நண்பர்களாக மாறுவார்கள். உதவிகள் கிடைக்கும். உறவினர்கள் வருகை, விருந்து உபசரிப்பு ஏற்படும். புதிய சொத்துக்கள் வாங்க, விற்க சிறப்பாக இருக்கும். நினைப்பதை எப்படியும் சாதித்து விடுவீர்கள். பெரிய மகான்களின் அன்பும் ஆசியும் கிடைக்கும.

*பெப்ரவரி :* அடிமேல் அடியடித்தால் அம்மியும் நக ரும் என் பதைப் போல் விடாது எதையும் செய்தால் கணடிப்பாக உங்கள் கை எதிலும் ஓங்கும். பொறாமை, போட்டி என்பது இருந்தாலும் அதையெல்லாம் தாண்டி உயாவு பெறுவீர்கள். மனதில் தெம்பும், தெளிவும் பிறக்கும். எங்கு சென்றாலும் சுறுசுறுப்பாகச் செயற்பட்டு வெற்றி பெறுவீர்கள். கொடுக்கல், வாங்கல் திருப்தியாகச் செல்லும்.

வீடு, வாகனம், நிலம் போன்ற கொடுக்கல் வாங்கல் கள் கொஞ்சம் தாமதித்து நடக்கும். முடியாது என்று நினைத்திருந்த காரியம் உடனே கை கூடும். சளித் தொந்தரவு, இருமல் வந்து நீங்கும். பெரிய மகான்களின் நட பும், ஆசியும் உங்கள் வளர்ச் சிக்குக் காரணமாக இருக் கும். கனவுத் தொல்லை ஏற்படும். அவ்வப்போது சோதனை கள் தோன்றினாலும் அதையெல்லாம் தாண்டி வெற்றி பெறு வீர்கள். வெளியூர், வெளிநாட்டுப் பயணம் உண்டு. உல்லாசச் செலவு இருக்கும். பக்தி கூடும்.

*மார்ச் :* அன்பால்தான் எதையும் சாதிக்க முடியும். உழைப்பவர்கள் தான் நம்மை நல்வழிப்படுத்த முடியும் எ ன்று கூறுவீர்கள். உயர்ந்த சிந்தனைகள் உங்கள் மன தில் வரும். திடீர் பயணங்கள் ஏற்படும். சென்ற மாதம் இழுபறியாக நின்ற காரியம் இந்த மாதத்தில் முடிந்து விடும். எடுத்த காரியத்தை எப்படியும் வெற்றிகரமாக முடிப்பீர்கள். செய்யும் தொழிலில் போட்டிகள் நிலவும்.

தேவையில்லாத வாய்ச்சண்டை ஏற்படும். வயதானவர் களுக்கு மருந்துவச் செலவு உண்டு. வெளியூர், வெளிநாட் டுப் பயணம் மேற்கொள்வீர்கள். புடைவை ஏற்றுமதி இரும்பு சம் பந்தமான தொழில் இவற்றால் அதிக லாபம் பெறுவீர்கள். வரும ா, வராதா என்று கேள்விக்குறியாக இருந்த பணம் வந்து சேரும். சொத்துக்கள் வாங்க, விற்க எடுத்துக்கொண்ட முயற்சிகள் வெற்றிபெறும் தருவாயில் வந்து நிற்கும். எதிலும் கொஞ்சம் பதட்ட மாகக் காணப்படுவீர்கள்.

*ஏப்ரல் :* எந்த ஒரு காரியம் நடந்தாலும் அதை நல் லதுக் காக என்று எடுத்துக்கொள்ளப் பழகிவிட்டால், உங்களுக்கு தெய்வீக அருளும், சக்தியும் வந்து விடும். எதிரிகள் தோற்று ஓடிவிடுவர். மனம் திடீர் திடீரென அலை பாயும். சிறிய விஷயத்தைப் பெரிதாக எடுத்துக்கொண்டு டென்ஷன் ஆவீர்கள். காதல் கசக்கும். செலவு கூடிக்கொண்டே செல்லும். பெரிய மகான்களின் அருள், ஆசியால் மனம் அமைதிகொள்ளும். சில போலியான மனிதர்களிடம் ஏமாற்றம் அடைய வாய்ப்பு இருப்பதால் எதிலும் கவனம் தேவை.

உடல் நிலை திடீரெனப் பின்வாங்கும். பெயர் அதிர்ஷ்ட எண்ணில் இருந்தால் பயப்படவேண்டியதில்லை. சுபகாரியச் செலவுகள் ஏற்படும். தொழில் போட்டிக்கிடையில்தான வெற்றி பெறும். வாழ்க்கைத் துணைவருக்கு உடல்நலம் கெடும். சிலருக்கு அறுவைச் சிகிச்சை, விபத்து ஏற் பட்டுத் தப்பித் துக்கொள்வீர். கால், கை இவற்றில் அடிபடும். பெரிதாகக் கவலைப்படவேண்டியதில்லை. உங்களிடம் உள்ள மனதிடம் எதிலும் உங்களைக் காப்பாற்றும்.

*மே :* பணத்திற்காக எதையும் செய்யும் இந்த உலகில் உண்மையான மனதுடன் பழகுகிறவர்கள் ஏதோ ஒரு சிலர் தான். அவர்கள் ஆடம்பரம், பகட்டு இதை விரும்புவதில்லை. அப்படி எல்லா வசதியும் இருந்தாலும் அலட்டிக்கொள்ளமாட் டார்கள் என்று கூறுவீர்கள். தன்னம்பிக்கை பக்தி கொண்ட உங்களுக்குப் பலருடைய ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைக்கும். கனவுத் தொல்லை இருக்கும். எடுத்தெறிந்து பேசுவதால் சிறு பொல்லாப்பு வரும். பேச்சில் நிதானம் தேவை.

காதல் கசக்கும். கொடுக்கல், வாங்கல் சுமாராகச் செல லும. வெளியூர், வெளிநாட்டுப் பயணம் செய்வீர் கள். இழுபறியாக இருந்த காரியம் உடனே செட்டாகிவிடும். சுபகாரியத் திட்டம் கைகூடும். செலவுகள் கூடும். ஆடை, ஆபரணச் சேர்க்கை ஏற்படும். புனித யாத்திரை செய்வீர்க ள். வாகனத்தால் செலவு உண்டு. எதிர்பாராத நனமைகள் நடக்கும். கை, கால் இவற் றில் வலிவந்து நீங்கும். மருத்துவச் செலவு இருக்கும். குழந்தைகளினால் மன வேதனைப்படுவீர்கள்.

*ஜூன் :* விருந்தோம்பல் உங்களுக்கு ரொம்பப் பிடிக் கும். தனக்கு ஒருவரைப் பிடித்துவிட்டால் அவர்களைக் கவனிப்பதில் உங்களை யாரும் 'பீட்' பண்ண முடியாது. உண்மையான அன்புள்ளம் கொண்ட உங்களை பலர் மதிப்பர். மனதில் பட்டதை டாண்டாண் என்று கூறுவீர்கள். இதனால் மற்றவர்கள் உங்களை வெகுளி என்று நினைப்பர். ஆனால், நீங்கள் பெரிய காரியவாதி என்பது அவர்களுக்குப் புரிவதில்லை. தொழில் படிப்படியாக உயரும். கனவுத் தொல்லை இருக்கும்.

வயிற்றில் வாயுத் தொந்தரவு காணப்படும். எடுத்த காரியம் இழுபறியாக இருந்தாலும் முடிவு உங்களுக்குத்தான் சாதகமாக அமையும். பயணங்கள் மேற்கொள்வீர்கள். இடுப்பில் கடுமையா வலி இருக்கும். உண்மையான அன்பிற்கும் ஆதரவிற்கும் ஏங்குவீர்கள். குடும்பத்தில் சிறுபூசல்கள் தோன்றிமறையும். சொத் துக்கள் வாங்க, விற்க முடியும் தருவாயில் நின்று கொண்டி ருக்கும். ஒப்பந்தம், தரகுத் தொழில் இவற்றால் அதிக பண இலாபம் கிடைக்கும். திடீரென உடலில் உஷ்ணம் கூடும். பெண்களுக்கு வெள்ளைபடும் வாய்ப்பு உள்ளது.

*ஜூலை :* எதையும் உடனுக்குடன் முடிக்க வேண்டும் என்பதே உங்கள் முதல் கொள்கை. என்ன செய்வது சில காரியங்களில் கொஞ்சம் இழுபறியாகத்தான் இருக்கும். செய்யும் தொழில் படிப்படியாக உயரும். நீர் ஊற்றுப்போல் பணம் பல வழியில் வரும். எதிலும் சிந்தித்துச் செயற்படும் நீங்கள், இந்த மாதம் எதிர்பாராத அதிர்ஷ்டத்தைப் பெறுவீர்கள். பயணத்தில் கவனம்தேவை. மனம் அடிக்கடி டென்ஷனாகும்.

தரகு, வியாபாரம், இரும்பு சம்பந்தமான பொருள்கள் அதிக இலாபத்தைக் கொடுக்கும். பொதுவாக முன்னேற் றப் பதையில் செல்லும் நீங்கள் தான தருமம் செய்வீர்க ள். ஏழைக்குழந்தை யின் படிப்புக்கு உதவி செய்வீர்க ள். காலில் மூட்டுவலி ஏற்பட்டு நீங்கும். அரச ஆதரவு கிடைக கும். பாராட்டுப் பெறுவீர்கள். சொத்துக்கள் வாங்க, விற்கத திருப்தியாக இருக்கும். கொடுக்கல் வாங்கல் யோராகச் செல்லும். நரம்பு சம்பந்தமான பிரச்சினை கள் தோன்றி மறையும். காதல் கை கூடும். வழக்குச் சாதகமாகும்.

*ஓகஸ்ட் :* ஆணும், பெண்ணும் சமமாக மதிக்கப்பட வேண்டும் என்ற போதிலும் பெண்களுக்கு அடக்கம், தெளிவு, முன்னெச்சரிக்கைதான் பாதுகாப்பு என்று கூறுவீர் கள். எதிலும் திறமையாகச் செயற்படும் நீங்கள் பல புதிய நுட்பங்களைக் கையாண்டு செய்யும் தொழிலை அபிவிருத்தி பண்ணுவீர்கள். உங்கள் திறமைக்கும் உழைப்பிற்கும் பாராட்டுக் கிடைக்கும்.

இதுவரை உத்தியோகத்தில் இருந்த அழுத்தம் குறையும். தொழில் முன்னேற்றப் பாதையில் செல்லும். கல்வி கற்போர் உயர்வுபெறு வர்.

நோய்கள் நீங்கும். மனதில் ஏற்பட்ட குழப்பம் தெளியு ம். இழுபறியாகக் கிடந்த பிரச்சினை முடிவுக்கு வரும். கொடுக் கல், வாங்கல் திருப்தியாக இருக்கும். குடும்ப த்தில் அவ்வப்போது பிரச்சினை தோன்றி மறையும். தொண்டையில் பிரச்சினை வந்து நீங்கும். புதிய வாய்ப்புக்கள் வந்து உங்களை முன்னேற்றப் பாதையில் கூட்டிச்செல்லும். காதல் கை கூடும். மகான்கள் சந்திப்பும் அவர்கள் ஆசியும் மன திற்குத் தெம்பளிக்கும்.

*செப்ரெம்பர் :* கல்வி, செல்வம் இவற்றுடன் ஒழுக்கமும சேர வேண்டும் என்பதே உங்கள் ஆசை. எதிலும் தொடர்ந் து முயன்றால் முடியாது என்பது இல்லை என்று கூறுவீர்க ள். இந்த மாதம் எடுக்கும் காரியம் இழுக்கும். அலைச்சல் காணப் படும். தேவையில்லாத கற்பனைகளைச் செய்து கு ழம்பிக் கொண்டிருப்பீர்கள். உடல் நலம் சிறிது பின் வாங்கும். ஆனால் எதிலும் திறமையாகச் செயற்பட்டு போராடி முடிப்பீர் கள்.

செய்யும் தொழிலில் ஓர் அழுத்தம் இருக்கத்தான் செய் யும். மனம் வேகமாக ஓடுகின்ற மின் விசிறியைப் போல் காணப்படும். வெளியூர், வெளிநாட்டுப் பயணம் செய்வீர்கள . சுபகாரியம் முடி யும். சிறுவிபத்து எற்பட்டுத் தப்புவீர் கள். குடும்பத்தில் சிறு குழப்ப மும், வாய்த்தகராறும் அவ்வப்போது ஏற்படும். வம்பு, வழக்கு வராதவாறு கவனம் தேவை. கொடுக்கல், வாங்கல் சுமாராக இருக்கும். புனித யாத்திரை செய்வீர்கள்.

*ஒக்ரோபர் :* உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவர்களை அடியோடு வெறுப்பீர்கள். எதிலும் மனம் திறந்து பேசும் அன்புள்ளங்களை உங்களுக்கு ரொம்பப்பி டிக்கும். எதிலும் அவசரப்பட்டு நீங்கள் எதையும் உடனே செய்துமுடிக்க ஆசைப்படுவீர்கள். வேகமும் விவேகமும் கொண்ட உங்களுக்கு வேலைப்பளுவால் அடிக்கடி டென்ஷன் ஏற்படும், பதவி, அந் தஸ்து உயரும்.

தாமதித்து வந்த சுபகாரியம் கைகூடும். எது நல்லதோ அதை எடுத்துக்கொண்டு சிறப்பாகச் செயற்பட்டு வெற்றி பெறுவீர்கள். தொழில் படிப்படியாக உயரும். பணம் பல வழியில் வரும். கொடுக்கல் வாங்கல் திருப்தியாகச் செல்லும். பெரிய மனிதர் நட்பும் உதவியும் கிடைக்கும். தெய்வீகம், ஞானம் இவற்றால் உங்கள் மனம் அமைதி பெறும். இடுப்பு, வயிறு இவற்றில் வலி வந்து நீங்கும். உடல் நலம் தேறும். கல்வி கற்போர் உயர்வர். அரசி யல், கலை இவற்றில் புகழ் பெறுவீர்கள் திடீர் நன்மை கள் நடக்கும். ஆடுற மாட்டை ஆடிக் கறக்கனும் என்ற தத்துவம் அறிந்து நீங்கள் எப்படிப்பட்டவர்களையும் அவர் கள் மனம்போல் நடந்து காரியம் சாதித்து விடுவீர்கள்.

*நவம்பர் :* உயர், தாழ்வு என்ற வேற்றுமை உங் களுக்குப் பிடிக்காது. நல்ல மனிதர்கள்தான் நாட்டிற்கு த் தேவை என்பதே உங்கள் நோக்கம். பணம் ஒருபக்கம் வந்தாலும், செலவு மறுபக்கம் வந்து பிடுங்கிச் செல்லு ம். மனம் அடிக்கடி சோர்ந்துவிடும். கொடுக்கல், வாங்கல் இழுபறியாக இருக்கும். அலைச்சல் இருக்கும் பயணங்களில் கவனம் தேவை. எடுத்த கரியம் முடியும் தறுவாயில் நின்று கொண்டு தகராறு செய்யும். அடிதடி, வம்பு, வழக்கு வராதவாறு கவனம் தேவை.

எவ்வளவு பணம் வந்தாலும் பற்றாக்குறை காணப்படும். பத்தி, ஞானங்கள் மனதிற்குத் தென்பாக இருக்கும். நரம் பு சம்பந்தமான வியாதி வந்து நீங்கும். உத்தியோகத்தில் அழுத்தம் இருக்கும். நல்ல நண்பர்களிடம் கருத்து வேறுபா டு ஏற்படும். வாயுத் தொந்தரவு மனதிற்கு வேதனை அளிக்கு ம். வாழ்க்கைத் துணைவருக்கும் உங்களுக்கும் வா கதுவாதம் காணப்படும். சிறிய விஷயத்தைக்கூட போராடி முடிப்பீர்கள். நீங்கள் நேசித்த ஒருவரை பிரிய நேரும். வாகனத்தால், தண்ணீரால் கண்டம் உண்டு. பெண்களால் மன வேதனை ஏற்படும்.

*டிசெம்பர் :* போராடிச் செய்ய வேண்டியதை எளிதில் முடிப் பீர்கள். பணம் எவளவு வந்தாலும் பற்றாக்குறை இருந்து கொண்டுதான் இருக்கும். நீங்கள் நேசித்த ஒருவர் உங்களை விட்டுப்பிரிந்து செல்வார். தாமதம் ஆனாலும் எதிர்பார்த்த காரியம் கை கூடும். கடவுளின் பூரண அருள் கிடைக்கும். மற்றவர்களுக்குப் புரியாதபுதிராக விளங்கும் நீங்கள், ஆடை, ஆபரணம் வாங்கிச் சேர்ப்பீர்கள். வில்லங்கமான சொத்துக்களில் பணத் தைப் போட்டுவிட்டோமே என வருந்துவீர்கள். கொடுக் கல் வாங்கல் சுமாராகச் செல்லும். கல்வியால் உயர்வு உண்டு. மகான்கள் சந்திப்பு கிடைக்கும். புனித யாத் திரை செல்வீர். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். சுபகாரியத்திட்டம் கைகூடும். கல்வியில் உயர்வு, வழக்குச் சாதகமாகும். ஈரல் பிரச்சினைவர வாய்ப்பு இருப்பதால் சுத்தமான கரும்புச்சாறு அருந்துவது நல்லது.

## வலி.மேற்கில் 817 குடும்பங்களுக்கு விரைவில் மீள்குடியமர்வுக் கொடுப்பனவு

### சனியன்று கையொப்பமிட அழைப்பு

வலி.மேற்கு.ஜன.9

வலி.மேற்குப் பிரதேசத்தில் தரை வழிப்பாதை திறக்கப்பட்ட பின்னர் மீளக்குடியமர்ந்த 817 குடும்பங்களுக்கு மீள்குடியமர்வுக் கொடுப்பனவான ரூபா 25ஆயிரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மீளக்குடியமர்ந்த 817 குடும்பங்களைச்சேர்ந்த குடும்பத் தலைவர்கள் கொடுப்பனவுச்சிட்டையில் கையெப்பமிடுவதற்காக நாளை சனிக்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத் துக்கு நண்பகல் ஒரு மணிக்கு சமுகந்தருமாறு கேட்கப்பட் டுள்ளனர் என பிரதேச செயலர் சீ.ஏ.மோகனறாஜ் தெரிவித்தார்.

குடும்பப்பதிவு அட்டை, அடையாள அட்டை, வங்கிக்கணக் குப் புத்தகம் ஆகியவற்றுடன் குடும்பத் தலைவர்கள் சமுகந் தரவேண்டும் என்றும் -


மீளக்குடியமர்ந்துள்ள 25 ஆயிரம் ரூபாவினைப் பெற் றுக்கொள்வதற்குத் தகுதியானவர்கள் என கிராமிய புனரமைப் புக் குழுக்களினால் சிபாரிசுசெய்யப்பட்டவர்கள் மட்டுமே சமுக மளிக்க வேண்டுமென்றும் - பிரதேசசெயலர் அறிவித்துள்ளார்.

கிராமிய புனரமைப்புக் குழுக்களின் தலைவர், செய லாளர்கள் ஆகியோரும் அன்றையதினம் சமுகமளிக்கவேண் டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(எ-175)

# வர்த்தக நடவடிக்கைகளில் ஒழுக்கம் பேணப்படுவது மிகவும் முக்கியம்

## காசோலை விநியோகம் பற்றி அவதானம் தேவை என்கிறார் தொழில் அதிபர் அலோசியஸ்



ரி.என்.எல். தொலைக்காட்சியில் நேருக்கு நேர் நிகழ்ச்சியில் அலோசியஸ் பெர்னாண்டோவை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்ரமவும் 113 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும், நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி கண்டனர். அப்போது தனது அனுபவத்தை அலோசியஸ் பெர்னாண்டோ விளக்குகிறார்.

ரி.என்.எல். தொலைக்காட்சியின் வர்த்தக ஸ்பெஷல் - நேருக்கு நோ நிகழ்ச்சியில் கடந்த 6ஆம் திகதி தோன்றி, தனது தொழில் முன்னேற்றம் பற்றி விளக்கினாா தொழில் அதிபர் நிஹால் அலோசியஸ பெர்னாண்டோ.

பிரபல வர்த்தக நிறுவனமான ஹரீன் டிரேட் என்டர்பிறைசஸ் லிமிட்டெட்டின் நிறைவேற்று அதிகாரியும் இயக்குநருமான நிஹால அலோசியஸ் பெர்னாண்டோ தமது வெற்றிகள் பற்றி விவரித்தார்.

ஆடை, வாகனம், அத்தியாவசியப் பொருள்கள் எனப் பல்வேறு பொருள்களை இறக்குமதி செய்யும் ஹரீன் டிரேட் என்டர்பிறைசஸ் பிறைவேட் லிமிட்டட் வத்தளையில் இயங்கி வருகிறது.

**வர்த்தக ஸ்பெஷல்**

ரி.என்.எல்.தொலைக்காட்சியில் அலோசியஸ் பெர்னாண்டோவை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்ரமவும், 113 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும், நிர்வாகப் பணிபபாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி கண்டனர்

செவ்வியை இங்கே படித்துப் பாருங்கள்.

*கேள்வி:-* நீங்கள் இந்த நிறுவனத்தை எப்படி ஆரம்பித்தீர்கள்? இந்த நிலைமைக்கு எப்படி வந்தீர்கள்?

*பதில்:-* நான் 1988ஆம் ஆண்டு காலப்பகுதியில் வத்தளையில் இந்த நிறுவனத்தை ஆரம்பித்தேன். அப்போது இலங்கையில் வெளிநாட்டு வங்கியொன்று இருந்தது. அந்த வங்கியில் கணக்கை ஆரம்பிக்கும்படி எனது சிங்கப்பூர் வியாபார நண்பா ஒருவர் ஆலோசனை கூறினார். அதனபடி நானும் எனது மனைவியும் இணைந்து எனது கம்பனி பெயரிலேயே கணக்கை ஆரம்பித்தோம்.

கணக்கை ஆரம்பித்து இரண்டு வருடங்களில் சர்வதேச மட்டத்தில் இருக்கும் அந்த வங்கியின் கிளைகள் அனைத்தும் மூடப்பட்டன. வங்கி நட்டத்தில் இயங்கியதால் அது மூடபபட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

அந்த வங்கியை செலான் வங்கி, மத்திய வங்கியின் ஊடாகப் பொறுப்பேற்றது. அப்போது அதில் கணக்கு வைத்திருந்த வாடிக்கையாளர்களைத தொடர்ந்து தமது நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்தனர். அன்று முதல் எனது வியாபார ரீதியான கொடுக்கல் வாங்கல்களை செலான் வங்கியின் ஊடாக மேற்கொண்டேன். அந்தவங்கி கொடுத்த தைரியத்தில் எனது வியாபார நடவடிக்கைகளை மேலும் விஸ்தரித்தேன். அன்று முதல் இன்று வரை எனது வியாபார நடவடிக்கைகள், செலான் வங்கியின் ஊடாகவே நடைபெறுகின்றன.

*கேள்வி:-* உங்களின் வியாபாரத் துறை பற்றி எமக்குத் தெளிவாக விளக்கமுடியுமா?

*பதில்-* உண்மையில் நாம் மொத்தமாகப் பொருள்களை இந்தோனேஷியா, சிங்கப்பூர், ஹொங்கொங், இந்தியா, சீனா போன்ற நாடுகளிலிருந்து தேவைகேற்றபடி இறக்குமதி செய்கிறோம். எமது நாட்டுக்குத் தேவையான பொருளகளை மாதிரிக்குக் கொண்டுவந்து பரிசோதித்து அதன் தரம் பற்றி ஆராய்ந்த பின்னர் மொத்தமாக இறக்குமதி செய்கிறோம்.

அவற்றைப் புறக்கோட்டையில் உள்ள வியாபாரிகளுக்கு மொத்தமாக விற்கிறோம். அவர்கள் ஒரு மாதம் அல்லது இரண்டு வாரம் என காலக் கெடுவில் எமக்கு காசோலைகளைத தருகின்றனர்.

நாம் அந்தக் காசோலைகளை வங்கியில் முதலீடுசெய்து நம்பிக்கையின் பேரில் கடன்பெற்று வியாபாரத்தைத் தொடர்ந்து நடத்துகிறோம்.

இதில் இன்னொரு முக்கியமான விடயமொன்றை நான் கூறவேண்டும். இன்று வியாபாரத்துறையில் ஈடுபடுபவர்கள் வங்கியில் சுலபமாக சிறு தொகையை வைப்பிலிட்டுவிட்டுக் காசோலையைப் பெற்றுக்கொள்கின்றனர். வங்கியில் பணம் இல்லாமலேயே காசோலையை திகதியிட்டு வழங்குகின்றனர். ஆனால், இந்தக் காசோலைக்கு குறிப்பிட்ட திகதியன்று வங்கியில் பணம் பெறச் சென்றால் அங்கு பணம் இருப்பதில்லை. இதுபோன்ற மோசடிப் பேர்வழிகள் மேற்கொள்ளும் நடவடிக்கையால் பல சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

சிலவேளை, சட்டபூர்வமான நடவடிக்கையில் ஈடுபடமுடியாத நிலை தோன்றுகிறது. கூடுதலான வர்த்தக நடவடிக்கைகள் காசோலை மூலமாகவே மேற்கொள்ளப்படுகின்றன. காணிகளை மட்டுமே அவ்வாறு வாங்கமுடியாது. எனவே, இந்தக் காசோலை மோசடியில் மாட்டிக்கொள்ளாதிருப்பதற்கு ஒரு வழிமுறை இருக்குமானால, அதைச் செய்யவேண்டும். அப்போது தான் இந்தத்துறையில் தொடர்ந்து பிரகாசிக்க முடியும்.

*கேள்வி:-* நீங்கள் முக்கியமான ஒரு விடயத்தைக் கூறினீர்கள். அதாவது திகதியிடப்பட்ட காசோலை பற்றியதானது. இதைக் கொஞ்சம் விளக்குவீர்களா?

*பதில்:-* இலங்கையில் உள்ள வங்கிகளில் குறிப்பிட்ட ஒரு பணத் தொகையுடன் யார் வேண்டுமானாலும கணக்கொன்றைத் திறந்து வாடிக்கையாளராக முடியும். அதன்படி 150ரூபா பெறுமதியான காசோலை புத்தகமொன்றையும் பெற்றுக்கொள்ளமுடியும்.

இலங்கையில் உள்ள வர்த்தகப் போட்டி காரணமாக நாம் எமது இறக்குமதி செய்த பொருள்களை விரைவில் விற்றுத்தீர்க்க வேண்டிய ஒரு கட்டாயமும் உள்ளது. இப்படியான ஒரு சூழ்நிலையில் நாம் உடனடியான பணத்துக்கும் அதை விற்கமுடியாது. யாரும் தமது பொருள்களை திகதியிடப்பட்ட காசோலைக்கே விற்கின்றனர். நாமும் காசோலைகளுக்கே விற்கின்றோம். அச்சந்தர்ப்பத்தில் வர்த்தக ஒழுக்கமற்றவர்கள் தமது வங்கியில் பணமில்லாத காசோலைகளைக கொடுத்து எம்மை ஏமாற்றுகின்றனர்.

வர்த்தக ஒழுக்கம் இத்துறையில கட்டாயமாகின்றது. ஒரு காசோலையை நாம் பெற்றுக்கொண்டால், அக் காசோலை முழு இலங்கையிலும் வர்த்தக புரள்வுகளுக்காகப் பயன்படுத்தப படுகிறது. பணம் மூலமாக வியாபாரம் செய்வது மிகவும் குறைவு. காசோலையொன்றில் பணம் இல்லாத பட்சத்தில அதுபெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இலங்கையில் இதற்கான சட்டமூலங்கள் சரியான முறையில் இல்லை. வெளிநாடுகளில் அப்படியல்ல.

உதாரணமாக சிங்கப்பூரை எடுத்துக்கொண்டால் அங்கு இது போன் பிரச்சினைகள் எழுவதில்லை. ஒரு காசோலை வங்கியிலிருந்து திரும்பினால் அதன் உரிமையாளருக்கு பெருந் தொகையான டொலர்கள் தண்டமாக அறவிடப்படுகிறது. ஜப்பானில் அப்படி நடந்தால் அந்தக் கம்பனி நட்டத்தில் இயங்குகின்றது என அறிவிக்கப்படுகிறது. அங்கு கண்டபடி இப்படிச் செய்யமுடியாது.

ஆனால், இலங்கையில் அப்படியல்ல. ஒரு வங்கியில் கணக்கு மூடப்பட்டால், அடுத்த வங்கியில் கணக்குத் திறக்கும் நடைமுறை உள்ளது. எனவே, வங்கித்துறையில் உள்ளவர்கள் இதுதொடர்பாக ஆராய்ந்து முடிவுசெய்ய வேண்டும். வேறு எங்கும் நாம் செல்லத்தேவையில்லை.

உதாரணத்துக்கு இந்தியாவில் ஒரு காசோலை திரும்பினால் உடனடியாக அந்தக் கம்பனிக்கு எதிராகவோ நபருக்கெதிராகவோ வழக்குத் தொடரப்படுகிறது. எமது நாட்டில் அப்படியொரு நடைமுறை இல்லாததால் சர்வசாதாரணமாகப் பலா காசோலை மூலம் மோசடி செய்கின்றனர்.

- இவ்வாறு அவர் கூறினார்.

# மீளக்குடியமர்ந்த வறிய மக்களுக்கு அபிவிருத்தித் திட்டங்களில் முன்னுரிமை

## யாழ். செயலகக் கூட்டத்தில் வலியுறுத்து

யாழ்.மாவட்டத்தில் இந்த ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள துரித அபிவிருத்தித் திட்டங்களில் மீளக்குடியமர்ந்த மற்றும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும்.

யாழ்.செயலகத்தில் இடம்பெற்ற பிரதேச செயலர்கள் மற்றும் உதவி அரச அதிபர்களுக்கான கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. இது தொடர்பான தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

இந்தக் கூட்டம் யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது. இந்த ஆண்டு செயற்படுத்தப்படவுள்ள செயற்றிட்டங்கள குறித்தும் இதில் ஆராயப்பட்டது.

இந்த ஆண்டுக்கெனத் தயாரிக்கப்படும் திட்டங்களில் கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய விடயங்கள் குறித்தும் இந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இதில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

☆ சொந்தக் காணி இல்லாது கோயில் மற்றும் பொதுக்காணிகளில் குடியிருக்கும் குடும்பங்களுக்கு அந்தக் காணிகளை உரிமையாளர்களின் சம்மதத்துடன் சுவீகரித்து வழங்க நடவடிக்கை எடுத்தல்.

☆ கிராமிய வீதிகளைப் புனரமைப்புச் செய்தல்.

☆ மலசலகூடம் அமைத்தல், கழிவகற்றல், வடிகால்கள் சேதமடைந்திருப்பின் அவற்றைப் புனரமைத்தல்.

☆ சுயதொழில் முயற்சியினால் மக்களுடைய வருமானத்தை அதிகரிபபதற்காக கால்நடைகளைப் பெற்றுக கொடுத்தல், மீன்பிடி உபகரணங்களை பெற்றுக்கொடுத்தல்.

☆ கிராம அலுவலர்களின் கடமைகள் மற்றும் பொதுமக்களின் முறைப்பாடுகள் தொடர்பான தினப்பதிவேடுகளைப் பரீட்சித்து அதுகுறித்து எடுக்கப்படவேண்டிய நடவடிக்கையை அறிவுறுத்துவதும் கிராம அலுவலர்களின் கடமைகளை அவர்களது அலுவலகங்களுக்குச் சென்று கண்காணிபபதும், 2004 ஜனவரி மாதத்திலிருந்து நடைமுறைக்கு கொண்டுவருதல்.

☆ கிராம அலுவலர்களின் விடுமுறை நாளாக ஒரு குறிப்பிட்டதினம் ஒதுக்கப்படாத காரணத்தினால் அவர்கள் ஞாயிறு தினத்தையே ஓய்வு நாளாகக் கருதுகிறார்கள் எனவே, அவாகளுக்கு ஓய்வுநாள் குறித்தொதுக்குதல்

☆ சமூக அபிவிருத்திச் செயற்பாடுகளில் கிராம அலுவலர்கள், சமூகசேவை உத்தியோகத்தர்கள், கலாசார உத்தியோகத்தர்கள் ஆகியோரை மாவட்டத்தில் முன்னெடுத்துச் செல்லப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுத்துதல்.

இக்கூட்டத்தில் திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலர்கள், உதவி அரசாங்க அதிபர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஒ-8-76)

# குரங்குகள், பன்றிகள், பாம்புகள் தென்மராட்சியில் அதிகரிப்பு

## அதனால் தொல்லையென மக்கள் முறைப்பாடு

சாவகச்சேரி,ஜன.9

தென்மராட்சிப் பிரதேசத்தின் பல கிராமங்களில் அண்மைக்காலமாக குரங்குகள், பன்றிகள் மற்றும் பாம்புகள் அதிகரித்துக் காணப்படுவதாக அப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இவற்றால் பலதொல்லைகளை எதிர்நோக்க வேண்டி உள்ளதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

2000ஆம் ஆண்டு மே மாதம் ஏற்பட்ட யுத்தச் சூழ்நிலை காரணமாக தென்மராட்சி மக்கள் இடம்பெயர்ந்தனர். அதன் பின்னர் நீண்டகாலமாக இப்பிரதேசம் பொதுமக்கள் நடமாட்டம் அற்றிருந்தது. இதனால், அங்கு குரங்குகள், பன்றிகள் மற்றும் பாம்புகள் குடிமனைப் பகுதிகளில் பெருகிவிட்டன. கடந்த ஆண்டு முதல் மக்கள் அங்கு மீளக்குடியமர்ந்து வருகின்றனர். இந்தநிலையில், மேற்படி உயிரினங்களால் மக்கள் பலவிதமான தொல்லைகளை அனுபவிக்க நேரிட்டுள்ளது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில அண்மையில் இடம்பெற்ற அரச அதிபருடனான கலந்துரையாடலின் போது இந்தவிடயம் குறித்துப் பொதுமக்களால் எடுத்துக்கூறப்பட்டது. அத்துடன், குரங்குகள், பன்றிகள் மற்றும் பாம்புகளைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தில் உள்ள பொது இடங்களில் உள்ள பற்றைகள் மற்றும் புல்பூண்டுகளை அகற்றுவதற்கு ஆவனசெய்யுமாறும் அரச அதிபரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

(ஒ-10-31)

# நெல் அறுவடை இயந்திரம் கொள்வனவு செய்ய ஏற்பாடு

## மானிப்பாய் மேற்குச் சம்மேளனம் துரித நடவடிக்கை

சண்டிலிப்பாய்,ஜன.9

மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனம் தமது பகுதியிலுள்ள விவசாயிகளின் நலன்கருதி நெல் அரிவு வெட்டும் இயந்திரம் ஒன்றை விரைவில் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

சம்மேளனத்தின் நிதியிலிருந்து இதனைக்கொள்வனவு செய்வதற்காக ஒரு லட்சத்து 30ஆயிரம் ரூபா ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது என்றும்- யாழ்.கமநல சேவைகள் திணைக்களத்தின் ஊடாக இந்த இயந்திரத்தை கொழும்பில் கொள்வனவு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் -

சம்மேளனத்தின் தலைவர் சி.பொ. ம.க.முதலியார் இதுபற்றித் தகவல் தருகையில் தெரிவித்தார்.

நெல் அறுவடை செய்யும் காலஙகளில் அறுவடை செய்வதற்கு தொழிலாளிகளுக்குப் பலத்த பற்றாக்குறை நிலவிவருகிறது.

இதனால், விவசாயிகள் தமது நெல் அறுவடையை உரிய காலத்தில் மேற்கொள்ள முடியாதநிலை இருந்து வருகின்றது. (எ-135)

# அரியாலை நெடுங்குளத்தில் மணல் திருடர்கள் கைவரிசை

கொழும்புத்துறை,ஜன.9

அரியாலை, நெடுங்குளம் பகுதியில் உள்ள தனியார் காணிகளில் அனுமதியின்றித் திருட்டுத்தனமாக மணல் அகழ்ந்து கடத்திச் செல்லுதல் அதிகரித்திருப்பதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

தனியாருக்குச் சொந்தமான காணிகளுக்குள் அத்துமீறி நுழையும் சிலர் உழவு இயந்திரங்கள், 'லாண்ட் மாஸ்டர்கள்' போன்றவற்றில் மணலை அகழ்ந்து ஏற்றிச்செல்கின்றனர். இந்த மணல் திருட்டைத் தடுக்க முற்படும் காணி உரிமையாளர் அல்லது பராமரிப்பாளர்கள் மணல் திருடர்களால் அச்சுறுத்தப்பட்டுள்ளனர். மணல் திருடர்கள் கடற்கரைப் பகுதிகளை அண்டிய இடங்களில் மணலை ஆழமாக அகழ்ந்து செல்வதால் கடல்நீர் உட்புகும் அபாயமும் ஏற்படக்கூடும் என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மணல் திருட்டில் ஈடுபடுபவர்கள் குறிப்பிட்ட இடங்களைத் தமக்கென அடையாளமிட்டு மணல் அகழ்வதாகவும் - இடம்மாறி மணல் அகழும் சந்தர்ப்பங்களில் மணல் திருடர்களிடையே மோதல்கள் இடம்பெறுவதாகவும் - கூறப்படுகிறது. (ஒ-30)

# மீளக்குடியமர அனுமதிக்காவிட்டால் சுதந்திர தினத்தன்று போராட்டம்!

## தென்மராட்சி தெற்கு ச.ச.நிலையம் அறிவிப்பு

கைதடி,ஜன.9

தென்மராட்சி தெற்குப் பகுதியில் மீளக்குடியமர அனுமதிக்கும்படியும் - இல்லாவிட்டால் எதிர்வரும் சுதந்திர தினத்தன்று உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்றும் - மறவன்புலோ பாரதி சனசமூக நிலையத்தினர் தெரிவித்துள்ளனர். அவர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தொலைநகல் மூலம் அனுப்பிய மகஜரிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

மறவன்புலோ, தனங்களப்பு மற்றும் கைதடிநாவற்குழியில் ஒரு பகுதி ஆகிய இடங்களில் வசித்த பொதுமக்கள் 1999 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் யுத்தச் சூழ்நிலை காரணமாக அப்பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்தனர். இவர்கள் மீளக்குடியமர இதுவரை அனுமதிக்கப்படவில்லை. இதனால் கடந்த 4 வருடங்களாக இந்த மக்கள் பெரும் துன்ப துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

அரசசார்பற்ற நிறுவனங்கள் உட்பட மீள் குடியமர்வு தொடர்பான அனைத்துத் தரப்புகளிடமும் தமது சோக வாழ்க்கை குறித்து இடம் பெயர்ந்த மக்கள் முறையிட்டனர். ஆனால், பயனேதும் கிட்டவில்லை.

ஆகவே, மறவன்புலோ, தனங்களப்பு, கைதடிநாவற்குழியின் ஒரு பகுதி ஆகிய இடங்களில் மக்கள் மீளக்குடியமர தக்க நடவடிக்கையை உடன் மேற்கொள்ளுமாறு தங்களைக் கோருகின்றோம்.

எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்பாக மேற்குறிப்பிட்ட பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படவேண்டும் என்றும் -

அத்துடன், இப்பகுதியில் உள்ள இரண்டு பாடசாலைகளும் ஆரம்பிக்கப்படவேண்டும் என்றும் -

தங்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

எமது வேண்டுகோள் நிறைவேற்றப்படாவிட்டால் இலங்கையின் சுதந்திரதினமான அடுத்த மாதம் 4ஆம் திகதி தென்மராட்சி பிரதேச செயலகம் முன்பாக சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை இடம்பெயர்ந்த மக்கள் ஆரம்பிப்பார்கள்.

- இவ்வாறு மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஒ-75)

# புதிய முறையில் ஓய்வூதியக் கொடுப்பனவு; தபால் நிலைய அதிபர்கள் ஆட்சேபம்

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் ஓய்வூதியக் கொடுப்பனவு, முறைப்படி ஓய்வூதியம் வழங்காதிருக்க தபால் நிலைய அதிபர்கள் தீர்மானித்திருக்கின்றனர். புதிய முறையினால் ஓய்வூதியம் பெறுவோரும் தபால் நிலைய அதிபர்களும் சிரமங்களை எதிர்நோக்குவதாலேயே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

ஓய்வூதிய வவுச்சரில் ஓய்வூதியத் தொகையைக் குறிப்பிட்டு ஓய்வூதியர்களுக்கு அனுப்புவதே இதுவரையிலான முறையாகும். ஆயினும், இந்த முறையை நிறுத்திவிட்டு புதிய முறை ஒன்றை ஓய்வூதியத் திணைக்களம் அறிமுகப்படுத்தியிருக்கிறது.

புதிய முறைப்படி ஓய்வூதியக்காரர்கள் தமது ஓய்வூதிய வவுச்சரைத் தாங்களே நிரப்பித் தபால் நிலையக் கருமபீடத்தில் கையளிக்க வேண்டும். அப்பொழுது அந்த வவுச்சரில் இருக்கும் விவரங்கள் ஓய்வூதியத் திணைக்களத்தினால் அனுப்பப்பட்டிருக்கும் பட்டியலுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டு கையெழுத்து பெறப்பட்ட பின்னரே தபால் நிலைய அதிபரினால் ஓய்வூதியப் பணம் வழங்கப்படும்.

இப்புதிய முறையினால் ஒவ்வொரு ஓய்வூதியக்காரருக்கும் பணம் செலுத்த சிறிதளவு நேரத்தைச் செலவிட வேண்டிவரும் என்று தபால நிலைய அதிபர்கள் கூறுகின்றனர்.

### பொன்.அருணாசலம் நினைவு அறநிதியம்

யாழ்ப்பாணம்,ஜன.9

சேர்.பொன் அருணாசலத்தின் 150 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு அகில இலங்கை இந்துமா மன்றமும், வட கொழும்பு இந்து பரிபாலன சங்கமும் இணைந்து அறநிதியம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளன.

இந்த அறநிதியம் சேர்.பொன் அருணாசலத்தின் நினைவு தினமாகிய இன்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறும் நிகழ்வில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது.

(ம-8)

# மயானத்தைப் புனரமைக்க பொதுமக்கள் கோரிக்கை

கைதடி,ஜன.9

கைதடி சைவச்சிறுவர் இல்லத்திற்குப் பின்புறமாக உள்ள ஊரியான் மயானத்தை மக்கள் பாவனைக்கு ஏற்றவாறு புனரமைத்துத் தருமாறு இப்பகுதி மக்கள் சாவகச்சேரி பிரதேச சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மயானத்தில் சடலங்களை வைத்து எரியூட்டக் கூடிய தகன மேடையோ இளைப்பாறும் மண்டபமோ இல்லாமையால் இங்கு தகனக்கிரியைகளுக்காக வரும் பொதுமக்கள் பல இன்னல்களை எதிர்கொள்கின்றனர்.

மழைகாலங்களிலும், வெயில் நேரத்திலும் தகனக்கிரியைகள் செய்வது இங்கு பெரும் சிரமமாகவே உள்ளது. போதிய வசதிகள் இல்லாத காரணத்தினால் சிலவேளைகளில் சடலங்கள் நிலத்தில் வைத்து பெற்றோல் ஊற்றி எரியூட்டப்படுகின்றன.

எனவே, இம்மயானத்தை உடனடியாகத் திருத்தித் தருமாறு சாவகச்சேரி பிரதேச சபையிடமும் கிராம அலுவலரிடமும் இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இம்மயானம் கைதடி தெற்கு, கைதடி மேற்கு, நாவற்குழி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்களின் பாவனையில் உள்ளது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-8-75)

# மாதகல் ப.தெ.அ.கூ. சங்கத்தினால் அங்கத்தவர்களுக்கு நிதி உதவிகள்

மாதகல்,ஜன.9

மாதகல் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் அதன் அங்கத்தவர்களுக்கு நிதியுதவி மற்றும் உடுபுடைவைகள் வழங்கப்பட்டுள்ளன.

பாடசாலை மாணவர்கள், விதவைகள் மற்றும் ஓய்வூதியர்கள் என 77 பேருக்கு நிதியுதவியும் உடுபுடைவைகளும் கடந்த 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன.

ஜி.ச.ஈ. உயர்தரத்தில் கல்வி கற்கும் எட்டு மாணவர்களுக்கு தலா மூவாயிரம் ரூபாவும், தரம் 11 இல் கல்விகற்கும் ஐம்பது மாணவர்களுக்கு ஆயிரம் ரூபா முதல் இரண்டாயிரம் ரூபா வரையும் நிதியுதவிகள் வழங்கப்பட்டன.

விதவைகள் 14 பேருக்கு தலா 500 ரூபா நிதியுதவியும் உடுபுடைவைகளும் ஓய்வூதியம் பெறும் ஐந்து பேருக்கு உடுபுடைவைகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பொ. சிவபாதம் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

எல்லா தொழில்சார் துறைகளுக்கும் அமைச்சுக்கள் இருக்கின்றபோதும் எமக்கு அப்படி ஓர் அமைச்சு இல்லை. நாமும் கல்வியில் உயர்ந்து விளங்கினால் நாடாளுமன்றத்தில் எமக்கு ஓர் அமைச்சினை உருவாக்க முடியும்.

இந்த உதவிகளைப் பெறும் மாணவர்கள் சமூகத்தில் உயரவேண்டும் என்ற எண்ணத்துடன் கல்விபயில வேண்டும் - என்றார்.

இந்த நிகழ்வில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி வடமாகாண தெ.ப.கூ. சங்கங்களின் சமாசத்தலைவர் கி.தவராசா ஆகியோரும் உரையாற்றினார்கள்.

(ம-7-95)

## புரிந்துணர்வு உடன்படிக்கையில் இருந்து வாபஸ் பெறுவதான

# பிரதமர் அறிவிப்புக் குறித்து அரசியல்வாதிகளின் கருத்து

கொழும்பு,ஜன.9

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் இருந்து வாபஸ் பெறுவதாக பிரதமர் அறிவித்துள்ளமை பற்றி தெற்கில் அரசியல் வாதிகள் பலரும் பல்வேறுபட்ட கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். பிரதமரின் நிலைப்பாட்டுக்கு ஆதரவானதும் எதிரானதுமான கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன.

### அமைச்சர் சந்திரசேகரன்



யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் இருந்து வாபஸ்பெறப் போகிறார் எனப் பிரதமர் தெரிவித்திருக்கின்றமை ஜனாதிபதியின் அவசர முடிவினால்தான் ஏற்பட்டது என அமைச்சர் சந்திரசேகரன் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

யுத்தநிறுத்தத்தை ஏற்படுத்தி சமாதானப் பேச்சுக்களை வெற்றிகரமாக முன்கொண்டு செல்கின்ற பிரதமரின் முயற்சிக்கு, முக்கிய மூன்று அமைச்சுக்களை பொறுப்பேற்ற ஜனாதிபதியின் செயற்பாடுதான் இடையூறாக அமைந்தது.

இந்நிலையில், பேச்சுக்களைத் தொடர்வதில் அர்த்தமில்லை என்பதை நோர்வேயும் ஏற்றுக்கொண்டு தனது பணியிலிருந்து பின்வாங்கியிருக்கின்றது.

லண்டனில் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களுடனான எனது சந்திப்பின்போது அவரும் இதனையே வலியுறுத்தினார்.

யுத்தநிறுத்தம் வாபஸ்பெறப்பட்டு மீண்டும் ஒரு யுத்தத்திற்கு அப்பாவி தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களும் முகம்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டால் அதற்கு ஜனாதிபதியே பதில் கூறவேண்டும்.

புலிகளுடன் ஜனாதிபதி ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செய்துகொண்டு சமாதான முன்னெடுப்புகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று பிரதமர் கூறியிருப்பதை சமாதானத்தை விரும்பும் அனைவரும் ஏற்றுக்கொள்ளவேண்டும் - இப்படி அவர் தெரிவித்திருக்கிறார்.

### பௌஸி எம்.பி.



புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் யுத்தநிறுத்தம் தொடர்ந்து பேணப்படவேண்டும். சமாதான முயற்சியிலிருந்து ஒதுங்கிக்கொள்ளப் போகிறார் என பிரதமர் அறிவித்திருக்கின்றமை இந்த நாட்டுக்கு அவர் செய்யும் பெரும் துரோகமாகும்.

- இப்படிக் கூறியுள்ளார் முன்னாள் அமைச்சரான ஏ.எச்.எம்.பௌஸி எம்.பி.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

இரண்டு வருடங்களாக நிம்மதியாக மக்கள் வாழ்ந்தார்கள். அந்த நிலையைக் குழப்பியடிக்கும் வகையில் பிரதமர் திடீரென இப்படி அறிவித்திருப்பது விடுதலைப் புலிகளை மீண்டும் யுத்தம் செய்யுங்கள் என்று கோருவது போன்றதாகும்.

அதேநேரம், பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதியால் மீளப்பெறப்பட்டதை சமாதான முயற்சிகளுக்கு இடையூறான விடயமாகக் கூறுவது அர்த்தமற்றது.

விடுதலைப் புலிகளுடன் மற்றொரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொள்ளுமாறு ஜனாதிபதியிடம் பிரதமர் கூறுவதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. அவர் முன்னெடுத்த சமாதான நடவடிக்கையை அவரே தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும் - இப்படி அவர் கூறினார்.

### விக்கிரமபாகு கருணாரத்ன



சமாதான பேச்சுக்களைக் கைவிடப் போகிறார் எனப் பிரதமர் தெரிவித்துள்ள கருத்து அர்த்தமற்றது. அதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறியுள்ளார் நவசமசமாஜக் கட்சியின் செயலர் விக்கிரமபாகு கருணாரத்ன.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

நாட்டில் அரசியல் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உரித்துடைய கட்சி ஐ.தே.கவாகும். ஏனெனில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அமைச்சரவையின் பூரண ஒத்துழைப்பு இருக்கின்றது.

நாட்டை ஆட்சி செய்யும் அதிகாரத்தைக் கையில் வைத்துக்கொண்டு பிரச்சினைகளைக் கண்டு பின் வாங்குவது அர்த்தமற்றது; ஆபத்தானது. ஜனாதிபதிக்கு நிறைவேற்று அதிகாரம் மட்டுமே உள்ளது. அவரை ஒரு வரையறைக்குள் வைத்திருக்க வேண்டியது பிரதமரின் கடமையாகும். இதனைப் பிரதமர் செய்யாமல் நாட்டின் பிரதான பிரச்சினையிலிருந்து ஒதுங்கிக்கொள்வது என்பது நாட்டின் அரசியல் பிரச்சினையில் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தும் முடிவாகும். - இப்படி அவர் கூறினார்.

### மாவை சேனாதிராஜா எம்.பி.



புரிந்துணர்வு ஒப்பந்தத்திலிருந்து தாம் வாபஸ் பெறுகிறார் என பிரதமர் அறிவித்திருப்பது ஜனாதிபதி மீது ஒருவித அழுத்தத்தைப் பிரயோகிக்கும் முயற்சியாக இருக்கலாம் என்று கூறியுள்ளார் தமிழ்க் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட எம்.பியான மாவை சேனாதிராஜா.

அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஐ.தே.முன்னணிக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில்தான் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

சமாதானத்தை நிலைநாட்டுவார் என்ற நம்பிக்கையில்தான் தென்னிலங்கையில் சிங்கள மக்களும் பிரதமரைத் தேர்ந்தெடுத்தனர்.

இப்படியான ஓர் அரசியல் நெருக்கடி நிலை வரும் என்பதை நன்றாகவே தெரிந்துகொண்டுதான் மூன்று அமைச்சுக்களையும் தனது பொறுப்பின் கீழ் கொண்டு வந்து அரசியல் சிக்கல் நிலையை ஜனாதிபதி தோற்றுவித்தார் என்பது வெளிப்படையான உண்மை.

நாம் கடந்த மாதம் பிரதமரைச் சந்தித்தபோது, சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்ல சிங்கள மக்களும் அவருக்குத்தான் ஆணை வழங்கியிருக்கிறார்கள் என்பதை அவருக்குத் தெளிவாக எடுத்துக் கூறினோம்.

இருந்தும், அவர் இப்படியான ஒரு முடிவுக்கு வந்திருப்பது ஜனாதிபதி மீது ஓர் அழுத்தத்தை ஏற்படுத்துவதற்காகவிருக்கலாம்.

- இப்படி அவர் கூறினார்.

(ம)

### சந்நிதியான் ஆச்சிரமத்தில் கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு இன்று

வடமராட்சி,ஜன.9

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறும் வாராந்த நிகழ்வில், தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தில் கற்கும் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மாணவர்களுக்கு கற்றல் உபகாரணங்கள் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் வழங்கப்படவுள்ளன.

இன்றைய நிகழ்வில் 'சிவத்தினை வளர்க்கும் பாக்கியம்' என்ற தலைப்பில் சைவசித்தாந்த பண்டிதர் க.புஸ்பரேகா சொற்பொழிவு நிகழ்த்துவார். நிகழ்வுக்கான அறிமுகவுரையை செ.நடராசா நிகழ்த்துவார்.

(ம-173)

### காலாவதியான உணவுப் பொருள்கள் அழிப்பு

இளவாலை,ஜன.9

இளவாலை, மாகியப்பிட்டி ஆகிய பகுதிகளிலுள்ள வர்த்தக நிலையங்கள் சிலவற்றில் காணப்பட்ட காலாவதியான உணவுப் பொருள்கள் சுகாதாரப் பரிசோதகர்களினால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

கடந்த 3ஆம் திகதி சனிக்கிழமை இளவாலைப் பகுதி சுகாதாரப் பரிசோதகர் சி.திருநிறைச்செல்வன், நவாலிப் பகுதிச் சுகாதாரப் பரிசோதகர் பு.ஜோகதீபன் ஆகியோர் இணைந்து மேற்கொண்ட திடீர்ப் பரிசோதனையின் போது காலாவதியான பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டு அவை அதே கடைகளின் முன்வைத்துத் தீயிட்டு அழிக்கப்பட்டன. (ஒ-8-48)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

லிஸ்ரர் ஜெனரேட்டர் 17½K.W. 3 Phase, கொம்பிரசர் பாத்துடன் 3H.P., 4தட்டு பழம் போடக்கூடியது. ஐஸ் கிறீம் பீற்றருடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 230, இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (26916)

கொழும்பில் இருந்து கொண்டுவரப்பட்ட அழகிய, 2 மாதம் நிரம்பிய, பூச்சி நீக்கப்பட்ட Tariyad (Dulux பெயின்ட் விளம்பரத்தில் வரும்) இன நாய்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஸ்ரீகாந், வெள்ளிவிலாஸ் ஓடை, 424, K.K.S. றோட், யாழ்ப்பாணம். (26949)

## பிரதேச சபை உப அலுவலகம் இடம் மாற்றம்

கொழும்புத்துறை,ஜன.9

அரியாலை சரஸ்வதி நூல் நிலையத்தில் இயங்கிவந்த நல்லூர் பிரதேச செயலக உப அலுவலகம் இடம் மாற்றப்பட்டுள்ளது. அப்பகுதியில் உள்ள நூல் நிலையத்துக்கு முன்பாக உள்ள கட்டடத்துக்கு உப அலுவலகம் மாற்றப்பட்டுள்ளது.

திருநெல்வேலியில் உள்ள நல்லூர் பிரதேச செயலகத்திற்கு அரியாலைப்பகுதி மக்கள் சென்று வருவதில் உள்ள பிரயாணச் சிக்கல்கள நேரவிரயம் என்பவற்றை நிவர்த்தி செய்யும் முகமாக அமைக்கப்பட்ட இந்த உப அலுவலகம் வாரத்தில் இரு நாள்கள் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-30)

## கொழும்பில் இந்தியப் படைத்தளம் கோருகிறார் சுவாமி

கொழும்பு,ஜன.9

இந்து சமுத்திரக் கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் கடற்புலிகளால ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்கு கொழும்பில் இந்தியப் படையினரின் தளம் ஒன்று அமைக்கப்பட வேண்டுமென இந்திய ஜனதாக் கட்சியின் தலைவர் சுப்பிரமணிய சுவாமி இந்தியப் பாதுகாப்பு அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மைக்காலமாக பாக்கு நீரிணைப் பகுதியில் கடற்புலிகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாகத் தெரிவித்துள்ள சுப்பிரமணிய சுவாமி இது தொடர்பாகப் பாதுகாப்பு அமைசசர் ஜோர்ச் பெர்னாண்டஸைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். (ம-8)

## மாம்பழம் சந்தியில் உப தபாலகம்

கொழும்புத்துறை,ஜன.9

அரியாலை உப தபாலகம் மீண்டும் மாம்பழம் சந்தியில் நேற்று முதல் இயங்க ஆரம்பித்துள்ளது.

இந்த உபதபாலகம் 2000ஆம் ஆண்டு இடம்பெயர்வை அடுத்து நாவலர் வீதியில் ஸ்ரான்லிக் கல்லூரிக்கு முன்பாக இயங்கிவந்தது.

இப்பகுதியில் மக்கள் மீளக் குடியமர்ந்ததை அடுத்து மீண்டும் இந்த இடத்தில் அரியாலை உப தபாலகம திறந்து வைக்கப்பட்டுள்ளது. (ஒ-30)

## I.E.M.S. கல்வியங்காடு

22/01/2004 முதல் ஆங்கில பாலர் பாடசாலை ஆரம்பம்.
சகல தரப்பினர்களுக்குமான ஆங்கிலமும் Elocution வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

**I.E.M.S.I.**
G.P.S.ROAD, KALVIYANKADU, JAFFNA.
(26942)

## SHAMROCK

J/ஈச்சமோட்டை வீதி.

**A/L 2006**

ஆரம்பம்: 10.01.2004 Sat.

| | |
|---|---|
| Com.- | பசில் |
| Acc.- | தவா |
| Eco.- | விக்கி |
| I.Q.- | தவசேகர் |
| English- | ஜெயக்குமார் |
| Chris.- | Mrs.A.மல்லிகா |
| Log.- | கலைச்செல்வன் |
| Tamil- | அருள் |
| Geo.- | இக்நேசியஸ் |
| Hindu- | சிவா |

★ Gr③ முதல் O/L வரை
★ புலமைப்பரிசில் Gr⑤
★ Gr. 6&7 English Medium
(26945) (21-12-19-16)

## நல்லூர் கோட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கு

இன்று காலை எட்டு மணிக்கு முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தில் நடைபெறும் செயலமர்வுக்கு கட்டாயமாக சமுகம் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்.வலயம்.
(26952)(26-16-19-21)

## பல்கலைக்கழகம் - யாழ்ப்பாணம்
## கடல்வள அபிவிருத்தி நிலையம்

### இறால் வளர்ப்பு பற்றிய செயலமர்வு

சிலாபம் அக்குவா சேவிஸ் ஸ்தாபனம் (Aqua Service Ltd.), யாழ். மாவட்ட போரூட் நிறுவனம் (FORUT) ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ். பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலையத்தினால் மேற்படி செயலமர்வு **பெப்ரவரி 02ஆம் & 03ஆம்** திகதிகளில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதில் கலந்துகொள்ள ஆர்வமுள்ளவர்கள் ஜனவரி 20 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

விண்ணப்பப் படிவங்களை யாழ். பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(26960)(34-16-19-21)

பணிப்பாளர்,
கடல்வள அபிவிருத்தி நிலையம், யாழ் பல்கலைக்கழகம்.

## சைவவித்தியா விருத்திச் சங்கம்
## வெற்றிடம்
### தையல் ஆசிரியர்

எமது இல்லப்பிள்ளைகளுக்குத் தையல் கற்பிப்பதற்குத் தகுதி வாய்ந்த ஆண்/பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமை: அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து தையலில் பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ், பூவேலை, பின்னல் ஆகியவற்றில் தேர்ச்சி மேலதிக தகைமையாகக் கருதப்படும். சிறுவர்களுக்கான சகலவித ஆடைகளும் தைக்க வேண்டும்.

வயதெல்லை: 25 - 50

ஊதியம்: ஒப்பந்த அடிப்படையில் பேசி நிர்ணயிக்கப்படும்.

கல்வி, தொழிற்தகைமைச் சான்றிதழ் பிரதிகள், இரு நற்சான்றிதழகளுடன் விண்ணப்பம் கிடைக்கவேண்டிய கடைசிநாள் 20.01.2004.

சைவவித்தியா விருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

சோ.பத்மநாதன்,
செயலாளர்.

(C/32657)(34-16-19-21)

## சைவவித்தியா விருத்திச் சங்கம்
## ஜப்பானிய மொழிக் கற்கைநெறி - 2004

மேற்படி ஜப்பானிய மொழிக் கற்கைநெறி மூலம் க.பொ.த. (சா/த) பரீட்சைக்கு ஜப்பானிய மொழியை ஒரு பாடமாகத் தெரிவு செய்ய விரும்புவோரிடமிருந்து வேண்டுகைகள் ஏற்றுக்கொள்ளப்படும். வேண்டுகையாளர்கள் தங்கள் விவரங்களை நேரில் சமர்ப்பிக்கலாம்.

வேண்டுகைகளுக்கான முடிவு திகதி: 20-01-2004
கற்கைநெறிக்காலம்: 10 மாதங்கள்
கற்கைநெறி மூலம்: தமிழ்
பதிவுக்கட்டணம்: 300/-

எதிர்வரும் 01-02-2004 இல் இருந்து வகுப்புகள் தொடங்கும் என்பதை அறியத்தருகின்றோம்.

சோ.பத்மநாதன்,
செயலாளர்,
சைவவித்தியா விருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி, திருநெல்வேலி.

பொ. அரவிந்தன்
கல்வித் திட்டப் பணிப்பாளர்.

(சி-32658) (19-21-16-19)

## 31 ஆம் நாள் நினைவலைகள்

தோற்றம் 1920 - 04 - 16



மறைவு 2003 - 12 - 10

திருமதி

### மாணிக்கம் பாக்கியம்

(இரத்தினம்)

*அன்போடும் பாசத்தோடும் எங்களை வளர்த்த அம்மாவே!*
*உங்கள் நினைவலைகள் எங்கள் நெஞ்சங்களை விட்டு நீங்கா!*
*உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

இன்று (09.01.2004) வெள்ளிக்கிழமை காலை எமது இல்லத்தில நடைபெறுகின்ற அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் நண்பகல் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*கொல்வநாடி,*
*வதிரி, கரவெட்டி.*

- குடும்பத்தினர்.

(26961)(34-21-19-16)

## பயிலுநர் தேவை

தொழில் பேட்டைக்கு ஆள்கள் தேவை.
தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்:

**K.V.S. Hardwares**
123, Stanley Road, Jaffna.
(சி-32655) (26-21-19-16)

## பொங்கல் பண்டிகைக்கால சிறப்புத்தள்ளுபடி

எமது பண்டிகைக்கால மலிவு விற்பனை பொங்கல் பண்டிகையை முன்னிட்டு 15-01-2004 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

### லைடன் புடைவை நிலையம்

410, ஆஸ்பத்திரி வீதி (பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.
☎ 222 2381
(26-21-19-16) (C/32656)

## வேலை ஆள்கள் தேவை

பின்வரும் வேலைகளுக்கு ஆள்கள் தேவை. விண்ணப்பிக்க விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

1. உணவு பரிமாறுவோர் (சப்ளையேர்ஸ்)
2. குசினி வேலையாள்கள், உதவியாளர்
3. உழுந்து கழுவுவோர், அரையல்காரர்
4. ரீ மேக்கர்

சம்பளம் பேசித் தீர்த்துக் கொள்ளப்படும்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:
**விளம்பர இலக்கம்: 2140,**
**உதயன் பணிமனை,**
**யாழ்ப்பாணம்.**
(26-19-16-21) (26939)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 16 ★ 12 ★ 1939



ஆண்டவன் அடியில் 22 ★ 12 ★ 2002

### அமரர் வடிவேலு அருந்தவராசா

(கிருஷ்ணசாமி)

திதி: 10.01.2004

*பாசத்தின் உறைவிடமே, பண்பின் குலவிளக்கே*
*அறிவுரைகள் பல ஊட்டி எம்மை அன்பால் அரவணைத்த*
*அணையாத தீபமே இல்லத்தின் உறவுகளைப் பிரிந்திட்ட*
*ஆண்டொன்றில் ஆறுமோ உம் நினைவு*
*ஆண்டொன்றில், ஆத்ம சாந்திக்கு*
*அனைவரும் பிரார்த்திக்கின்றோம்.*

நாளை (10. 01. 2004) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*கொத்தியகாடு,*
*தொண்டமனாறு.*

அன்பு மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(26934) (21-19-14-22)

## மரண அறிவித்தல்

### திருமதி குமரகுரு சிவனேஸ்வரி

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குமரகுரு சிவனேஸ்வரி 07.01.2004 புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் குமரகுருவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற S.S.அப்புலிங்கம்பிள்ளை - யோகாம்பாளின் மூத்த மகளும் மற்றும் கலாநிதி (கொழும்பு), சுமதி (ஜேர்மனி), பாலமுரளி (ஜேர்மனி), பாலச்சந்திரன் (சுவிஸ்), சசிதரன் (கொழும்பு), ரகுராமன் (ஜேர்மனி), தயாபதி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் M.P.நாகேந்திரன் (கொழும்பு), R.லோகநாதன் (ஜேர்மனி), தேவஸ்ரீ (ஜேர்மனி), இசைமலர் (சுவிஸ்), ஜெயலட்சுமி (கொழும்பு), துளசி (ஜேர்மனி), சிங்காரவடிவேல் (கனடா) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11.01.2004 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தெகிவளை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

**N.குமரகுரு,**
L.Block, No.10, Govt Flats, Colombo-4.
T.P.:595104.

தகவல்:
V.K.பஞ்சமூர்த்தி.

(26956)(34-21-14-19)

ஜி.சீ.ஈ. உயர்தரப்பரீட்சை

# தனிப்பட்ட பரீட்சார்த்திகள் இனி கல்வி அமைச்சில் பதியவேண்டும்

யாழ்ப்பாணம்,ஜன.9

கல்வி அமைச்சில் பதிவு மேற்கொள்ளப்படாத எந்தவொரு மாணவரையும் இனிமேல் தனிப்பட்ட முறையில் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிப்பதில்லையெனக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

புதிய கல்விக்கொள்கைகளுக்கு அமைய ஜி.சீ.ஈ. உயர்தரப்பரீட்சை தொடர்பாக ஒப்படை மேற்கொள்வது கட்டாயமாக்கப்படவுள்ளது. அத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளும் முகமாகவே கல்வியமைச்சு இத்தீர்மானத்தை எடுத்துள்ளது.

இப்புதிய தீர்மானத்துக்கமைய ஜி.சீ.ஈ. உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் கல்வி அமைச்சில் தமது பதிவுகளை மேற்கொண்டபின்னர் கல்வியமைச்சினால் தெரிவுசெய்யப்படும் பாடசாலைகளில் சேர்ந்து தமது ஒப்படைகளை சமர்ப்பிக்க வேண்டுமென கல்வியமைச்சின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

கல்வியமைச்சில் தமது பதிவுகளை மேற்கொள்ளும் மாணவர்களுக்குத் தமது வதிவிடங்களுக்கு அண்மையில் உயர்தர வகுப்புக்கள் நடத்தப்படும் பாடசாலைகள் வழங்கப்படும்.

அவர்களது ஒப்படை தொடர்பாக கல்வியமைச்சினால் அறிவிக்கப்படும். அதன்பின்னர் அப்பாடசாலை அதிபர் ஊடாக அம் மாணவரினால் சமர்ப்பிக்கப்படும் ஒப்படை தொடர்பான அறிக்கை கல்வியமைச்சுக்கு அனுப்பப்படும்.

தனிப்பட்டமுறையில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களாலும் ஒப்படை சமர்ப்பிக்கப்பட வேண்டுமென இதற்கு முன்னரும், கட்டாயமாக்கப்பட்டிருந்த போதிலும் இதுவரையில் அது நடைமுறைப்படுத்தப்படவில்லையென்பது கல்வியமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

ஒரு சில மாணவர்கள் ஒப்படைகளைச் சமர்ப்பிக்காமல் பரீட்சை எழுதுவதற்காகவே தனிப்பட்டமுறையில் பரீட்சை எழுதியுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

கடந்த ஆண்டு உயர்தரப் பரீட்சைக்குத் தனிப்பட்ட முறையில் தோற்றியுள்ள மாணவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தால் அதிகரித்திருந்தது.

பரீட்சைத்திணைக்களத்திற்கு விண்ணப்பிக்கும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பெயர்ப் பட்டியல், கல்வியமைச்சில் பதிவு செய்யப்பட்டுள்ளவர்களின் பெயர்ப்பட்டியலோடு ஒப்பிட்டுப் பார்க்கப்படவுள்ளது என்றும் அவ்வதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## 11 மாணவருக்கு புலமைப்பரிசில்

கொழும்புத்துறை,ஜன.9

அரியாலை அபிவிருத்திச் சங்கம் வருடாந்தம் வழங்கிவரும் 5 ஆம் ஆண்டுப் புலமைப்பரிசில் உதவி இந்த ஆண்டு 11 மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அண்மையில் அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வில் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட கற்றலில் ஆர்வமுள்ள 11 மாணவர்களுக்கே இந்த உதவி வழங்கப்பட்டது. (ஒ-30)

# பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் மிதிவெடிகள் அகற்றும் பணி

சண்டிலிப்பாய்,ஜன.9

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் இராணுவத்தின் மிதிவெடி அகற்றும் பிரிவு கடந்த ஒருமாத காலமாக தினமும் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுவருகின்றது.

சுமார் ஐந்து ஏக்கர் விஸ்தீரணமுடைய இக்கல்லூரி வளவில் பகுதி பகுதியாக மிதிவெடிகளை தேடும்பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றபோதிலும் இதுவரை மிதிவெடி எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை என்று இப்பிரிவுக்கு பொறுப்பான இராணுவ அதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை - மிதிவெடிகளை கண்டுபிடிப்பதற்காக சில இடங்கள் அடையாளம் இடப்பட்டு கட்டப்பட்டிருந்த நைலோன் கயிறுகளை விஷமிகள் சிலர் அறுத்துச்சென்றுள்ளனர்.

இதுபற்றி கல்லூரி அதிபர் செல்வி பொ.கந்தசாமியும் கடும்கண்டனம் தெரிவித்தார். தாம் நீண்டகாலமாக சிரமப்பட்டு விடுத்த வேண்டுகோளை அடுத்தே இந்த மிதிவெடி அகற்றும் பணி நடக்கிறது.

இவ்வேளையில் ஒரு சில சமூக விரோதிகள் நைலோன் கயிறுகளை அபகரித்துக்கொண்டு போயுள்ளமை கவலையை ஏற்படுத்துவதாக உள்ளது என்றும் -

அவர் தெரிவித்தார். (ம-135)

## காலத்தின் பதிவு



உடல் தளர்ந்தாலும் உள்ளம் தளரவில்லை — படம்: தீபன்

## வாழ்க்கைச் செலவு சுட்டெண் அதிகரிப்பு

கொழும்பு,ஜன.9

கடந்த டிசெம்பர் மாதத்துக்கான வாழ்க்கைச் செலவு சுட்டெண் அதற்கு முன்னைய மாதங்களை விட உயர்வடைந்ததாக இலங்கை மத்தியவங்கி தெரிவித்துள்ளது.

2003 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் 3384.1 புள்ளியாக இருந்த இவ் வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் கடந்த டிசெம்பர் மாதத்தில் 3487.8 புள்ளியாக உயர்ந்துள்ளது. 103.7 புள்ளிகள் அதிகரிப்பு கொண்ட இவ்வாழ்க்கைச் செலவுச் சுட்டெண்ணின் சதவீத அதிகரிப்பு 3.1 வீதமாகும்.

இந்த அதிகரிப்புக் காரணமாக பொதுமக்களின் அன்றாட உணவுப் பொருள்களின் விலைகளிலும் அதிகரிப்பு ஏற்பட்டதாக மத்திய வங்கியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-8)

## முன்பள்ளி ஆசிரியருக்கான செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஜன.9

நல்லூர்க் கோட்டத்தில் உள்ள 64 முன்பள்ளிகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பாடத்திட்டச் செயலமர்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு யாழ். முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தில் ஆரம்பமாகவுள்ளது.

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் நிதியுதவியுடன் நடைபெறும் இச்செயலமர்வில் ஒவ்வொரு முன்பள்ளியிலிருந்தும் ஒவ்வொரு ஆசிரியர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ம-8)

# பொலித்தீன் பாவனையை கட்டுப்படுத்த நடவடிக்கை

வலிகாமம்தெற்கு,ஜன.9

பொலித்தீன் உறைகள் பாவனையைக் கட்டுப்படுத்த வலிகாமம் தெற்கு பிரதேச சபை மூலம் தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளதாக வலிகாமம் தெற்கு பிரதேசசபை செயலாளர் திருமதி ச.சொக்கலிங்கம் அறிவித்துள்ளார்.

முதற்கட்டமாக சுன்னாகம் பிரதேச சபை காரியாலயம், உடுவில், ஏழாலை உப அலுவலகங்கள் மற்றும் ஏழாலை, சுன்னாகம், மருதனார்மடம் போன்ற பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சந்தை போன்ற இடங்களில் பொலித்தீன் பாவனை தடைசெய்யப்படவுள்ளது.

அதனைத் தொடர்ந்து ஏனைய இடங்களிலும் பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்க நிர்வாக முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் சீ.மன்னம் பெருமா, பொலித்தீன் உறை பாவனை தொடர்பாக உரிய நிறுவனங்களுக்கு அறிவு புகட்டி அவர்களின் ஒத்துழைப்புடன் பொலித்தீன் கடதாசிப் பாவனைய்ய கைவிடவும் சூழலைப் பாதுகாக்கவும் உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவித்திருந்தார். அதற்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக திருமதி.ச.சொக்கலிங்கம் தெரிவித்தார்.

பொலித்தீன் உற்பத்திப்பொருள் பாவனையால் சூழலுக்கு ஏற்படும் கேடுகளை குறைப்பதற்காக பல்வேறு பொலித்தீன் உற்பத்திப்பொருள்களை அரச அலுவலகங்கள், பாடசாலைகள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் பொது இடங்களில் பாவித்தலை தடைசெய்யுமாறும் -

பொதுவைபவங்களில் சோடனைகளுக்காக பொலித்தீன் உற்பத்திகளை பயன்படுத்துவதை தடை செய்யுமாறும் பொலித்தீன் பொருள்களின் பாவனையைக் கைவிட்டு நாட்டின் சூழலை பாதுகாக்க ஒத்துழைக்குமாறும் -

அமைச்சு செயலாளர் சீ.மன்னம் பெருமா கோரிக்கை விடுத்துள்ளார். (ம-152)

# யாழ். நீதிமன்றால் கடந்த ஆண்டில் மட்டும் வழக்குகள் தொடர்பாக ரூ.65 லட்சம் அறவீடு

## ரூபா 27 லட்சம் உள்ளூராட்சி சபைகளுக்கு வழங்கப்பட்டது

யாழ்ப்பாணம்,ஜன.9

யாழ். நீதிமன்றினால் கடந்த வருடம் மட்டும் வழக்குகள் தொடர்பாக 65 லட்சத்து 89 ஆயிரத்து நூறு ரூபா அறவிடப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஜனவரி முதல் டிசெம்பர் வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற வழக்குகளில் தண்டப் பணம், பிணை வைப்புக்கள் நானாவிதமான வைப்புக்கள் மற்றும் பிரதி பண்ணல் கட்டணம் என்பன மூலமே இந்தத தொகை அறவிடப்பட்டுள்ளது.

இந்த நிதியினை மாநகர மற்றும் பிரதேச சபைகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நீதி அமைச்சு யாழ். நீதிமன்றத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது.

இதன் பிரகாரம் யாழ் மாநகர சபை, நல்லூர் பிரதேசசபை, வலி. கிழக்கு பிரதேசசபை, வலி. தெற்கு பிரதேச சபை மற்றும் வலி. தென்மேற்கு பிரதேச சபை ஆகியவற்றிற்கு 27 லட்சத்து 89 ஆயிரத்து 700 ரூபா வழங்கப்பட்டுள்ளதாகவும் -

பிணை வைப்புக்கள் நானாவித வைப்புக்கள், பிரதி பண்ணல் கட்டணங்கள் தொடர்பான கொடுப்பனவுகளாக 25 லட்சத்து 53 ஆயிரத்து 400 ரூபா வழங்கப்பட்டதாகவும் யாழ். நீதிமன்றப் பதிவாளர் தெரிவித்தார். (ம-5)

உரும்பிராய் - மருதனார்மடம், புன்னாலைக்கட்டுவன் - சுன்னாகம்

# வீதிகளில் இரவில் செல்வோரிடம் அச்சுறுத்தி வழிப்பறி செய்ய சிலர் முயற்சி

தெல்லிப்பழை,ஜன.9

உரும்பிராய் - மருதனார்மடம் வீதியிலும், புன்னாலைக்கட்டுவன் - சுன்னாகம் வீதியிலும் நள்ளிரவில் பயணம செய்வோரை சில ஆயுததாரிகள் அச்சுறுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர்களால் அச்சுறுத்தப்பட்ட சிலர் இத்தகவலைத் தெரிவித்தனர்.

நள்ளிரவில் வீதியில் மோட்டார் சைக்கிளில் கத்தி, பொல்லுகளுடன் இவர்கள் வீதியால் செல்லும் பயணிகளை வழிமடக்கிக் கொள்ளையிட முயல்கின்றனர். தமது வாகனங்களை நிறுத்தாது செல்லும் பயணிகளை மோட்டார் சைக்கிள்களில் பின் தொடர்ந்து அச்சுறுத்துகின்றனர் என்று பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின்றனர்.

உரும்பிராய் - மருதனார்மடம் வீதியில் இரவு 10மணியளவில் பயணம் செய்த சுன்னாகம் வர்த்தகர் ஒருவரை இத்தகையவர்கள் மடக்கிக் கொள்ளையிட முயன்றனர் என்று கூறப்பட்டது. அச்சத்தினால் தனது மோட்டார் சைக்கிளை வேகமாகச் செலுத்திய அவரைப் பின்தொடர்ந்து மருதனார்மடம் சந்திவரை ஆயுததாரிகள் துரத்திச் சென்றுள்ளனர்.

அதேபோன்று, புன்னாலைக்கட்டுவன் - சுன்னாகம் வீதியில் இரவில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்து கொண்டிருந்த தம்பதியரை வீதியில் வலிப்பு வந்தவரைப்போல துடித்தபடி விழுந்து கிடந்த ஒருவர் கைகாட்டி மறித்துள்ளார். தம்பதியர் மோட்டார் சைக்கிளை நிறுத்தாது சென்றபோது வீதியில் விழுந்து கிடந்தவர் திடீரென எழுந்து அவர்களைத் துரத்தியுள்ளார். தொடர்ந்து மோட்டார் சைக்கிளிலும் சிலர் தங்களைத் துரத்தும் முயற்சியில் ஈடுபட்டதாக அத்தம்பதியர் தெரிவித்தனர்.

இத்தகைய செயல்கள் இவ்வீதிகளில் தற்போது அதிகரித்துள்ளதாகப் பொதுமக்கள் கூறுகின்றனர். இதனால் இரவில் பொதுமக்கள் பயணம் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அண்மையில் இவ்வீதியில் பயணம் செய்த இளைஞரொருவரிடம் இருந்து துப்பாக்கி முனையில் மோட்டார் சைக்கிளொன்று அபகரிக்கப்பட்டதும் தெரிந்ததே. (ம-150-49)

# உரிய முறையில் அனுப்பப்படும் முறைப்பாடுகளே கவனத்தில் கொள்ளப்படும்

## சுகாதார பிரதிப்பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.9

பிராந்திய சுகாதாரப் பணிமனைக்கு அனுப்பிவைக்கப்படும் முறைப்பாடுகளில் கையொப்பம், முகவரி என்பன உரிய வகையில் குறிப்பிடப்படும் முறைப்பாடுகளே கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும் - என சுகாதார சேவைகள் மாகாண பிரதிப்பணிப்பாளர் கேரி. சிவபாதம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் தெரிவித்ததாவது:-

கடந்த ஆண்டுமுதல் வைத்தியசாலை, சுகாதார ஊழியர்களின் பிரச்சினைகள் உள்ளிட்ட பல முறைப்பாடுகள் பிராந்திய சுகாதாரப் பணிமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அவற்றில் பெரும்பாலானவை பெயர், முகவரி என்பன இல்லாமலேயே அனுப்பப்பட்டுள்ளன.

இவ்வாறான முறைப்பாடுகள் எம்மால் கவனத்தில் கொள்ளப்படமாட்டா.

முறைப்பாடுகளில் அனுப்பி வைப்பவரின் விவரங்கள் எவையும் இல்லாவிட்டால் அவற்றை எம்மால் உறுதிப்படுத்த முடியாது.

எனவே, இனிமேல் அனுப்பி வைக்கப்படும் முறைப்பாடுகளில் உரிய வகையில் கையொப்பம், முகவரி என்பன இருந்தால் அது தொடர்பாக நாம நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும். அவ்வாறு இல்லாத முறைப்பாடுகள் அனைத்தும் கவனத்தில் எடுக்கப்படாது நிராகரிக்கப்படும் - என்றார். (ம-8-6)

# MEDICINE IN RUSSIA

**SMOLENSK STATE MEDICAL ACADEMY**
Internationally Recognized, Including
SriLanka Medical Council and W.H.O.
DOCTOR OF MEDICINE (MD)
MEDICINE:- 6 YEARS (IN ENGLISH)

2003/2004 இற்கான கல்வியாண்டு பிரிவு II
January இல் ஆரம்பம **Admission** மற்றும் மேலதிக தகவல்களை சிரேஷ்ட மருத்துவ மாணவர்கள் மூலம் நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம்.
G.C.E.A/L பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றவர்களுக்கு அனுமதியில் முன்னுரிமை.

**T.SAYANTHAN**

672, K.K.S.Road,
Jaffna.
T.P.021 - 222- 2536.

19B,Pokkunu Road,
Kawdana Road,
Dehiwala.
0777 - 316273,
0112 736240.

(சி-32676)(36-11-13)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட கலாசாரப் போட்டிகளில் கிராமிய நடனப் பிரிவில் முதலிடம் பெற்று, ஜனாதிபதி விருது 2003 இனை வென்ற நடன ஆசிரியரும், சாவ. தென்னகத்தாரகை விளையாட்டுக்கழக உறுப்பினருமாகிய

## திரு.கி.ஜோண்சன்

அவர்களையும் அவர்தம் குழுவினரையும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

டச்சு வீதி,
சாவகச்சேரி.

தென்னகத்தாரகை வி.க.
**SOUTHERN STARS SPORTS CLUB**
**CHAVAKACHCHERI.**

(சி-32685)(36-11-13)



## யாழ்.கந்தர் மடம்
## ஸ்ரீ மணிகண்ட சபை ஐயப்பன் யாத்திரை குழு



எரிமேலியில் பேட்டை துள்ளும் போது எடுக்கப்பட்டது

யா/ கந்தர்மடம்,
நீராவியடி.

(26962)(36-11-13)

மணிகண்ட சபை.


## கசிப்பு விற்ற 6 பேருக்கு ரூ.78,000 அபராதம்

யாழ்ப்பாணம்,ஜன.9

கசிப்பு உற்பத்தி செய்தமை மற்றும் விற்பனை செய்தமை ஆகிய குற்றச் சாட்டுக்களின் பேரில் கைது செய்யப பட்ட அறுவருக்கு யாழ். நீதிமன்றம் 78 ஆயிரம் ரூபாவை அபராதமாக விதித்துள்ளது.

மணியந்தோட்டம், கொழும்புத்துறையைச் சேர்ந்தவர்களான ஜஸ்ரின் றொபின், அந்தோனிப்பிள்ளை வின்சன், வளன்புரம் கொழும்புத்துறையைச் சேர்ந்த கபிரியல் செல்வம், உரும்பிராய கிழக்கைச் சேர்ந்த பிறேமதாஸா சசிதரன், பாசையூரைச் சேர்ந்த சுவாக்கின அன்ரனி மற்றும் குருநகரைச் சேர்ந்த கஸ்பின் ரஞ்சன் ஆகிய அறுவரையும் தலா 10ஆயிரம் ரூபா தண்டப் பணமும் தலை 3ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறு யாழ். நீதிமன்ற நீதிவான் இ.த.விகனராஜா உத்தர விட்டார். (ம-5)

## சிகை ஒப்பனையாளர் சங்கக் கூட்டம்

தென்மராட்சி சிகை ஒப்பனையாளா சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று சங்கத்தலைவர் சிகணேசரட்ணம் தலைமையில் மீசாலை புதுச் சந்தையில் உள்ள சங்கத் தலைமையகத்தில் காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது. தென்மராட்சியிலுள்ள அனைத்து சிகை ஒப்பனை நிலைய உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்களை இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு மேற்படி சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேலும் அங்கத்தவர்களுக்கான மரணக் கொடுப்பனவு உதவித்தொகை ஐயாயிரம் ரூபாவில் இருந்து பத்தாயிரம் ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது என்றும். சித்திரைப்பௌர்ணமி, ஆடி அமாவாசை ஆகிய தினங்களில் சிகை ஒப்பனை நிலையங்களுக்கு விடுமுறை வழங்கப்பட வேண்டும் என்றும் சங்கம அறிவித்துள்ளது. (ஒ-75)


## பொருளியற் கல்லூரி

யாழ். நகர் - இணுவில்

**A/L 2006**

கலை - வர்த்தகம்
மீண்டும் ஒரு புதிய பிரிவு
ஆரம்பம் : 10-01-2004 - சனி

யாழ். நகர் -
கலை - 9.00 a.m
வர்த்தகம் - 10.00 a.m.
இணுவில் -
கலை - 9.00 a.m.
வர்த்தகம் - 3.00 p.m.

(26976)



## BARATHY

சித்தன்கேணி

**தரம் 4 முதல் 11 வரை**

புதிய பிரிவுகள் இடம்பெறுகின்றன.

**குறிப்பு:** இம்முறை மாணவர் தொகை அதிகரித்துள்ளதால் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளது. இனனும சில மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும்.

9 முதல் 11 வரை வகுப்புக்கு 16 மாணவர்களுக்கும்
6 முதல் 8 வரை வகுப்புகளுக்கு 14 மாணவர்களுக்கும்
தரம் 4, 5 புலமைப்பரிசில் இவற்றிக்கு 12 மாணவர்களுக்கும் அனுமதி வழங்கப்படும். (26975)


## கண்ணீர் சமர்ப்பணம்

தோற்றம்
08.05.1934



மறைவு
08.01.2004

### சுவாம்பிள்ளை மைக்கல்பிள்ளை

(கரவெட்டி வடக்கு - கரவெட்டி)

மண்ணின் விடுதலைக்காக வித்தாகிப்போன
மேஜர் சோதியாவின் தந்தையே!
காலத்தின் தேவை உணர்ந்து கரிகாலன்
சேனையில் மகளை இணைத்த வீரத்தந்தையே
பொருண்மியத்திற்கு பொக்கிஷமாக
அரசியலுக்கு அச்சாணியாக
நீ ஆற்றிய சேவை அளப்பரியது.
அடைக சாந்தி! சாந்தி !! சாந்தி!!!

தமிழீழ விடுதலைப் புலிகள்,
அரசியல் துறை , வடமராட்சிக் கோட்டம்.

(சி-32679)(36-11-13)

# மரண அறிவித்தல்கள்

## சுவக்கீன் அந்தோனிப்பிள்ளை [சிங்கம்]

(முன்னாள் குத்தகையாளர்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் புத்தளத்தில் வசித்தவருமான சுவக்கன் அந்தோனிப்பிள்ளை (சிங்கம்) அவர்கள் நேற்று (08-01-2004) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இறுதிச்சடங்கிற்காக புத்தளத்தில் இருந்து 61/1,மவுண்கார்மேல் வீதியில் உள்ள அன்னாரது இல்லத்திற்கு எடுத்து வரப்படும்.

நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*61/1, மவுண் கார்மேல் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
அ. பீற்றர்குமார் *(மகன்)*

(26967)(36-11-13)

## திருமத தங்கபூரணம் கமலநாதன்

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் சங்கத்தானை, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கபூரணம் கமலநாதன் அவர்கள் (2004-01-07) புதன்கிழமை இரவு 11.00மணியளவில் சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் இளைப்பாறிய கல்விப்பணிப்பாளர் சி.கமலநாதன் அவர்களின் அன்பு மனைவியும் விஜயசுந்தரம், உருத்திரசுந்தரம் (இளைப்பாறிய இ.போ.ச.சாலை முகாமையாளர்), திருமதி கா. சௌந்தரம், யோகராஜா, தியாகராஜா, சோமசேகரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(2004.01.09) வெள்ளிக்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரின் சங்கத்தானை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கந்தசாமி கோயிலடி,*
*சங்கத்தானை, சாவகச்சேரி.* (26966) (26-11-13-36)

தகவல்:
*சி.கமலநாதன் (கணவர்)*

## பொன்னம்பலம் சுப்பிரமணியம்

மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னம்பலம் சுப்பிரமணியம் நேற்று (08.01.2004) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும் விக்கினேஸ்வரன் (கனடா), நந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும் சுமதி (கனடா), நாகேஸ்வரன் ஆகியோரின் மாமனாரும் விரோசன், விதுனா, விதுரா, யசிகரன், சேருஜா ஆகியோரின் பேரனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2004) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா.நந்தினி *(மகள்)*,
நா.நாகேஸ்வரன் *(மருமகன்)*,

*மீசாலை மேற்கு,*
*மீசாலை.* (26968) (26-11-13-36)


# வீடுகள், கடைகள், காணித்துண்டுகள் விற்பனைக்கு

யாழ். நகர வர்த்தக மையப் பகுதியலான ஆஸ்பத்திரி வீதி, கஸ்தூரியார் வீதி, மின்சார நிலைய வீதி, ஸ்ரான்லி வீதி,கே.கே.எஸ்.வீதி ஆகிய பகுதிகளில் கடைகளும், கடைகள் கட்டக்கூடிய காணித்துண்டுகளும் பிறவுண் வீதி, நாவலர் வீதி, கோயில் வீதி மற்றும் கொழும்பில வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, கொள்ளுப்பிட்டியிலும் அமைந்த நவீன வசதிகளுடனான வீடுகளும் உடன் விற்பனைக்குண்டு.

**குறிப்பு: பொது ஸ்தாபனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்**

தொடர்பு:-விற்பனை முகவர் – கனகசபை தர்மகுலசிங்கம்

பழமுதிர் சோலை,
அம்மன் வீதி,
காரைநகர்.

இல.150, அம்மன் ஜுவலறி,
காலி வீதி,
வெள்ளவத்தை.

144/2, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(26971)(36-11-13)



கோண்டாவில் ஸ்ரீ வாகீஸ்வரி கல்வி வளர்ச்சிக் கழகத்தினர் அண்மையில் சுகாதார வாரமொன்றை பிரகடனப்படுத்தியிருந்தனர். இதன்போது வீடொன்றின் கிணறுக்கு குளோறின் இடும் நடவடிக்கையில் அப்பகுதிக்கான பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தலைமையிலான குழுவினர் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட படம். (படம் :இணுவில் செய்தியாளர்.)

# ஜப்பானியக் குழு வருகிறது

ஜப்பான் நாட்டைச் சேர்ந்த அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள 10 பேர் அடங்கிய குழு ஒன்று எதிர் வரும் 23ஆம் திகதி யாழ். குடாநாட்டிற்கு வருகை தரவுள்ளது.

விடுதலைப் புலிகளிற்கும் - அரசிற்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் ஏற்பட்ட சமாதான சூழ் நிலையில் யாழ். குடாநாட்டு நிலைமை எவ்வாறு அமைந்துள்ளன என்பதனை மதிப்பீடு செய்யும் பொருட்டே இக்குழு வருகிறது என்று தெரிவிக்கப்பட்டது.

குழுவினர் அன்றையதினம் யாழ். செயலகத்தில் அரசாங்க அதிபர் செ. பத்மநாதனுடன் யாழ். குடாநாட்டு புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகள தொடர்பாக கலந்துரையாடவுள்ளதுடன்

யுஎன்எச்சிஆர், ஜிரிஇசற், யுஎன்டிபி, இலங்கை யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்ட பிரதிநிதிகள், யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பிரதிநிதிகள் மற்றும் பொலீஸ் தரப்பினரையும் அவர்கள் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.


**NEW SCIENCE CENTRE**
மணிக்கூட்டு வீதி, யாழ். நகர்.
A/L 2005
"INORGANIC CHEMISTRY"
Sat., Sun. 11-12 a.m.
By: அன்பழகன்
(26941)

**வெளிவந்துவிட்டது!**
2004 ஆம் ஆண்டு
புதிய பாடத்திட்டம்
தமிழ் மொழியும் இலக்கியமும்
செயல் நூல்
தரம் 6
ஆக்கம்: பண்டிதர் திரு.சிவநடராசா



ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை
யாழ்ப்பாணம்.

**A/L 2006**
**வர்த்தகப் பிரிவு**
Acc. - திரு.பாலவாசன் 6.30 - 7.30
Eco. - திரு.மோகன் 7.30 - 8.30
B.St. - திரு.யசோ 8.30 - 9.30
ஆரம்பம்: 10-01-2004
சனி 6.30 a.m.
BEACON
வெலிங்டன் சந்தியருகில்
Note:- தனிப்பாட அனுமதி உண்டு
(26940)

**விற்பனையாகின்றது**
**புதிய பாடத்திட்டம் 2004**
தரம் - 6
★ தமிழ்மொழியும் இலக்கியமும்
ஆக்கம்:க.துரைசிங்கம்.
★ கணிதப்பயிற்சி
ஆக்கம்: வி.ச.சுப்பிரமணியம்
வெளியீடு
ஸ்ரீலங்கா புத்தகசாலை
234, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 222.2573
(சி-32682)(36)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் மகப்பேற்று பயிற்சி மாணவியான
தாதிய உத்தியோகத்தர்
திருமதி கமலினி பவளகாந்தன அவர்களின்
அன்புத் தாயார்

### திருமதி பொன்மணி பஞ்சாட்சரம்

அவர்களது மறைவிற்காக
எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு,
அன்னாரின்ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கிறோம.

அதிபர், போதனாசிரியர்கள்,
தாதிய மாணவர்கள்,
மகப்பேற்று மாணவிகள்,
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.

*தாதியர் பாடசாலை,*
*யாழ்ப்பாணம்.*
(26972)(36-11-13)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 21 . 02 . 1938



மறைவு 11 . 12 . 2003

### கதிரேஸ் அப்புகாமி அன்னபூரணம்

அம்மா என்ற ஒலி - எம்
இதயத்தை உடைக்கின்றது - இனி நாம்
இவ்வுலகில் என்று காண்போமோ
தன்னந்தனியாகி தவிக்கின்றோம் அம்மா
பாசத்தில் எம்மை பரிதவிக்கவிட்டு
பறந்து சென்றீரோ
பார்க்கின்ற இடமெல்லாம்
பார்க்கின்றோம் பாசமுள்ள -
உம் முகத்தை.

நாளை (10.01.2004) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அந்தியேட்டிக்கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறுகின்ற மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிள்ளைகள். மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்.

*தும்மலை வீதி,*
*இளவாலை.*
தகவல்:
க.சின்னராசா (கிட்டினன்) (26974)(31-11-13)

# தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

டது. இந்த அணி மதவாத சக்திகளை தோற்கடித்து மத்தியில் ஆட்சியை அமைக்கும் - என்றார்.

"நீங்கள் கூட்டுச் சேரப் போகும் தி.மு.க. அணியில் உள்ள ம.தி.மு.க.வுக்கும் ராஜீவ் காந்தியைக் கொன்ற விடுதலைப் புலிகளுக்கும் இடையே நெருங்கிய தொடர்புள்ளதே!" - என்று செய்தியாளர்கள் கேட்டபோது.

"கடந்த காலத்தில் என்னென்னவோ நடந்தன. அவற்றில் எல்லாம் மீண்டும் நுழைய காங்கிரஸ் தயாராக இல்லை. பழைய விடயத்தை மீண்டும், மீண்டும் கிளற வேண்டியதில்லை. இந்தக் கூட்டணி உறுதி செய்யப்பட்டுவிட்டது. தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின் இடங்கள் பகிர்வு குறித்து பேசுவோம்" - என்றார்.

"அடுத்த பிரதமர் பதவிக்கு காங்கிரஸ் சார்பில் நீங்கள் போட்டியிடுவீர்களா?" - என்று கேட்டபோது -

அதை மக்களும், மதசார்பற்ற கட்சிகளின் தலைவர்களும் சேர்ந்து முடிவு செய்வார்கள். பிரதமர் யார் என்று சொல்லாமல் தேர்தலில் நிற்பதால் காங்கிரஸுக்கு எந்தப் பின்னடைவும் ஏற்படாது.

"கருணாநிதி வெறும் ஒரு மாநிலத்தின் அரசியல் தலைவர் மட்டும் அல்லர். அவர் இந்த நாட்டின் மிக முக்கிய தலைவர்களில் ஒருவர் என்றே நான் நினைக்கிறேன். இந்த நாட்டை உருவாக்கிய தலைவர்களில் மிக முக்கியமானவர் கருணாநிதி. அவரது வாழ்வும் அவரது செயல்களுமே அதற்கு சாட்சி. தமிழகத்தில் மட்டுமல்ல, நாட்டின் அனைத்துத் தரப்பினரின் ஏகோபித்த மரியாதைப் பெற்ற தலைவர் அவர்.

"தமிழகத்தில் கூட்டணியில் எந்தெந்த கட்சி இருக்கவேண்டும்? தேர்தலில் யாருக்கு எத்தனை இடம்தர வேண்டும் என்பவற்றை எல்லாம் கலைஞர் முடிவு செய்வார்" - என்றார் அவர்.

இதையடுத்து செய்தியாளரிடம் கருணாநிதி கூறியதாவது:-

"டாக்டர் மன்மோகன் சிங்குடன் நடத்திய பேச்சுக்கள் மிகுந்த திருப்தி அளித்தன. மிக நல்ல சூழலில் பேச்சு நடந்தது. பாட்டாளி மக்கள் கட்சி இன்னும் மத்தியில் ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் தொடர்ந்து இருந்து வந்தாலும் அதன் நிறுவுனர் டாக்டர் ராமதாஸ் வரும் 12ஆம் திகதி என்னுடன் பேசுவதாக கூறியிருக்கிறார். பா.ம.க.வும் எமது கூட்டணியில் சேரும் என்று நம்புகிறேன்.

"இன்று ஏற்படுத்தப்பட்ட இந்த முற்போக்குக் கூட்டணியில் ம.தி.மு.க. நிச்சயம் இடம்பெறும். அதில் யாருக்கும் எள்ளளவும் சந்தேகமே வேண்டாம்" - என்றார்.

இதற்கிடையே, காங்கிரஸ் கட்சியின் சார்பில் இனி தமிழக கூட்டணி விவகாரங்களை மன்மோகன் சிங் தான் கவனிப்பார் என அகில இந்திய காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி அறிவித்துள்ளார்.

1980ஆம் ஆண்டில்தான் கடைசியாக தி.மு.க.வும் இந்திரா காந்தி தலைமையிலான காங்கிரஸும் கூட்டணி வைத்தன.

கருணாநிதியுடன் கூட்டணி தொடர்பாகப் பேச கர்நாடக முதல்வர் கிருஷ்ணாவை அனுப்பவே காங்கிரஸ் முன்னதாகத் திட்டமிட்டது.

ஆனால், காவிரி விவகாரத்தில் கிருஷ்ணாவின் மீது தமிழகத்தில் இன்னமும் அவப்பெயர் நிலவிவரும் நிலையில், அவருடன் பேச்சு நடத்துவது நன்றாக இருக்காது என திமுக தரப்பிலும், தமிழக காங்கிரஸ் தரப்பிலும், டில்லி காங்கிரஸ் தலைமைக்கு எடுத்துச்சொல்லப்பட்டது. இதையடுத்தே கிருஷ்ணாவுக்குப் பதிலாக மன்மோகன சிங்கிடம் இந்தப் பொறுப்பை சோனியா ஒப்படைத்துள்ளார்.

(முன்னர் வந்த செய்தி 3ஆம் பக்கத்தில்)

## பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கப்பட்டது.

இதற்கிடையில், பல்கலைக்கழக வளாகப் பகுதி எங்கும் பல்கலை நிர்வாகத்தைக் கண்டிக்கும் வகையிலான பதாகைகள் காணப்பட்டன.

செவ்வாய்க்கிழமை, ஊழியர் சங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு நேற்று மாலை பல்கலைக் கழக நிர்வாகம் பதில் அனுப்பி இருந்தது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பேரவைக் கூட்டத்தில் ஆராயப்பட்ட தற்கமைவாக அவர்களுக்கு பதில் அனுப்பப்பட்டிருந்தது.

இதேவேளை - தடைப்பட்டுள்ள தமது கற்றல் நடவடிக்கைகளை வழமைக்குக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரி விஞ்ஞானபீட மாணவர்கள் நேற்றுக்காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். துணைவேந்தரை அவரது அலுவலகத்துக்குள் நுழையவிடாது மாணவர்கள் தடுத்து வைத்திருந்தனர்.

எனினும்விஞ்ஞானபீடாதிபதி தலையிட்டு மாணவர்களை விலகிப் போகச் செய்தார் எனக் கூறப்பட்டது. (எ-9)


**BRIGHTMAN**
நாவலர் வீதி, யாழ். நகர்.
புதிய பிரிவு
SPOKEN ENGLISH WITH GRAMMAR
By; BRITTO
Sat, Sun - 1.00 p.m.
A/L மாணவர்களுக்கான
GENERAL ENGLISH WITH GRAMMAR
By; PN. SUTHARSAN
Sat, Sun - 4.00 p.m.
அனுமதிகள் வழங்கப்படுகின்றன
(26936)

**லஷ்சுமி சினிமா** இணுவில்
மாதவன், ஜோதிகா நடித்த
பிரியமான தோழி
காட்சி நேரம் : 10.30, 2.30, 6.30. (பு.நே.) (ரீலீஸ்)
(C-32686)(32)

**லிபேட்டி** அச்சுவேலி
சிலம்பரசன், ராஜேந்தர், சர்மி நடித்த
காதல் அழிவதில்லை (ரீலீஸ்)
தினசரி : 3.00, 7.00.
சனி, ஞாயிறு : 11.00, 3.00,7.00 (பு.நே.)
(C-32371) (32)

**நாகம்ஸ்** சுன்னாகம்



ஷாம், அருண்குமார், குட்டி ராதிகா, செந்தில் நடித்த
இயற்கை
தினசரி காட்சி : 11.00, 3.00. (பு.நே.) (ரீலீஸ்)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 7 மணி
15 ஆம் திகதி முதல் கமல், அபிராமி, நெப்போலியன், நாசர் நடித்த
விருமாண்டி
(சண்டியர்)
★ இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
(C-31620)(32)

**நிரஞ்சனாஸ்** சங்கானை
இன்று முதல் விஜய் ஜோதிகா நடித்த
குஷி (ரீலீஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி சனி ஞாயிறு
KEOMA
இரவு 8.45 இற்கு (பு.நே.)
(C-32370) (12)

**ராஜா** யாழ்ப்பாணம்
இன்றுமுதல்
ராஜ்கிரண், ஸ்ரீ, கருணாஸ் நடித்த
கொஞ்சிப் பேசலாம் (ரீலீஸ்)
காட்சிகள்
10.30,2.30,6.30 . 9.30 (பு.நே.)
(சி-32369) (32)


# மரண அறிவித்தல்கள்

## நாகலிங்கம் செல்வகுமார்

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் செல்வகுமார் அவர்கள் 05.01.2004 அன்று கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் (அநுராதபுரம் பிரபல்ய வர்த்தகர்) - செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நடராசா - நாகேஸ்வரியின் மருமகனும் ரஞ்சினிதேவியின்(கனடா) அன்புககணவரும் ஜெனதீபன், தர்சினி, பிரதீபனின் அன்புத் தந்தையும் நந்தகுமார் (தமிழ் மகன்), பாலகுமார், மனோன்மணிதேவி, காலஞ்சென்ற சரோஜினிதேவி மற்றும் மாலினிதேவி (சுவிஸ்) ஆகியோரின் சகோதரனும் ராஜேஸ்வரியின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (10.01.2004) சனிக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

*கலைவாணி மில்லேன்,*
*கொக்குவில் கிழக்கு* (26978)(31-11-13)
தகவல்:
நா.பாலகுமார் (சகோதரர்)

## சுப்பிரமணியம் குமாரசாமி

யாழ்ப்பாணம், பெருமாள் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடம், கந்தபுராண வீதியை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் குமாரசாமி (07.01.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் கமலாம்பிகையின் அன்புக் கணவரும் ஜெயந்திமலர் (ஜேர்மனி), ஜெயக்குமார் (ஜேர்மனி), விஸ்ணுகுமார் (ஜேர்மனி), துஷ்யந்தி, செந்தில்குமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

*நாச்சிமார் கோயில் வீதி,*
*நவாலி வடக்கு,*
*மானிப்பாய்.* (26977)(31-11-13)
தகவல்:
மனைவி,
ச.கணநாதன் (மைத்துனர்),
கு.பத்மநாதன் (சகலன்).

## திருமதி செல்லத்துரை மாணிக்கம்

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் மயிலிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை மாணிக்கம் அவர்கள் நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிவராசா மற்றும் இராஜேஸ்வரி, மகேஸ்வரி, இந்திராணி, இந்திராதேவி, தேவராஜா, தவமலர்தேவி, ஆகியோரின் அன்புத் தாயாரும் கலாராணி, இராசையா, பாலசுப்பிரமணியம், வீரசிங்கம், இராசரத்தினம், சிவயோகம், சந்திரகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும், முருகையா காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு, சிதம்பரம், சின்னத்தங்கம், பசுபதி, ஆகியோரின் சகோதரியும், தம்பிப்பிள்ளையின மைத்துனியும், கந்தசாமி, சரஸ்வதி, தங்கவடிவேல், செல்வரத்தினம், செல்வராணி,பாலசுந்தரம், சின்னராசா, பகவதி ஆகியோரின் சிறியதாயாரும்,ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2004) வெள்ளிக்கிழமை அணிஞ்சிலடி, கணேஸ்வரம், அளவெட்டி வீரசிங்கம் இல்லத்தில் பி.ப. 1.00 மணியளவில் நடைபெறு பி.ப.3.00 மணிக்கு மல்லாகம் இந்து மயானத்தில தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

*சி.வீரசிங்கம்,*
*அணிஞ்சிலடி,*
*கணேஸ்வரம், அளவெட்டி.* (26979)(36-11-13)
தகவல்:
குடும்பத்தினர்.

## கணபதி இராசரட்ணம்
### (நாதஸ்வரக் கலைஞர்)

புலோலி வடமேற்கு, முருகன் கோவிலடியைச் சேர்ந்த நாதஸ்வரக் கலைஞர் க. இராசரட்ணம் நேற்று(08.01.04) இரவு காலமானார்.

இவரது இறுதிக்கிரியைகள் இன்று(09.01.2004) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் கருகம்பன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

(சி - 32688)(36-11-13)
தகவல்:
இ.சத்தியேந்திரா
(சத்தி-மகன்).

# திலங்கவை அரசவைத்திய அதிகாரி பரிசோதிக்க நீதிமன்றம் உத்தரவு

ஸ்ரீலங்கா கிரிக்கெட் மற்றும் ரெலிகொம் நிறுவனத்தின் தலைவர் திலங்க சுமதிபாலவை நேற்று கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டிருந்த போதும் அவர் அங்கு ஆஜராகவில்லை. பாதாள உலகத்தலைவர் எனக் கருதப்படும் இந்திக அமரசிங்க மட்டுமே மன்றில் ஆஜராகியிருந்தார்.

'அப்பலோ' வைத்திய சாலையில சிகிச்சை பெற்றுவரும் திலங்க சுமதிபாலவின் உடல்நிலை தொடர்பான அறிக்கையொன்று நேற்று நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் அரச சட்டத்தரணி அதை ஆட்சேபித்தார்.

இதனையடுத்து, அரச வைத்திய அதிகாரி, திலங்க சுமதிபால சிகிச்சை பெற்றுவரும் வைத்தியசாலைக்குச் சென்று அவரைப் பரிசோதித்து எதிர்வரும் திங்கட்கிழமை மன்றில் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கவேண்டும் என்று நீதிவான் உத்தரவிட்டார்

குடிவரவு, குடியகல்வு திணைக்கள சட்ட விதிகளுக்குப் புறம்பாக திலங்க சுமதிபால வேறு ஒரு நபருக்கு போலிக்கடவுச் சீட்டைப் பெற்றுக் கொடுக்க உதவினார் என்றுபுலனாய்வுத்திணைக்களம் கொழும்பு பிரதான மாஜிஸ்திரேட் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தது.

இதேவேளை -

திலங்க சுமதி பாலவைக் கைது செய்யுமாறு அரச சட்டத்தரணி விடுத்த கோரிக்கை தொடர்பான தீர்மானத்தை எதிர்வரும் திங்கட்கிழமை தெரிவிப்பதாக நீதிவான் தெரிவித்தார்.

# அமெ.படையின் ஹெலி வீழ்ந்தது; 9 பேர் பலி!

பலூஜா,9

ஈராக்கில் அமெரிக்கப்படையினரின் கறுப்புப் பருந்து (Black Hawk) ரக ஹெலி ஒன்று நேற்று வீழ்ந்து நொறுங்கியது. அந்தக் ஹெலியில் இருந்த 9 படையினரும் கொல்லப்பட்டனர்.

சதாம் ஹுசைனின் ஆதரவுப் படையினரே ஹெலியைச் சுட்டுவீழ்த்தினர் என்று ஈராக்கியர்கள் கூறுகின்றனர். ஆனால் அதை அங்குள்ள அமெரிக்கப் படையினர் உறுதிசெய்யவில்லை.

82ஆவது விமானப் படையின் ஹெலியே வீழ்ந்து நொறுங்கியது என்றும் அதில் இருந்த 9 படையினர் கொல்லப்பட்டனர் என்றும் தெரிவித்துள்ள அமெரிக்கப் படையின் பேச்சாளர், ஹெலி வீழ்ந்ததற்கான காரணம் இன்னமும் கண்டுபிடிகப்படவில்லை என்று தெரிவித்தார்.

இதற்கு முன்னர் மூன்று ஹெலிகள் சுட்டுவீழ்த்தப்பட்ட பலூஜா நகரிலேயே இந்தக் ஹெலியும் சுட்டு வீழ்த்தப்பட்டது.போருக்குப் பின்னர் இதுவரை ஐந்து ஹெலிகளை அமெரிக்கப் படைய அங்கு இழந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## நாடாளுமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றிய போது கூறியதாவது:-

மக்களைத் திசை திருப்பி தன் பக்கம் ஈர்க்கும் ஒரு தந்திரோபாயமாகவே, பிரதமர் இவ்வாறான ஒரு அறிவிப்பை விடுத்திருக்கிறார். இது தான் உண்மை.

சமாதான உடன்படிக்கையை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள வில்லை. அது இரகசியமாக மேற்கொள்ளப்பட்டது. இப்போது அதில் இருந்து சூட்சுமமாக பிரதமர் தப்பித்துக்கொள்ள முயல்கிறார். யுத்தம் நிறுத்தப்பட்டதாகப் பலர் கூறினாலும், அது நிறுத்தப்பட்டு விட்டதாக இதுவரை நாம் கருதவில்லை.

எது எப்படியாயினும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைவிடப்படுவதை நாம் வரவேற்கின்றோம் - இப்படி அவர் கூறினார். (எ)

## மலக்குழியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீட்கப்பட்டன. அத்துடன், பெண்களின் சைக்கிள் பாகங்கள் சிலவும் எடுக்கப்பட்டுள்ளன.

மீளக்குடியமர மக்கள் திரும்பிய பின்னரும், கோண்டாவில் கிழக்குப் பிரதேசம் நீண்ட காவலரண் அமைக்கப்பட்டு படையினரின் கட்டுப்பாட்டில் இருந்து வந்தது. அண்மைக்காலத்திலேயே அப்பகுதிக்கு மக்கள் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அப்பகுதிக்கு இன்று, பொலஸார் சென்று விசாரணை நடத்தவுள்ளனர் என்று கூறப்பட்டது.

(எ-9-49-86-180)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போது ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக்காலை திருகோணமலையில் இராணுவ அதிகாரிகளைச் சந்தித்துப் பேசிய பின்னர் கடற்படையினரின் படகிலேயே நோர்வேத் தூதுவர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குச் சென்றார்.

# பிரதம மந்திரி என்ன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரத் தீர்வைக் காணமுடியும் என்று நான் நம்புகிறேன்" என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பேட்டியில் கூறியிருக்கிறார்.

நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் ரணில் விக்கிரமசிங்க, தனது அரசாங்கத்தை அமைத்தபோது, பாதுகாப்பு அமைச்சை அரசிடம் வழங்கியது தனது தவறு எனவும் குறிப்பிட்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேலும் கூறியதாவது:-

"பாதுகாப்பு அமைச்சை நான் பொறுப்பேற்க வேண்டுமா என்பது மற்றொரு பிரச்சினை. பாதுகாப்பு அமைச்சை தான் திரும்பவும் பெற்றுக் கொள்ளாவிடின் சமாதான முயற்சியில் தொடர்ந்து ஈடுபடப்போவதில்லை என்று பிரதமர் தீர்மானித்திருக்கிறார். ஆனால், அது சாத்தியமானதல்ல.

அரசமைப்புச் சட்டப்படி நான் செயற்பட்டிருக்கிறேன் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஏனைய சகல அமைச்சுக்களையும் வழங்கியபோது நான் பாதுகாப்பு அமைச்சை வழங்கியிருக்கக் கூடாது. ஏனெனில், நாட்டில் பாதுகாப்பு அதிகாரத்தை வைத்திருக்கக் கூடிய ஒரேயொரு அதிகாரி ஜனாதிபதியே என்று அரசமைப்புச் சட்டம் வரையறுத்திருக்கிறது.

ஆயினும், இதை முழுமையாக அறிந்திருந்தும், பாதுகாப்பு அமைச்சை வைத்திருப்பதில் ஆர்வம் இல்லை என்பதாலேயே நான் அதைக் கொடுத்தேன். இருப்பினும், தவறான நிர்வாகப் பிரச்சினைகள் காரணமாகப் பிரச்சினைகள் எழுந்ததால் நான் பாதுகாப்பு அமைச்சை திரும்பப் பெற்றுக் கொண்டேன்.

-இவ்வாறு ஜனாதிபதி பேட்டியில் கூறியிருக்கிறார்.

**புலிகள் மீது குற்றச்சாட்டு**

இப்பேட்டியில், தமிழீழ விடுதலைப் புலிகள் ஆள்களைத் திரட்டுகின்றார்கள் எனவும் ஜனாதிபதி குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

போர்நிறுத்தக் காலத்தில் 11 ஆயிரம் கெரில்லாக்களைத் திரட்டியதன் மூலம் விடுதலைப் புலிகள் தமது இராணுவப் பலத்தை மும்மடங்காகப் பெருக்கியுள்ளனர் எனவும் அவர்களில் சிலர் சிறுவர்கள் எனவும், கட்டாய ஆளசேர்ப்பு தொடர்ந்து நடைபெறுகிறது எனவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

"புலிகளின் இராணுவப்பலப் பெருக்கத்தை நோர்வே அனுசரணையாளர்கள் நிறுத்த முடியவில்லை. புலிகள் பல இராணுவப் பயிற்சி முகாம்களைத் திறந்திருக்கின்றனர். அவற்றில் பல புதிய முகாம்கள். போர்நிறுத்த உடன்படிக்கைக்கு முரணாகவே அவர்கள் இவற்றைச் செய்கின்றனர்.

"இலங்கை இராணுவத்தினர் பலரை அவர்கள் கொன்றனர். சமாதானத்துக்காக விடுதலைப் புலிகளுடன் முயற்சி செய்ய சிறிதளவு வாய்ப்பே உள்ளது என்று நினைக்க இன்னமும் ஒரு காரணம் உள்ளது" எனவும் ஜனாதிபதி சந்திரிகா பேட்டியில் மேலும் கூறியிருக்கிறார்.

## உள்ளூராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரங்கள் கோரப்பட்ட போதிலும் தேர்தல்கள் நடத்துவதற்கு உகந்த சூழ்நிலை இல்லை என்பதால் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

ஆயினும், தற்பொழுது வடக்கு - கிழக்கில் அமைதியான சூழ்நிலை நிலவுவதால் தேர்தல்களை நடத்த முடியும் என்பது குறித்து ஆராயப்படுவதாக தேர்தல் திணைக்களப் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எடுத்து விளக்கவிருக்கிறார்.

இதன் முதல் கட்டமாக, சப்பிரகமுவ, வடமத்திய மாகாணங்களின் எம்.பிக்களையும் தொகுதி அமைப்பாளர்களையும் உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகளையும் ஜனாதிபதி இன்று சந்திப்பார்.


**Lingam master - swiss**

சுவிஸ் வாழ் தமிழர்களின் முன்னணி ஆசிரியர்
Deutsch - பெரியவர்களுக்கு
Deutsch - பாடசாலை மாணவர்களுக்கு
தொடர்பு:
062 7974164 - 079 3344733,
4665 Oftringen - swiss.
(26642)(36)

**NEW SCIENCE COLLEGE**
**PHYSICS**
2006 ஆரம்பம்
சனி, ஞாயிறு
9-10 a.m.
ஆரம்பம் :
சனி (10.01.2004)
By : R.குகன்
(26921)(72)(44-16)

**BITSMANS**
கல்வி நிறுவனம் மானிப்பாய்.
A/L 2006 கலை, வர்த்தகம்
எமது SUPER GRADE ஆசிரியகுழு.
தமிழ் : திரு. N.பாலா
அளவையியல்: திரு. R.P.சர்மா
இந்.நாகரிகம்; திரு. சுரேஸ்
புவியியல்; திரு. ஜெகன்
கிறிஸ்தவம்: திரு. வசந்தன்
நாட.அரங்கியலும்: திரு. தர்மா
வரலாறு: திரு. S.ராஜா
பொருளியல்: திரு.சண்
கணக்கீடு: திரு.தவா,N.ராஜன்
வணிகக்கல்வி: திரு.நந்தீஸ்
பொது ஆங்கிலம்: திருசுதர்ஸன்
ஆரம்பம் 10.01.2004 சனி 3.00 p.m.
(26943)

**NEW SCIENCE COLLEGE**
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
இணைந்த கணிதம்
A/L 2006
நேர்கோட்டியக்கம்.
Sat, Sun - 11.00 - 1.00
A/L 2005
ஒருதள விசைகள்
கணித தொகுத்தறிவு முறை.
Sat, Sun - 7.00 - 9.00 (ப.நே.)
By: P.செந்தில்நாதன் (B.Sc.)
(26930)

**விக்கி (B.Com.)**
பிரத்தியேக வகுப்புகள்
(வீட்டில் வந்தும் கற்பிக்கப்படும்)
★ A/L 2006 வர்த்தக வகுப்புகள்
★ O/L வர்த்தகமும் நிதியும்
★ 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில்
தொடர்புகளுக்கு:
ஞானவைரவர் வீதி,
உரும்பிராய் கிழக்கு.
T.P.: 077 6218306
(26643)

**கணிதம்**
**O/L DAY CLASS**
பிரிவு I
★ ஆரம்ப அறிவில் இருந்து கற்பிக்கப் படுகின்றது.
★ வாரம் 10 மணித்தியால வகுப்புகள்.
ஆரம்பம்: 10.01.2004 - 8.00 மணி (a.m.)
By: A.கரன்
மற்றும் அனைத்துப் பாடங்களும்.
மதுபாரத் இந்து மகளிர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். நிர்வாகி
(26864)

**CHEMISTRY**
**A/L - 2006**
NEW SCIENCE CENTRE - யாழ்நகர்
NEW SCIENCE ACADEMY - நெல்லியடி
CHEMISTRY CENTRE - நல்லூர்
PERSONAL CENTRE - சுண்டுக்குளி
ஈசன் - கோண்டாவில்
ஞானோதயா - சாவகச்சேரி
BY :- அன்பழகன்
(சி-32631)

**சிங்களம்**
எழுத, பேச, வாசிக்க...
E.S. பியதாசா
(Sinhala Trained, S.L.T.S class one)
ஆரம்பம்:- 2004.01.10 சனி
பிரிவு : I Sat., Sun. 3 p.m.
பாடசாலை மாணவர்களுக்கு
பிரிவு : II Sat., Sun. 4 p.m.
அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு
தரம் 4 முதல், O/L, A/L கலைப்பிரிவு வரை வகுப்புகள் நடைபெறுகின்றது.
மதுபாரத்
இந்துமகளிர் ஒழுங்கை, யாழ். - நிர்வாகி.
(26867)

**நியூ றோயல் அக்கடமி**
சங்கத்தானை.
A/L 2006
கலை, வர்த்தகம்
ஆரம்பம்:- ஜனவரி 10 சனி 8.30 a.m.
(26903)

**G.A.Q., B.A.Part I,II**
யாழ்., பேராதனை (பல்கலைக்கழகம்)
A/L - 2006 கலை.வர்த்தகம்.
ஆசிரியர் போட்டிப்பரீட்சை
புதிய பிரிவுகள்
சனி,ஞாயிறு - 10 - 12 மணி (S.L.T)
சனி,ஞாயிறு - 12 - 2 மணி (S.L.T)
புதிய அனைத்து விரிவுரைகளும்
ஆரம்பம்:
10.01.2004 சனி - காலை 9 மணி
நியூட்டன்
ஆரியகுளம் சந்தி அருகில்
யாழ்நகர்.
(26935)

**மூன்றாவது புதிய பிரிவு**
இக்கல்வியாண்டின் ஜனவரி மாதத்திற்கான மூன்றாவது பிரிவு ஏற்கனவே அறிவித்ததன் பிரகாரம் 14.01.2004 ஆம் திகதி பகல் 10.00 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது.
மாணவர்களே இவ் இறுதிச் சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி உங்கள் அனுமதிக்கு முந்திக் கொள்ளுங்கள்.
இயக்குநர்:
IIS, யாழ்ப்பாணம்.
(சி-32653)

சைவத்தமிழ் மக்களே!
**இந்து சாதனம்**
தவறாமல் உடனே வாங் வாசியுங்கள்
(சி-32674)

**மெசின் மைண்டர் உடன் தேவை**
டேவிசன் A/3 ஓவ்Fசெட் மெசினில் வேலை செய்வதற்கு தேர்ச்சி உடையவர்கள் உடன் நேரில் வரவும்.
தொடர்பு :
துயா அச்சகம்
கொம்பியூட்டர் ஓவ்Fசெட் பிறிண்டேர்ஸ்
இல. 138, நாவலர் வீதி,
(நாவலர் பாடசாலை முன்பாக)
யாழ்ப்பாணம்.
(சி-32687)

**உடனே தேவை**
ஓவ்செற் இயந்திர இயக்குநர், பக்கவடிவமைப்பாளர், ரைப் செற்றர், அச்சக நிர்வாக உதவியாளர்.
விண்ணப்பிக்குக:
வி.இ.2141, மே.பா. உதயன்.
(சி-32675)

**தென்னிந்தியாவில் இருந்து**
மூன்றாவது முறையாக யாழ்ப்பாணம் என்னும் புண்ணிய பூமிக்கு வருகைதந்துள்ள பரம்பரை சோதிடக் கலையில் புகழ்பெற்ற சிவபால ஜோதிடர்

**ராஜகுருசாமி** அவர்கள்
புத்தாண்டை முன்னிட்டு 2004 ஆம் ஆண்டு புதுப் பலன்களை அறிவதற்கு மீண்டும் யாழ். மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க வருகை தந்துள்ளார்.
பார்க்கும் நேரம்: காலை 9.00 - 6.00 மணி
கைரேகை மட்டும் 9.00 - 1.00 மணிவரை
★ கைரேகை★ ஜாதகம் ★ எண்கணிதம்★ பெயர்ராசி,
★ திருமணப்பொருத்தம்,
இவற்றில் பல வருட அனுபவமும் புகழும் பெற்றவர்.
ராஜகுருசாமி T.P. 5867
மிலன்ஸ் மல்ரி கொம்பிளக்ஸ்
60/1 (112), TEMPLE ROAD [Near ICRC], JAFFNA.
(14) (26964)





இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.01.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.